2022 අගෝස්තු 15
2022 ஆகஸ்ட் 15
15 August 2022

NAOSL

# 2018 අංක 19 දරණ ජාතික විගණන පනතේ 14 වන වගන්තිය ප්‍රකාරව පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරනු ලබන විගණකාධිපති ත්‍රෛවාර්ෂික වාර්තාව

# 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 14 ஆவது பிரிவின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மூன்றாண்டு அறிக்கை

# Triennial Report of the Auditor General presented in parliament in terms of Section 14 of the National Audit Act, No. 19 of 2018

එකොළොස් වන කාණ්ඩය - 01
பதினோராவது தொகுதி - 01
Eleventh Volume - 01

මුදල් අමාත්‍යාංශය, මුදල් අමාත්‍යාංශය යටතේ වන දෙපාර්තමේන්තු හා විශේෂ වියදම් ඒකක

நிதி அமைச்சு, நிதி அமைச்சின் கீழான திணைக்களங்கள் மற்றும் விசேட செலவின அலகுகள்

Ministry of Finance, Departments & Special Expenditure Units under the Ministry of Finance

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE



# உள்ளடக்கம்


| தொடர் இலக்கம் | தலைப்பு | அமைச்சின் பெயர் | பக்க இலக்கம் |
|---|---|---|---|
| 1. | 01 | சனாதிபதி அலுவலகம் | 5 - 23 |
| 2. | 02 | பிரதம அமைச்சர் அலுவலகம் | 24 - 25 |
| 3. | 24 | தேசிய கொள்வனவு ஆணைக்குழு | 26 - 42 |
| 4. | 102 | நிதி அமைச்சு | 43 - 49 |
| 5. | 413 | நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில்முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு | 50 - 51 |
| 6. | 237 | தேசிய திட்டமிடல் திணைக்களம் | 52 - 60 |
| 7. | 238 | அரசாங்க நிதிக் கொள்கைத் திணைக்களம் | 61 - 65 |
| 8. | 239 | வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் | 66 - 81 |
| 9. | 240 | தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் | 82 - 87 |
| 10. | 241 | பொது முயற்சிகள் திணைக்களம் | 88 - 92 |
| 11. | 242 | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் | 93 - 95 |
| 12. | 243 | அபிவிருத்தி நிதித் திணைக்களம் | 96 - 99 |
| 13. | 244 | வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைத் திணைக்களம் | 100 - 101 |
| 14. | 245 | அரச நிதித் திணைக்களம் | 102 - 104 |
| 15. | 249 | திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் | 105 - 116 |
| 16. | 250 | அரச கணக்குகள் திணைக்களம் | 117 - 133 |
| 17. | | அரசின் நிதிக்கூற்றுக்கள் | 134 - 160 |
| 18. | 251 | மதிப்பீட்டுத் திணைக்களம் | 161 - 164 |
| 19. | 252 | தொகை மதிப்பு மற்றும் புள்ளிவபரவியல் திணைக்களம் | 165 - 169 |

| | | | |
|---|---|---|---|
| 20. | 280 | கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களம் | 170 - 174 |
| 21. | 323 | சட்ட அலுவல்கள் திணைக்களம் | 175 - 177 |
| 22. | 324 | முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம | 178 - 180 |
| 23. | 329 | தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களம் | 181 - 185 |
| 24. | 333 | கொம்ப்ரோலர் நாயகத்தின் அலுவலகம் | 186 - 187 |
| 25. | | பின்னிணைப்பு | 188 - 199 |

**மூவாண்டு அறிக்கை 2018 – 2020**

## 1. அறிமுகம்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அறிக்கையின் 14 அம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் ஒவ்வொரு மூன்று ஆண்டு காலப்பகுதி நிறைவடைந்த பின்னர் ஒன்பது மாத காலப்பகுதியினுள் ஒவ்வொரு கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் நிறுவனத்தினதும் தர அறிக்கையொன்று பாராளுமன்றத்தில் சமர்பிக்க வேண்டியதாக உள்ளது. இந்த மூவாண்டு அறிக்கையில் நிதி அமைச்சு மறறும் அதன் கீழுள்ள திணைக்களங்களும், விசேட செலவின அலகுகள் மூன்றிற்குரிய கணக்காய்வு அவதானிப்புகளும் உள்ளடங்குகின்றன. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஒவ்வொரு நிறுவனங்களின் கீழும் இனங்காணப்பட்ட பிரதான குறைபாடுகள், அதற்காக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் மற்றும் உரிய நிறுவனத்தினால் அந்த குறைபாடுகளுக்கு உரியதாக எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகளும் இந்த அறிக்கையிக் திகதியளவில் அந்த அவதானிப்புகள் தொடர்பில் நிலவிய நிலைமைகளும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 2. பொதுவான தகவல்கள்

### 2.1 வருடாந்த ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் மற்றும் அதன் பயன்பாடு

இந்த அறிக்கையில் அவதானிப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ள 23 நிறுவனங்களிடமிருந்து 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் 22 நிறுவனங்கள் செயற்பாட்டவாறு காணப்பட்டன. பாராளமன்றத்தினால் 22 நிறுவனங்களுக்காக முறையே ரூபா 2,171,053 மில்லியன் மற்றும் ரூபா 2,342,588 மில்லியன் எனுமாறு நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த நிதியேற்பாடு 2018 ஆம் ஆண்டுக்கு ஒப்பாக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 171,535 மில்லியனால் அல்லது 7.9 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம், 2020 ஆம் ஆண்டின் போது இந்த நிறுவனங்களின் எண்ணிக்கையில் மேலுமொரு இராஜாங்க அமைச்சொன்று சேர்ந்திருந்திருந்தது. அதன் பிரகாரம், 2020 ஆம் ஆண்டுக்காக ரூபா 2,253,357 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாடு பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அது 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 89,231 மில்லியனால் இல்லது 3.8 சதவீத நிதியேற்பாட்டிலான வீழ்ச்சியாகும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள 22 கணக்காய்வு நிறுவனங்களினால் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 2,141,445 மில்லியன் மற்றும் ரூபா 2,080,233 மில்லியனான நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் போது கடந்த வருடத்தின் பயன்பாடு மற்றும் ஒப்பிடும் போது ரூபா 61,272 மில்லியன் அல்லது 2.9 சதவீதத்தினால் பயன்பாடு குறைக்கப்பட்டிருந்தது. எனினும், 2020 ஆம் ஆண்டின் போதான பயன்பாடு கடந்த வருடத்தின் பயன்பாடு 3.7 சதவீதத்தினால் அல்லது ரூபா 77,148 மில்லியனால் அதிகரித்து ரூபா 2,157,381 மில்லியனான நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. பின்னிணைப்பு 01

## 2.2 மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளபடியான வருமானம்

அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள 23 நிறுவனங்களில் 05 நிறுவனங்களின் தலைவர்கள் வருமானக கணக்கீட்டு உத்தியோகத்தராக செயற்பட்டிருந்தார். வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் 23 வருமானக் குறியீடுகளின் 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 129,004 மில்லியன், ரூபா 203,000 மில்லியனால் மற்றும் ரூபா 107,700 மில்லியன் எனுமாறு வருமான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதன் பிரகாரம், 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டின் மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 73,996 மில்லியன் அல்லது 57 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. எனினும், 2020 ஆம் ஆண்டுக்கான வருமான மதிப்பீடு 2019 ஆம் ஆண்டின் வருமான மதிப்பீட்டை விட ரூபா 95,300 மில்லியனால் 46 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. 2018 ஆம் ஆண்டின் போது மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 137,775 மில்லியன் அல்லது 105 வீதத்தினை விஞ்சி ரூபா 264,779 மில்லியனான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட வருமானத்தின் ரூபா 104,114 மில்லியன் அல்லது 51 சதவீதத்தினால் குறைத்து ரூபா 98,886 மில்லியனான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டின் போது மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 107,700 மில்லியனாக காணப்பட்ட போதிலும, அந்த மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 2,557 மில்லியன் அல்லது 2.3 சதவீதத்தினால் விஞ்சி ரூபா 110,257 மில்லியனான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. பின்னிணைப்பு 2

## 2.2 கட்டுநிதி மீதியை தீர்ப்பனவு செய்தல்

நிதிப்பிரமாணம் 373 இன் பிரகாரம், ஒவ்வொரு கணக்காண்டிலும் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான கட்டுநிதி மீதி அத்திகதியே திறைசேரிக்கு தீர்க்கப்பட வேண்டிய போதிலும், திறைசேரி புத்தகங்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான 22 கணக்காய்வு நிறுவனங்களுக்கு உரியதாக ரூபா 28,107,617 மில்லியன் தீர்ப்பனவு செய்யப்படாத மீதியொன்று நிலவியது. அந்த மீதி 2019 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 8,584,402 மில்லியனாக காணப்பட்டதுடன், 2020 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அது ரூபா 50,363,305 மில்லியனாக காணப்பட்டது. பின்னிணைப்பு 3

## 2.3 வைப்புக் கணக்கு மீதிகள்

திரண்ட நிதியத்திற்கு உரித்தற்ற திறைசேரியின் பிரதான பேரேட்டுக் கணக்கின் கீழ் நிலவிய வைப்புக் கணக்குகளின மீதிகள் எதிர்வரும் வருடங்களில் வேறு தரப்பினருக்கு செலுத்த வேண்டிய பணத்தை கொண்டிருந்தது. 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் மேற்குறித்த 21 நிறுவனங்களில் 10 நிறுவனங்களுக்கு உரிய ரூபா 6,847,322,133 ஆன் மீதியொன்று காணப்பட்டதுடன், 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் அந்த 22 நிறுவனங்களால் 12 நிறுவனங்களுக்குரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,357,979,414 ஆக காணப்பட்டது. கடந்த வருடத்திற்கு ஒப்பாக 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் வைப்பு மீதியின் கூட்டுத்தொகை ரூபா 510,657,281 அல்லது 7.46 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. எனினும், 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் 15 நிறுவனங்களின் வைப்பு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,084,240,644 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம், 2019 ஆம் ஆண்டுக்கு ஒப்பாக 2020 ஆம் ஆண்டின் போது வைப்பு மீதிகளின்

கூட்டுத்தொகை ரூபா 4,273,738,770 அல்லது 58.08 சதவீதத்தினால் வைப்பு மீதிகளின் பெறுமதி குறைவடைந்திருந்தது. பின்னிணைப்பு 4

## 2.4 முற்பணக் கணக்கு மீதிகள்

வருடாந்த ஒதுக்கீட்டு சட்டத்தின் மூன்றாவது பட்டோலையில் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசின் பணிகளுக்காக முற்பணக் கணக்கு எல்லைகள் விதிக்கப்பட்டிருந்ததுடன், மேற்குறித்த 22 கணக்காய்வு நிறுவனங்களினால் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணப் பணிகளுக்காக விதிக்கப்பட்டிருந்த எல்லைகளினுள் முற்பணக் கணக்குகள் பேணப்பட்டிருந்த அந்த முற்பணக் கணக்குகளின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 639,320,943 ஆன கடன் பட்டோர் மீதியொன்று நிலவியதுடன், அது 2019 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 2,191,615 குறைவடைந்து ரூபா 637,129,328 மில்லியன் ஆகியிருந்தது. 2020 ஆம் ஆண்டின் போது இணைந்த இராஜாங்க அமைச்சும் உள்ளடங்கலாக 23 கணக்காய்வு நிறுவனங்களின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் முற்பணக் கடன் பட்டோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 594,119,225 மில்லியனாகியிருந்தது. பின்னிணைப்பு 05

## 2.5 நிதியல்லாத சொத்துக்கள்

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 8.2 ஆம் பந்தியின் பிரகாரம் அனைத்து கணக்காய்வு நிறுவனங்களினாலும் தமது பொறுப்பிலுள்ள சொத்துக்களை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க வேண்டிய போதிலும், அந்த அனைத்து சொத்துக்களும் 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. இந்த அறிக்கைக்குரிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 22 நிறுவனங்களில் 18 நிறுவனங்களுக்குரிய ரூபா 61,660 மில்லியன் கூட்டுத்தொகையான சொத்துக்கள் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 22 நிறுவனங்களின் ரூபா 101,970 மில்லியனான சொத்துக்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன், அது 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 65 சதவீதமாக அதிகரித்திருந்தது. 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் தேசிய பெறுகைகள் ஆணைக்குழு நீங்கலாக ஏனைய 22 நிறுவனங்களினால் ரூபா 103,304 மில்லியனான நிதியல்லாத சொத்துக்கள் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருந்தது. இதனை கடந்த வருடத்துடடன் ஒப்பிடும் போது 1.3 சதவீதம் அதிகரித்திருந்தது. பின்னிணைப்பு 6

## 2.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

அரசின் அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களினால் 2018 ஆம் ஆண்டுக்கு முன்னர் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 இன் பிரகாரம், வருடாந்த ஒதுக்கீட்டு கணக்குகள் மற்றும் வருமானக் கணக்குகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. நிதிப்பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் நிறைவேறும் வகையில் 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் மூலம் அரசின் அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களுக்காக 2018 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்குமாறும், அந்த நிதிக்கூற்றுக்களின் தொகுதிக்காக மாதிரி அறிமுகப்படுத்தியிருந்தது. நிதிக்கூற்றுக்கள் அரசின் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு

இணங்க சமர்ப்பிக்குமாறும் குறிப்பிடட்டிருந்தது. அதன் பிரகாரம், இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எம்மால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வு அபிப்பிராயங்கள் வெளியிடப்பட்ட. அதன் பிரகாரம் முனைப்பழியற்ற அபிப்பிராயம், முனைப்பழியுள்ள அபிப்பிராயம், மறுப்பு அபிப்பிராயம் மற்றும் பாதகமான அபிப்பிராயம் எனுமாறு பொருத்தமான கணக்காய்வு அபிப்பிராயங்கள் வெளியிடப்பட்டன.

கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொட்பில் 2018 ஆம் ஆண்டிற்குரிய 22 கணக்காய்வு நிறுவனங்களின் 13 நிறுவனங்களுக்கு முனைப்பழியற்ற கணக்காய்வு அபிப்பிராயங்கள் வெளியிடப்பட்டிருந்ததுடன், எஞ்சிய 9 நிறுவனங்களுக்காக முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயங்கள் வெளியிடப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் போது 22 நிறுவனங்களில் 16 நிறுவனங்களுக்கு முனைப்பழியற்ற கணக்காய்வு அபிப்பிராயங்கள் வெளியிடப்பட்டிருந்ததுடன், எஞ்சிய 6 நிறுவனங்களுக்காக முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயமொன்று வெளியிடப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டின் போது அறிக்கைக்குரிய 23 கணக்காய்வு நிறுவனங்களின் 18 நிறுவனங்களுக்குரிய முனைப்பழியற்ற கணக்காய்வு அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருந்ததுடன், எஞ்சிய 5 நிறுவனங்களுக்காக முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருந்தது. அரச கணக்குகள் திணைக்களத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தராக கருத்திற்கொள்ளப்படும் அரசின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் மீளாய்வாண்டுக்குரிய மூன்று வருடங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயமொன்று வெளியிடப்பட்டது. பின்னிணைப்பு 07

**3. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை உள்ளடக்கியதாக ஒவ்வொரு கணக்காய்வு நிறுவனத்திற்குமான அறிக்கை பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகின்றது.**

## 3.1 தலைப்பு 1 – சனாதிபதி அலுவலகம்

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** | **நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்** | **அது தொடர்பான தற்போதைய நிலைமை** |
|---|---|---|---|---|
| (அ) | மாவட்டத்திற்கு கிராம சக்தி மக்கள் தொழில் முயற்சிகளுக்காக வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த 15 செயற்திட்டங்களில் 06 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் இறுதியளவில் கைவிடப்பட்டிருந்தது. செயற்படு நிலையில் காணப்பட்ட கைத்தொழில்களின் இலக்கு மற்றும் பௌதீக நிலைமைகள் பின்வருமாறு இருந்தது. | | | |
| | (i) கொத்மலை பிரதேச செயலகப் பிரிவில் பூண்டுலோயா தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் வாழ்ந்து | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை | இந்த செயற்திட்டத்தை வெற்றிகரமாக அமுல்படுத்தப்படுவதுடன் அதற்காக | 2022 மார்ச் 25 வரையில் சங்கத்தின் அபிவிருத்திக்காக நலனாளிகளின் பங்களிப்பை பெற்றுக் |

| | | | | |
|---|---|---|---|---|
| | வருகின்ற ஆடைத் தொழிற்சாலைகளில் ஈடுபட்டிருக்கின்ற 35 நலனாளிகளுக்காக ரூபா 1,559,687 செலவில் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. கிராம சக்தி விசேட செயற்திட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் நலனாளிகளுக்கு பெறக் கூடியதாக இருந்த வருமானத்தில் எந்தவொரு பங்களிப்பும் உரிய சங்கங்களின் அபிவிருத்திக்காக ஏனைய செயற்திட்டங்களிலிருந்து வழங்கப்பட்டிருந்த போதிலும் இந்த செயற்திட்டத்தின் மூலம் கிடைக்கின்ற வருமானத்தில் சங்கத்தின் அபிவிருத்திக்காக நலனாளிகளின் பங்களிப்பை பெற்றுக் கொள்வதற்கான திட்ட முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எடுத்தல் வேண்டும். | நலனாளிகளின் பங்களிப்பிற்கான தவணைப் பணத்தை அறவிடுவது போதியளவான பிரகாரம் மேற்கொள்ளப்படாதிருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தது. கொத்மலை பிரதேச செயலகம் இதற்காக நடவடிக்கை எடுத்ததாக அறிக்கையிடப்பட்டிருந்தமையால் சங்கத்தின் அபிவிருத்திக்காக எதிர்காலத்தில் ஈடுபடுத்துவதற்கு முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | கொள்வதற்கான திட்ட முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) ஹங்குரன்கெத்த பிரதேச செயலகப் பிரிவில் பொறமடுல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவில் சணல் உற்பத்தி மேம்படுத்தலின் மூலம் பிரிவில் வாழ்ந்து வருகின்ற மக்களின் வருமான மட்டத்தை கட்டியெழுப்புவதன் | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும | சணல் செயற்திட்டத்தை அறிமுகப்படுத்தும் போது பாரம்பரிய முறைமையை அகற்றி செயற்திட்டத்திற்காக அறிமுகப்படுத்தப்பட்ட இயந்திரத்தை ஈடுபடுத்துவதனால் | செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு இயந்திரம் ஈடுபடுத்தப்பட்டு வருமானம் உழைக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மூலம் அவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தும் நோக்காகக் கொண்டு செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ரூபா 2,589,602 செலவினமொன்று செய்யப்பட்டிருந்தது. 2019 மார்ச் 12 ஆந் திகதி ரூபா 120,000 தொகை செலவில் சணல் நார் உற்பத்தி இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2019 ஒக்தோபர் மாதத்திலேயே சணல் கன்றுகள் நடப்பட்டிருந்தன. தற்போது அருகில் உள்ள பிரதேசங்களில் உள்ள சணல் நார் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற நபர்களில் அநேகமானோர் இயந்திரம் மூலம் சணல் நார் உற்பத்தி செய்யும் போது மேலதிக செலவினமொன்றை செலுத்துவதற்கு ஏற்பட்டமையினால் பாரம்பரிய முறையில் உற்பத்தி 2019 மார்ச் முதல் திசெம்பர் வரை மேற்கொள்ளப்பட்டமைய | | ஏதாவது பின்னடைவு ஏற்பட்டபோதிலும் இதுவரையிலும் 45 தொழில் வாய்ப்பு சந்தர்ப்பங்கள் உருவாகி இருந்தமையும் அறிக்கையிடப்பட்டுள்ளது. | |

| | | | | |
|---|---|---|---|---|
| | ால் இயந்திரத்தின் மூலம் ரூபா 2,505 வருமானம் மாத்திரம் உழைக்கப்பட்டிருந்தது. | | | |
| (ஆ) | 2030 ஆம் ஆண்டளவில் இலங்கையில் நிரந்தரமாக வறுமையை பூரணமாக ஒழிக்கும் நிலைபேறான அபிவிருத்தி நோக்காகக் கொண்டு கிராம சக்தி மக்கள் தொழில்முயற்சியின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவில் கிராம சக்தி மக்கள் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. நுவரெலியா மாவட்டத்தில் 05 பிரதேச செயலகப் பிரிவுகளில் முதல் கட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டில் 15 சங்கங்களும், அதில் இரண்டாவது கட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டில் 45 சங்கங்களும் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன | | | |
| | (i) 2018 ஆம் ஆண்டில் ஒரு சங்கத்திற்கு ரூபா 500,000 வீதம் 07 சங்கங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 3,500,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாட்டில் கணக்காய்வு திகதியான 2020 சனவரி 16 ஆந் திகதி வரையில் எந்தவொரு தொகையும் வாழ்வாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக | வழங்கப்பட்ட நிதியேற்பாடு எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு பயன்படுத்தப்படல் வேண்டும். | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக தேவையின் அடிப்படையில் சலுகைக் கடன் விகிதத்தின் கீழ் கடன் வழங்குவதற்கு இந்த பணம் ஒதுக்கப்பட்ட போதும் இதுவரை எந்தவொருவரும் கடனுக்காக விண்ணப்பித்திருக்கவில்லை. இந்தப் பணம் சங்கங்களின் மூலம் அரசாங்க வங்கியொன்றில் | 2022 மார்ச் 25 வரையில் செயற்திட்டத்தின் நிதியேற்பாடு வாழ்வாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக போதியளவு சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | வைப்புச் செய்யப்பட்டிருந்தது. | |
| | (ii) இயலுமை அபிவிருத்தி நிதியத்திற்காக (இயலளவு அபிவிருத்தி) ரூபா 300,000 தொகையொன்று சங்கமொன்றுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது டன் 02 கிராம சக்தி சங்கங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 600,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாட்டில் எந்தவொரு தொகையும் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. 07 சங்கங்களின் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்ட மொத்த நிதியேற்பாட்டில் 01 சதவீதம் முதல் 22 சதவீதத்திற்கு இடையிலாக காணப்பட்டமையால் நிதியேற்பாட்டின் பயன்பாடு நலிவான மட்டத்தில் காணப்பட்டது. | எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இயலளவு அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணமும் அந்தந்த சங்கங்களின் காலரீதியான தேவைகள் உருவாகியதன் பின்னர் பயன்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | 2022 மார்ச் 25 வரையில் இயலளவு அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணம் அந்தந்த சங்கங்களின் காலரீதியான தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டமையை உறுதிப்படுத்தவதற்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (இ) | கொழும்பு கோட்டை சனாதிபதி மாளிகைக்குரிய மாளிகையின் பொறுப்பாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் கோட்டை சனாதிபதி மாளிகையின் பொருட் | சொத்துக்கள் முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.. | 04 வகைகளுக்கு உரித்தான 04 பொருள் விடயங்கள் முன்னாள் சனாதிபதி உத்தியோகபூர்வ இல்லத்திற்கு ஒப்படைக்கப்பட்டதாக எழுத்து மூலம் | 2022 மார்ச் 25 வரையில் பொருட் பதிவேட்டுப் புத்தகங்களில் குறிப்பிட்ட சீராக்கங்கள் செய்யப்படுவதற்கான மற்றும் குறிப்பிட்ட |

| | | | | |
|---|---|---|---|---|
| | பதிவேட்டு பொருட்களில் 12 விடயங்களில் 24 அலகுகள் மஹகமசேகர மாவத்தை, சனாதிபதி உத்தியோகபூர்வ இல்லத்தின் தேவைக்காக விநியோகிக்கப்பட்டிருந்தது. இந்த பொருட்கள் மஹகமசேகர மாவத்தை, சனாதிபதி உத்தியோகபூர்வ இல்லத்திற்கு விநியோகிக்கும்போது விநியோகித்தல் கட்டளை மூலம் கொழும்பு கோட்டை சனாதிபதி மாளிகைக்கு உரிய பொருட் பதிவேட்டு புத்தகங்களில் நீக்கப்பட்டு பெறுவனவு கட்டளை மூலம் மஹகமசேகர மாவத்தை, சனாதிபதி உத்தியோகபூர்வ இல்லத்தின் பொருட் பதிவேட்டு புத்தகங்களில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் செயற்பட்டமைக்கான எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் கோட்டை மாளிகையின் பொருட் பதிவேட்டு புத்தகங்களில் இது தொடர்பான சீராக்கங்களேனும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஏனைய பொருட்கள் பெறப்பட்டமையை உறுதி செய்வதற்காக முன்னாள் சனாதிபதியின் தனிப்பட்ட செயலாளருக்கு குறிப்பிடப்பட்டு குறித்த உறுதிப்படுத்தல்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உறுதிப்படுத்தல்களைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்துவதற்கான போதியளவு தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஈ) | நிதிப்பிரமாணம் 753(2) இன் பிரகாரம் பொது 219 பெறுவனவு கட்டளை மூலம் பொருட் பதிவேட்டு புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டு களஞ்சியத்திற்கு சமர்ப்பிக்கப்பட | சொத்துக்கள் முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். | முன்னைய ஆண்டுகளில் பெறுவனவுக் கட்டளை விநியோகிக்காமை தொடர்பாக அது தொடர்பான பொறுப்பு வாய்ந்த தரப்பினரை | 2022 மார்ச் 25 வரையில் ஆரம்ப விசாரணை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கான தகவல்கள் கணக்காய்விற்குச் |

| | | | | |
|---|---|---|---|---|
| | வேண்டியிருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டு முதல் 2020 வரை அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | | அழைத்து ஆரம்ப விசாரணை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் தயார் செய்யப்பட்டுள்ளது. | சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (உ) | முன்னாள் இருந்த மாளிகைப் பொறுப்பாளரால் 2019 நவம்பர் 18 ஆந் திகதி சனாதிபதி மாளிகையின் பொருட்களை கையேற்கும் போது சனாதிபதி சிரேஷ்ட உதவிச் செயலாளர் (உள்ளக நிர்வாகம்) அவரின் தொலைபேசி அறிவித்தலின் பிரகாரம் புதிய கட்டிடத்தில் பொருட் பதிவேடுகளில் 35 வகையான பொருட்களில் 61 அலகுகள் பற்றாக்குறையாக காணப்படுகின்றமை வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். | பற்றாக்குறையான பொருட்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் ஆரம்ப விசாரணைகள் மேற்கொண்டு வெளிப்படுத்தப்படுகின்ற விடயங்களின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | 2022 மார்ச் 25 வரையில் ஆரம்ப விசாரணை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஊ) | அலுவலகத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட தேசிய பொருளாதார சபை அலுவலகம், அதில் உள்ள அலுவலக உபகரணங்கள் மற்றும் மரத் தளபாடங்களுடன் இளைஞர் விவகார அமைச்சிற்கு முன்னாள் இருந்த நிர்வாக உத்தியோகத்தரை உள்ளடக்கி குழுவொன்றினால் உரிய தரப்பினருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. ஆரம்ப உடன்படிக்கையில் உள்ளடக்கிய சந்தர்ப்பத்தின் போது சனாதிபதி | சொத்துக்கள் முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். | “தேசிய பொருளாதார சபையின்” அலுவலக வளவில் மற்றும் அதன் அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடப் பொருட்கள் 2019.12.17 ஆந் திகதி முதல் அமுல்படும் வகையில் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சிற்கு | கொடுப்பனவு செய்யப்பட்ட வைப்புத் தொகை திறைசேரிக்கு தீர்க்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்துவதற்குப் போதியளவு தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | அலுவலகத்தினால் கம்பனிக்கு செலுத்தப்பட்ட ரூபா 16,868,576 தொகையான வைப்புப் பணம் தற்போது உடன்படிக்கைக் காலம் முடிவடைந்திருந்தமையால் மீண்டும் சனாதிபதி அலுவலகத்திற்கு அறவிடப்பட்டிருக்கவில்லை. | | கையளிக்கப்பட்டிருந்த மைக்கான எழுத்து மூல சான்றுகளும் இணைக்கப்பட்டுள்ள து. இலங்கை தேசிய பொருளாதார சபையை தாபிக்கும் வகையில் சனாதிபதி அலுவலகத்துடன் Overseas Reality (Ceylon) Plc உடன் ஆரம்ப உடன்படிக்கையில் உள்ளடக்குகின்ற சந்தர்ப்பத்தின் போது சனாதிபதி அலுவலகத்தினால் கம்பனிக்கு செலுத்தப்பட்ட வைப்பு பணம் தற்போது உடன்படிக்கை காலம் முடிவடைந்திருந்தமை யினால் மீண்டும் திறைசேரிக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது . | |
| (எ) | சனாதிபதி செயலாளரின் பேரில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் | சொத்துக்கள் முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். | 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வாகன மெய்மையாய்வின் மூலம் 14 | பௌதீக இருப்பு / உரித்து உறுதிப்படுத்தப்படாத 38 வாகனங்களில் பதிவு செய்வதற்கான |

| | | | | |
|---|---|---|---|---|
| | பௌதீக இருப்பு / உரித்து உறுதிப்படுத்தப்படாத 50 வாகனங்கள் தொடர்பாக பரீட்சித்து சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் சனாதிபதி செயலகம் மற்றும் சனாதிபதி மாளிகை மற்றும் சனாதிபதி பாதுகாப்பு பிரிவுகளின் முகவரியின் கீழ், ஏனைய நபர்களின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த வாகனங்கள் 53 ஆக இருந்ததுடன் அந்த வாகனங்களை சனாதிபதி செயலகம் மற்றும் அதனுடன் அண்மித்த பிரிவுகளின் முகவரியின் கீழ் பதிவு செய்வதற்கோ அல்லது அந்த முகவரியை பயன்படுத்துவதற்கான காரணமோ கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | வாகனங்கள் பௌதீக ரீதியில் காணப்படுகின்ற இடங்கள் தொடர்பான தகவல்களை கண்டறிவதற்கு முடியுமாக இருந்ததுடன் தற்போது அந்த வாகனங்களின் பதிவு உரித்தை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அவ்வாறே தகவல்களை கண்டறிவதற்கு முடியாத 38 வாகனங்கள் தொடர்பாக சரியாக தகவல்கள் இலங்கை பொலிசிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | உரிமை தொடர்பான தகவல்கள் 2022 மார்ச் 25 வரையில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஏ) | சனாதிபதி செயலகத்திற்குரிய 69 வாகனங்கள் 2016 ஆம் ஆண்டின்போது இராணுவத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்களுக்கிடையே 06 வாகனங்கள் தொடர்ந்தும் சனாதிபதி செயலாளரின் பெயரில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு | சொத்துக்கள் முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். | சனாதிபதி செயலகத்தினால் இராணுவத்திற்கு வழங்கப்பட்டிருந்த வாகனங்களுக்கிடையே இதுவரை கையேற்கப்படாத 06 வாகனங்களை கையேற்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இராணுவத்திற்கு | 2022 மார்ச் 25 வரையில் குறித்த கையேற்றல்கள் மேற்கொள்ளப்பட்டதா என்பதை உறுதிப்படுத்துவதற்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே சனாதிபதி செயலகத்திற்குரிய சனாதிபதி செயலாளரின் பெயரில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த 47 வாகனங்கள் பல்வேறு நபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை அந்த வாகனங்களை மீண்டும் கையேற்பதற்கோ அல்லது அதற்குரிய முறையான மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | அறிவிக்கப்பட்டுள்ளது . ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களுக்கிடையே 27 வாகனங்கள் தொடர்பான தகவல்கள் தற்போது பெறப்பட்டு உரிய கையளித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. ஏனைய 20 வாகனங்கள் தொடர்பான சரியான தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. அவ்வாறே பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் உரிய கையளித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஐ) | ஊடக பிரிவு பிரதான 04 அலகுகளின் கீழ் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் 2019 நவம்பர் மாதத்தில் புதிய பதவியணியினர் ஊடக பிரிவை கையேற்கும் போது “புதிய ஊடகப் பிரிவு” தவிர ஏனைய எந்தவொரு பிரிவினதும் பொருட்கள் முறையான பிரகாரம் கையேற்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் புதிய பதவியணியினர் பொருட்களை கையேற்ற சந்தர்ப்பத்தின் போது காணப்பட்ட உள்ளபடியான | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். | 2020 இன் பொருள் மெய்மையாய்வுக்கு ஒப்பாக சனாதிபதி ஊடகப் பிரிவில் தற்போது காணப்படுகின்ற பொருட்கள் மற்றும் அதன் செயற்படு நிலை தொடர்பாக ஒட்டுமொத்த மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படுகின்றது. அதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் அறிக்கையின் | 2022 மார்ச் 25 வரையில் ஊடகப் பிரிவுக்குச் சொந்தமானதாக காணப்பட்டு தொலைந்து போயிருந்த உபகரணங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டமை கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மீதி தொடர்பாக ஏற்றுக்கொள்ளக் கூடிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. எனினும், 2020 சனவரி 06 ஆந் திகதிய PMD/ENG/INV/20/01 ஆம் இலக்க சனாதிபதி ஊடகப் பிரிவின் பொறியியலாளரால் சனாதிபதி செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட "ஊடகப் பிரிவுக்குச் சொந்தமானதாக காணப்பட்டு தொலைந்து போயிருந்த உபகரணங்களின் அண்ணளவான பெறுமதி' இந்த அறிக்கையின் பிரகாரம் அதன் பெறுமதி ரூபா 34,189,688 அளவாக இருந்ததுடன் அது தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | பிரகாரம் பற்றாக்குறை மற்றும் செயற்பாடற்ற பொருட்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பில் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (ஒ) | அந்த தொலைந்து போன பொருட்களில் உள்ளடங்கியுள்ள 2015 ஆம் ஆண்டு முதல் 2020 சனவரி மாதம் வரை ஊடகப் பிரிவிற்கு ரூபா 17,786,325 பெறுமதியுடைய 104 மடிக் கணனிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் கணக்காய்வுத் திகதி வரையிலும் 26 மடிக் கணனிகள் (LAPTOP) மற்றும் Mac Book Air வகையின் 02 கணனிகள் மாத்திரம் மீண்டும் அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும | 2020 இன் பொருள் மெய்மையாய்வுக்கு ஒப்பாக சனாதிபதி ஊடகப் பிரிவில் தற்போது காணப்படுகின்ற பொருட்கள் மற்றும் அவற்றின் செயற்படு நிலை தொடர்பாக ஒட்டுமொத்த மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படுகின் றது. அதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் அறிக்கையின் பிரகாரம் பற்றாக்குறை மற்றும் | 2022 மார்ச் 25 வரையில் ஏனைய மடிக்கணனிகள் மீண்டும் அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள தாக என்பது தொடர்பான தகவல்கள் மற்றும் அதற்குப் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | செயற்படாற்ற பொருட்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பில் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சமர்ப்பிக்கப்படவில்லை . |
| (ஓ) | அவ்வாறே அதில் 2015 ஆம் ஆண்டு முதல் 2020 சனவரி மாதம் வரை வழங்கப்பட்டுள்ள ரூபா 10,380,423 பெறுமதியான 52 DESKTOP கணனிகளில் 04 கணனிகள் மீண்டும் கையளிக்கப்பட்டிருந்ததுடன் 02 கணனிகள் மீண்டும் பயன்படுத்த முடியாத நிலைக்கு உட்பட்டிருந்தது. அவ்வாறு கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அநேகமான Desktop கணனிகள் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். | 2020 இன் பொருள் மெய்மையாய்வுக்கு ஒப்பாக சனாதிபதி ஊடகப் பிரிவில் தற்போது காணப்படுகின்ற பொருட்கள் மற்றும் அவற்றின் செயற்படு நிலை தொடர்பாக ஒட்டுமொத்த மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படுகின்றது. அதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் அறிக்கையின் பிரகாரம் பற்றாக்குறை மற்றும் செயற்பாடற்ற பொருட்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பில் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | 2022 மார்ச் 25 வரையில் பயன்படுத்த முடியாத கணனி விடயங்கள் தொடர்பான நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதற்கான போதியளவு தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை . |
| (ஔ) . | அந்த தொலைந்து போன சொத்துக்களில் 2015 ஆம் ஆண்டு முதல் 2020 சனவரி மாதம் வரை ஊடகப் பிரிவிற்கு நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்த ரூபா 3,470,742 பெறுமதியான | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும்.. | 2020 இன் பொருள் மெய்மையாய்வுக்கு ஒப்பாக சனாதிபதி ஊடகப் பிரிவில் தற்போது காணப்படுகின்ற பொருட்கள் மற்றும் அவற்றின் செயற்படு | பற்றாக்குறை மற்றும் செயற்பாடற்ற பொருட்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பில் எடுக்கப்பட்ட |

| | | | | |
|---|---|---|---|---|
| | கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் 45 I PAD ஆக இருந்ததுடன் அதில் 14 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் 03 I PAD மீள அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தமை அறிவிக்கப்பட்ட போதிலும் அதில் 09 கையடக்கத் தொலைபேசிகள் செயற்படு நிலையில் காணப்படாதிருந்ததுடன் கையளிக்கப்பட்ட 02 I PAD கள் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது. | | நிலை தொடர்பாக ஒட்டுமொத்த மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படுகின்றது. அதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் அறிக்கையின் பிரகாரம் பற்றாக்குறை மற்றும் செயற்பாடற்ற பொருட்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பில் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் 2022 மார்ச் 25 வரையில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (க) | 2017 ஆகஸ்ட் 15 ஆந் திகதிய 17/1591/791/025 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் “இலங்கை தேசிய பொருளாதார சபை” ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் அமைச்சரவை குறிப்பின் பிரகாரம் அதில் 6 பணிகள் காணப்பட்டன. சபை தாபிக்கப்பட்டதன் பின்னர் அதன் நோக்கங்கள் / இலக்குகளை அடைந்து கொள்ளல் தொடர்பாக தயாரிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் அந்த திட்டங்களை அடைந்து கொள்ளலின் செயல்முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் கணக்காய்வினால் கோரப்பட்டிருந்த போதிலும் அந்த தகவல்கள் எதுவும் கணக்காய்விற்கு | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் / இலக்குகளை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் அரசாங்கத்தின் நிதியினை முகாமைத்துவம் செய்தல் வேண்டும். | இலங்கை பொருளாதார சபை தாபிக்கப்பட்டதன் நோக்கம் / இலக்குகளை அடைந்து கொள்ளல் என்பவற்றின் செயல்முன்னேற்றம் தொடர்பான கோவைகள் கணக்காய்வு தேவைக்காக வழங்குவதற்கு முடியும். | இலங்கை பொருளாதார சபை தாபிக்கப்பட்டதன் நோக்கம் / இலக்குகளை அடைந்து கொள்ளல் என்பவற்றின் செயல்முன்னேற்றம் தொடர்பான கோவைகள் 2022 மார்ச் 25 வரையில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்படவில்லை. எனினும் சபையின் பொது செயலாளர் 2019 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் வெளிநாட்டு விடுமுறை பெற்று அமெரிக்கா நோக்கி சென்றிருந்தமையினால் அந்த விடுமுறை இரண்டு சந்தர்ப்பங்களின் போது 2019 ஒக்தோபர் 18 வரை நீடித்து தருமாறு கோரப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் 03 மாதங்களுக்கு அண்மித்த காலம் வெளிநாட்டு விடுமுறை பெற்றிருந்தமையினால் சபையில் ஆக்கபூர்வமான சேவையொன்று மேற்கொள்ளப்பட்டமை அவதானிக்கப்படாதிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பொருளாதார சபையின் காலத்தை முடிவுறுத்துவதற்கும், பதவிகளை கலைப்பதற்கும் 2019 ஒக்தோபர் 09 ஆந் திகதி அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் இந்த பொருளதார சபைக்காக 2017 ஆகஸ்ட் முதல் 2019 திசெம்பர் மாதம் வரை 29 மாத காலத்தில் ரூபா 237,784,472 தொகை செலவிடப்பட்டிருந்தது. | | | |
| (கா) | கணக்காய்வு திகதி வரையிலும் சனாதிபதி அலுவலகத்தினால் | முறைமையை நாளதுவரை யாக்குவதற்கு | சனாதிபதி செயலகத்தின் களஞ்சிய | சனாதிபதி செயலகத்தின் களஞ்சிய |

| | | | | |
|---|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்டிருந்த களஞ்சிய முகாமைத்துவ மென்பொருள் முறைமை 2013 ஆம் ஆண்டின் போது தனியார் நிறுவனமொன்றிலிருந்து ரூபா 1.6 மில்லியன் தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் களஞ்சியப் பிரிவினால் அந்த முறைமையை அபிவிருத்தி செய்யும் முன்மொழிவு 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை அவ்வவ்போது கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அது தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முகாமைத்துவ முறைமை தற்போது சரியான செயற்படு நிலையில் காணப்படுகின்றது. முறைமையை அபிவிருத்தி செய்வதற்காக இனங்காணப்பட்ட சில பணிகளுக்கான முன்மொழிவுகள் மாத்திரம் அவ்வவ்போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த துடன் அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள் ளது. | முகாமைத்துவ முறைமை தற்போது சரியான செயற்படு நிலையில் காணப்பட்டமை தொடர்பான தகவல்கள் 2022 மார்ச் 25 வரையில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை . |
| (கி) | அநுராதபுர சனாதிபதி மாளிகையில் சில வருடங்கள் முழுவதும் மெய்மையாய்வு சபையினால் பற்றாக்குறையாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள 02 தொலைகாட்சி இயந்திரங்கள் தொடர்பாக நி. பி 760 இன் பிரகாரம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முறையான ஆலோசனை வழங்கப்பட்டிருக்கவில்லை | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். | இந்த இரண்டு(02) தொலைகாட்சி இயந்திரங்களையும் பழுது பார்ப்பதற்கான தகவல் தொழில் நுட்ப அலகிற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதுட ன், அந்த இரண்டு (02) தொலைக்காட்சிகள் தொடர்பாக பரிந்துரை வழங்குமாறு பணிப்பாளர் (தகவல் மற்றும் தொலைத் தொடர்ப தொழில் நுட்பம்) இற்கு மேலதிக செயலாளர் (உள்ளக நிர்வாகம் மற்றும் செயற்பாடுகள்) இனால் ஆலோசனை | பற்றாக்குறையாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள 02 தொலைகாட்சி இயந்திரங்கள் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள முறையான ஆலோசனை மற்றும் பரிந்துரைகள் 2022 மார்ச் 25 வரையில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை . |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வழங்கப்பட்டுள்ளது. | |
| (கீ) | கதிர்காமம் சனாதிபதி மாளிகையின் பௌதீக பரிசோதனையின் போது 12 விடயங்களில் பற்றாக்குறை காணப்பட்டது. அதில் 02 பொருட்கள் பழுது பார்ப்பதற்காக 2013 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது கையளிக்கப்படடிருந்ததுடன், அந்த பொருட்கள் பழுது பார்த்தல் பூர்த்தி செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டு வரையிலும் மீள அலுவலகத்திற்கு பெறப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். | இந்த தொலைக்காட்சி இயந்திரங்கள் மற்றும் தொலை நகல் இயந்திரங்களை பழுதுபார்த்தலுக்காக தகவல் தொழில் நுட்ப அலகிற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதுடன், அந்த தொலைக்காட்சி இயந்திரங்கள் மற்றும் தொலை நகல் இயந்திரம் தொடர்பாக பரிந்துரையினை வழங்குமாறு பணிப்பாளர் (தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில் நுட்பம் இற்கு மேலதிக செயலாளர் (உள்ளக நிர்வாகம் மற்றும் செயற்பாடுகள்) இனால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | 2022 மார்ச் 25 வரையில் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் 2022 மார்ச் 25 வரையில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை . |
| (கு) | அரசியல் அமைப்பு உறுப்புரை மற்றும் நியதிச் சட்ட பிரிவின் 2019 ஆம் ஆண்டின் போது விற்றுத் தீர்ப்பதற்கு கையளிக்கப்பட்ட கணனி UPS 02 இற்காக நி. பி 772 இன் பிரகாரம் எந்தவொரு கட்டளையும் 2021 யூலை 01 ஆம் திகதியில் உள்ளவாறு விடய உத்தியோகத்தருக்கு | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும | அரசியல் அமைப்பு உறுப்புரை மற்றும் நியதிச் சட்ட நடவடிக்கைகள் பிரிவின் விற்றுத் தீர்ப்பதற்கு கையளிக்கப்பட் கணனி UPS 02 தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில் நுட்ப | உரிய விடயங்களை பொருட் பதிவேட்டு புத்தகங்களில் இருந்து பதிவளிப்பதற்கு உரிய கட்டளை விநியோகிப்பட்டு 2022 மார்ச் 25 வரையில் உரிய பொருட்கள் விற்கப்பட்டு புத்தகங்களில் நீக்கப்பட்டிருக்கவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருக்கவில்லை. | | பிரிவில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதுடன், அந்த துணைப் பாகங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு திட்டமிடப்பட்டமையால், அந்த ஏல விற்பனையின் பின்னர் உரிய விடயங்களை பொருட் பதிவேட்டு புத்தகங்களில் இருந்து பதிவளிப்பதற்கு உரிய கட்டளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ல. |
| (கூ) | ''சௌபாக்கியமுள்ள நோக்கு'' கொள்கையின் பிரகாரம் சகலருக்கும் குடிநீர் வழங்குதல் தொடர்பாக ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அந்த செயற்திட்டங்களின் செயல் முன்னேற்றத்தை மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுதலின் செயல்முன்னேற்றம் எண்ணிக்கை புள்ளி விபரவியல் ரீதியில் அளவிடக்கூடிய செயலாற்றல் குறைகாட்டி, செயலாற்றல் செயல் முன்னேற்ற அறிக்கையில் உள்ளடக்கப்படல் வேண்டும். | அமைச்சு, இராஜாங்க அமைச்சு மற்றும் நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்காக உரிய தரப்பினர்களுக்கு இடையே சரியான தொடர்பினை பேணிச் செல்லல் மற்றும் தேவையான கூட்டங்களை ஒழுங்கமைத்தல் சனாதிபதி அலுவலகத்தில் உரிய ஒவ்வொரு பிரிவினாலும் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறே அந்த சகல | 2021 இற்கான செயலாற்றல் அறிக்கை 2022 மார்ச் 25 வரையில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால் முன்னேற்றத்தை தீர்மானிக்க முடியவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அபிவிருத்தி பணிகளுக்கும் உரிய செயல் முன்னேற்றம் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்தல் மற்றும் சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப அவற்றின் செயல் முன்னேற்றம் அதிமேதகு சனாதிபதிக்கு சமர்ப்பித்தலும் அநத பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம் செயற்திட்ட எண்ணிக்கை அல்லது நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான தகவல்கள் உரிய அமைச்சு அல்லது நிறுவனத்தின் மூலம் செயலாற்றல் முன்னேற்றத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. | |
| (கெ) | ''தெயட்ட எலிய'' செயற்திட்டத்தின் கீழ் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மிகவும் வறுமையில் வாடும் குடும்பங்களுக்காக எந்தவொரு அறவிடலும் இன்றி மின்சாரத்தை வழங்கும் நோக்கத்துக்காக வெற்றி பெற்ற குறிகாட்டியாக பேணிச் செல்லப்படுகின்ற கூட்டங்கள் /கலந்துரையாடல் எண்ணிக்கையாக குறிப்பிடப்பட்டிருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றும் செயல்முன்னேற்றத்தை எண்ணிக்கை ரீதியில் அளவிடக்கூடிய செயலாற்றல் குறிகாட்டி செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்படல் வேண்டும். | - மேற்படி - | 2021 இற்கான செயலாற்றல் அறிக்கை 2022 மார்ச் 25 வரையில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால் முன்னேற்றத்தை தீர்மானிக்க முடியவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதற்காக எடுக்கப்பட்ட வழிகள் அல்லது நிறைவேற்றப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பான எண்ணிக்கைகளை அளவிடக் கூடிய குறிகாட்டி செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (கே) | முழுமையான மற்றும் நியாயமான கல்வி ஒன்றை பாதுகாத்தல் மற்றும் சகலருக்கும் ஆயுட் காலம் முழுவதும் கல்விக்கான சந்தர்ப்பங்களை மேம்படுத்துதல் என்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டில் 0ஒக்ஸ்டிப் தெரில்நுட்ப தொடர்பு இணைப்பு வழங்கப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றும் செயல்முன்னேற்றத்தை எண்ணிக்கை ரீதியில் அளவிடக்கூடிய செயலாற்றல் குறிகாட்டி செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்படல் வேண்டும். | - மேற்படி - | 2021 இற்கான செயலாற்றல் அறிக்கை 2022 மார்ச் 25 வரையில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால் முன்னேற்றத்தை தீர்மானிக்க முடியவில்லை. |

## 3.2 தலைப்பு 02 – பிரதம அமைச்சர் அலுவலகம்

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டில் இரண்டு மூலதன விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா 44,500,000 ஆன ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தது. | வருடாந்த மதிப்பீடு முடிந்த வரையில் யதார்த்தமாகவும் மற்றும் பயனுள்ளதாகவும் தயாரிக்கப்படல் வேண்டும். | கருத்து வழங்கப்படவில்லை. | யதார்த்தமான மதிப்பீடுகளைத் தயாரிக்காமையில் 2021 ஆம் ஆண்டிலும் 03 செலவு விடயங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒதுக்கங்கள் பயன்படுத்தப்பட்ட பின்னர் சேமிப்பானது ஏற்படுத்தப்பட்ட ஒதுக்கங்களில் 17 சதவீதத்திலிருந்து 53 சதவீதம் வரையான வீச்சில் ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தன. |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டில் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நல்லிணக்கப்பகுதியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நல்லிணக்கப் பொறி முறைகளுக்கான ஒருங்கிணைப்புச் செயலகத்தினால் ஒருங்கிணைக்கப்பட்ட செயற்பாடுகள் | 2020 ஆம் வருடத்திலேயே 03 மாதங்கள் செயற்பட்டு அவ் வருடத்திலேயே அதன் பணிகள் நிறைவடைந்துள்ளமையால் அதன் முன்னேற்றத்தைக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.. | 2020 மார்ச் 31 ஆந் திகதிய நல்லிணக்கப் பொறிமுறைகள் ஒருங்கிணைப்புச் செயலகத்தின் பணிகள் நிறைவடைந்துள்ள மையால் அதற்கான முன்னேற்றமொன்று | 2022 மார்ச் 23 வரையில் 2020 மார்ச் மாதத்தின் இறுதிக் காலப்பகுதிக்கான முன்னேற்றம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொடர்பான முன்னேற்றமொன்று அவதானிக்கப்படவில்லை. | | சமர்ப்பிக்கப்படுவதற்கு முடியவில்லை. | |
| (இ) | புத்தாயிரம் சவால்களை கூட்டிணைக்கும் செயற்திட்ட அலுவலகத்தின் கீழான காணி நிர்வாக செயற்திட்டம் மற்றும் போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் என்பன 2019 ஆம் வருடத்தில் செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. | திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் அதன் பிரகாரம் செயற்படுத்தும் தேவைப்பாடு | செயற்திட்டங்களுக்காக நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்ட போதும் நாட்டில் காணப்பட்ட நிலைமை மற்றும் செயற்திட்டங்களின் தன்மையின் பிரகாரம் முறையாக செயற்படுத்தப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டிலும் மூலதனச் செலவுகளுக்காக ஏற்படுத்தப்பட்டிருந்த ஒதுக்கங்களில் 7.26 சதவீதமான ஒதுக்கங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2018 ஆம் ஆண்டில் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 2500 கிராமிய அரச அலகுகள் நிறுவுதல் மற்றும் பொது சேவைகள் வழங்கல் அதிகார சபை (Public Service Delivery Authority) நிறுவுதல் போன்ற செயற்பாடுகள் செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் எதிர்பார்க்கப்பட்டவாறு செயற்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.. | முன்னுரிமை அடிப்படையில் ஏனைய பல்வேறு செயற்திட்டங்கள் மற்றும் பணிகள் நிறைவேற்றப்பட்டிருந்தமையால் இது தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. . | 2022 மார்ச் 23 வரையில் அந்நோக்கம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

3.3 **தலைப்பு 24 – தேசிய கொள்வனவு ஆணைக்குழு**

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம

2018 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** | **நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்** | **அது தொடர்பான தற்போதைய நிலைமை** |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 156 (இ) (2) உறுப்புரையின் பிரகாரம் ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளிடையே விலைக்கேள்வியாளர்களுக்கு கேள்வி அழைப்பு நடைமுறைக்கு பங்குபற்றும் பொருட்டு சமனான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளதா என்பதை கண்காணித்து பொருத்தமான அதிகாரிகளுக்கு அறிக்கையிடுதலை போன்றே பெறுகைகளுக்கு தொடர்புடைய வழங்கல் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு அங்கத்தவர்களுக்கு பொருத்தமானவாறு | அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரம் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டும். | நிலவும் பதவியணி போதுமானதாக இல்லாதிருந்தமையின் அடிப்படையில் இதற்கு காரணமாக அமைந்துள்ளதுடன் வழிமுறையாக்கப்பட்ட விசாரணை நடைமுறையொன்றை அறிமுகப்படுத்தி விலைக்கேள்வி மதிப்பீடு செய்யும் குழு ஒன்றின் அங்கத்தவராக பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஆகக் குறைந்த தகைமையினை அறிமுகம் செய்ய எதிர்ப்பார்க்கிறேன். | அரசியலமைப்புச் சட்டத்தின் 20 ஆம் திருத்தத்திற்கு இணங்க தேசிய கொள்வனவு ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தகைமை உள்ளதா என்பது தொடர்பில் அறிக்கை சமர்பித்தல் வேண்டும். எனினும் அந்தப் பணி இடம்பெற்றிருந்தது கிடைத்த முறைப்பாடுகளுக்கு மாத்திரம் ஆகும். | | | |
| (ஆ) | நிறுவனத்தின் செயற்பணிக்கு உரியதாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பொருட்கள், பணிகள் மற்றும் சேவைகள், தகவல்கள் கட்டமைப்பு மற்றும் மதியுரையாளர்கள் தெரிவு செய்தல் தொடர்பிலான வழிகாட்டல்களுக்காக 2019 மே மாதமளவிலும் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | உரிய செயற்பணியை நிறைவேற்றுவதற்கான அதிகாரம் கையளிக்கப்படும் சட்ட கட்டமைப்பு ஒழுங்கமைக்கப்பட வேண்டும். | இந்த நடைமுறை தாமதமாகியமை பெறுகைகள் ஆணைக்குழுவினால் எந்த வகையிலும் தடுத்துக்கொள்ள முடியாமைக்கான காரணங்களின் அடிப்படையில் இடம்பெற்றுள்ளமையை அறிவிக்கின்றேன்.. | அரசியலமைப்புச் சட்டத்தின் 20 ஆம் திருத்தத்திற்கு இணங்க தேசிய கொள்வனவு ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளது. |
| (இ) | பெறுகை பணிகள் தொடர்பில் 2018 ஆம் ஆண்டினுள் கிடைத்திருந்த 151 முறைப்பாடுகளில் 67 இணை பரீட்சித்து அறிக்கை வெளியிடப்பட்டிருந்ததுடன் 10 இன் விசாரணை பணிகள் நிறைவு செய்யப்பட்ட அறிக்கைகள் வெளியிடப்பட்டிருக்கவில் லை. 27 இன் தகவல்கள் கோரலுக்கு மாத்திரம் | திட்டமிடப்பட்ட பணிகள் உரிய கால அட்டவணையினுள் நிறைவேற்றப்பட வேண்டும்.. | இணங்குகின்றேன். | அரசியலமைப்புச் சட்டத்தின் 20 ஆம் திருத்தத்திற்கு இணங்க தேசிய கொள்வனவு ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மட்டுப்படுத்தப்பட்டிருந்தது . | | | |
| (ஈ) | 2018 ஜுலை 31 ஆம் திகதி வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடாத்திச் செல்லப்பட்ட ஆணைக்குழுவின் அலுவலகத்திற்காக மாதாந்த வாடகை ரூபா 931,834 ஆன போதிலும் பத்திரமுல்லயில் அமைந்துள்ள புதிய அலுவலக கட்டிடத்தின் மாதாந்த வாடகை ரூபா 2,028,600 ஆகும். பழைய அலுவலகத்தினை நடாத்திச் செல்லும் போது மேற்கொள்ள நேர்ந்திடாத போதிலும் புதிய அலுவலகம் அமைந்துள்ள கட்டிடத்திற்கு வந்தமையின் காரணமாக மின்சாரம், சுத்திகரிப்பு, நீர் மற்றும் பாதுகாப்பு போன்ற செலவினங்களுக்காக 2018 ஆகஸ்ட் மாதம் முதல் திசெம்பர் மாதம் வரையான 5 மாத காலப்பகுதிக்காக ரூபா 1,885,496 ஆன மேலதிக கிரயமொன்றினை மேற்கொள்ள நேர்ந்திருந்தது. | செலவிடப்படும் தொகைக்கு உச்ச செயலாற்றலினை கைப்பற்றுறவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பண்டாரநாயக்க மாநாட்டு மண்டப வளாகத்தில் அமைந்திருந்த இரண்டு கட்டிடங்களின் ஆறு இடங்களின் முழு இட அளவானது 2231 கன அடிகளான இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது டன் அதற்கான வாடகை மாதாந்தம் கன அடி ஒன்றிற்காக ரூபா 375.00 ஆகும். (வரி நீங்கலாக) அது முன்னாள் பதவியணிக்கும் போதியதாக இல்லாதிருந்ததுடன் ஆணைக்குழுவின் தலைவருக்கும் பயன்படுத்துவதற்கு நேர்ந்தது பொது மலசலகூடம் மற்றும் பொது நீர்நிலை என்பதை அறிவிக்கின்றேன். இடவசதி குறைவடைந்தமையால் மாநாடுகளை நடாத்துவதற்காக வெளியிலிருந்து இடவசதியை பெற்றுக்கொள்ளவும் பதவியணியின் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் முடியாதிருந்தது. அலுவலக பணிகளை நிறைவேற்றும் போது | அரசியலமைப்புச் சட்டத்தின் 20 ஆம் திருத்தத்திற்கு இணங்க தேசிய கொள்வனவு ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பல்வேறு சிக்கல்கள் உருவாகியிருந்தன. | |
| (உ) | மேற்படி கட்டிடத்தினை வாடகைக்கு எடுப்பதற்காக 2017 செப்தம்பர் 29 ஆம் திகதிய வெளியிடப்பட்டிருந்த பத்திரிக்கை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய இடவசதியின் அளவு 6000 கன அடிகளாகவும், 2018 சனவரி மாதத்தில் வெளியிடப்பட்டிருந்த அறிவித்தலின் பிரகாரம் தேவையான கன அடியின் அளவானது 8500 - 10500 இற்கு அளவாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் ஆணைக்குழுவினால் நகர அபிவிருத்தி அதிகார சபையில் கோரப்பட்டிருந்த 1500-2000 கன அடிகளுக்கு இடைப்பட்ட இட அளவானது தொடர்பிலாகும். எவ்வாறெனினும் தற்போது வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கட்டிடம் 13,400 கன அடிகளாக உள்ளதுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 50 மற்றும் உள்ளபடியான | செலவிடப்படும் தொகைக்கு உச்ச செயலாற்றலினை கைப்பற்றுறவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும | கட்டிடத்தின் நில அளவானது 8500 - 10500 கன அடிகளுக்கு கிட்டியதாக உள்ளமை மற்றும் ஆகக் குறைந்தது 10 வாகனங்களையேனும் நிறுத்தி வைக்கும் இயலுமையும் கருத்திற் கொள்ளப்பட்டது. வயோதிபர்களுக்கு பயன்படுத்துவதற்கு சிக்கலாகக்கூடும் என்றமை மற்றும் வாடகை தொகையின் நியாயத் தன்மையை கருதி முழு கட்டிடமும் வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளது. | அரசியலமைப்புச் சட்டத்தின் 20 ஆம் திருத்தத்திற்கு இணங்க தேசிய கொள்வனவு ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளது. . |

| | | | | |
|---|---|---|---|---|
| | பதவியணி 27 மாத்திரம் ஆகும். எனினும் ஆணைக்குழுவிற்காக 13,400 கன அடிகள் அளவில் 12,000 கன அடியொன்றிற்கான (பெறுமதி சேர் வரி நீங்கலான விலைக்கு) ரூபா 147 படி மாதாந்தம் கொடுப்பனவு செய்யப்பட்ட கட்டிடம் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | | | |
| (ஊ) | புதிய கட்டிடத்திற்காக விலை மதிப்பீட்டு திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்த மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் மாதாந்த வாடகை பெறுமதி ரூபா 1,600,000 ஆக இருந்ததுடன் இந்த மதிப்பீட்டினை மிஞ்சி மாதமொன்றிற்காக செலுத்தப்பட்ட வாடகை தொகை ரூபா 164,000 ஆகும். அதற்கமைய வருடமொன்றிற்காக அவ்வாறு கூடுதலாக செலுத்துவதற்கு நேர்கின்ற தொகை ரூபா 1,968,000 என்பது அவதானிக்கப்பட்டது. | விலைமதிப்பீட்டு திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட மதிப்பீட்டு அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு வாடகை செலுத்தப்பட வேண்டும். | புதிய கட்டிடத்தின் மதிப்பீட்டு பெறுமதியும் கட்டிடத்தின் உரிமையாளரினால் முன்வைக்கப்பட்டுள்ள கூறு விலைகளிவும் வேறுபாடு உள்ளமையை ஏற்றுக்கொள்கின்றேன். கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் முக்கியத்துவம் மற்றும் சுற்றியுள்ள அலுவலகங்களுக்கு உரிய வாடகையினை கருத்திற் கொண்டு அந்த வாடகை கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமொன்றாக கருதாது உரிய நீதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டது | அரசியலமைப்புச் சட்டத்தின் 20 ஆம் திருத்தத்திற்கு இணங்க தேசிய கொள்வனவு ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளது. |
| (எ) | 10 செலவின விடயங்களுக்கான ஆரம்ப செலவின மதிப்பீடு மற்றும் | மதிப்பீடுகளை இயலுமானவரை சரியானதாக தயாரிப்பதற்கு | வெற்றிடங்களுக்காக புதிய பதவியணியினரை ஆட்சேர்த்தமை, பிரயாணச் செலவினம், | அரசியலமைப்புச் சட்டத்தின் 20 ஆம் திருத்தத்திற்கு இணங்க தேசிய கொள்வனவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | திருத்தப்பட்ட செலவின மதிப்பீடு ஆகியவற்றுக்கு இடையேயான வேறுபாடு ஆரம்ப செலவின மதிப்பீட்டின் சதவீதமாக 30 முதல் 257 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | கூடுதலான எழுதுகருவி தேவைப்பாடுகள் தோன்றியமை, ஏனைய வழங்கலுக்காக செலவின தேவைப்பாடு அதிகரித்தமை, வாகனங்களின் அவசர திருத்தம், செயற்பாட்டு குத்தகைஇடைநிறுத்தம், அரச உத்தியோகத்தர்களுக்கான சலுகை கடன் அடிப்படையின் கீழ் ஆதனங்கள் கொள்வனவு வாகனங்களுக்காக நிதிக் குத்தகை கொடுப்பனவு, நிதிஏற்பாடு 2019 வரவு செலவுத் திட்டத்திற்கு உட்படுத்த முடியாமை போன்ற விடயங்கள் காரணங்களாக இருந்தன | ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளது. |
| (ஏ) | வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரகாரம் முற்பண செயற்பாடு களுக்காக விதிக்கப்பட்டிருந்த எல்லைகளான செலவினங்களின் உயர் எல்லை ரூபா 1,200,000 ஆகவும், வரவு மீதிகளின் உயர் எல்லை ரூபா 3,000,000 ஆக இருந்ததுடன் அதற்குரிய உள்ளவாறான பெறுமதிகள் முறையே ரூபா 2,266,762 மற்றும் ரூபா 3,287,856 ஆக இருந்த காரணத்தினால் | வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தில் விதிக்கப்பட்டிருந்த எல்லைகளுக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். இந்த எல்லைககள் திருதத்திற்காக அமைச்சரவை திருத்தமொன்று சனாதிபதி செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | அரசியலமைப்புச் சட்டத்தின் 20 ஆம் திருத்தத்திற்கு இணங்க தேசிய கொள்வனவு ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எல்லைகள் மீறல் முறையே ரூபா 1,066,762 மற்றும் ரூபா 287,856 ஆக இருந்தது. மேலும் நிதிக் கூற்றுக்களில் ஏசீஏ 5 மாதிரியில் இந்த உயர் எல்லை பெறுமதிகள் முறையே ரூபா 2,100,000 எனவும் ரூபா 4,000,000 எனவும் பதிவு செய்யப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | | | |
| (ஐ) | அரச நிறுவனமொன்றினால் மேற்கொள்ளப்படும் பொருட்கள், பணிகள் மற்றும் சேவைகள், தகவல்கள் கட்டமைப்பு பெறுகைக்காக நியாயமான பக்கசார்பற்ற மற்றும் வெளிப்படையான மற்றும் போட்டி தன்மையுடனான கிரயத்துடன் செயற்திறான கொள்கைகள், நடைமுறைக் கோவை மற்றும் செயற்பாடுகளின் காலரீதியான தயாரித்தல் மற்றும் நிறுவன செயற்பணிக்குரிய வழங்கப்பட்டிருந்த பொருட்கள், வேலைகள் மற்றும் சேவைகள், மதியுரையாளர்களைத் தெரிவு செய்தல் தொடர்பிலான வழிகாட்டல்களுக்காக பாராளு மன்றத்தின் | உரிய செயற்பணியை நிறைவேற்றுவதற்கான அதிகாரம் கையளிக்கப்படும் சட்ட கட்டமைப்பு ஒழுங்கமைக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்த வழிகாட்டல் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சபைக்கு முன்வைக்கப்படாமையால் இச்சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அறிவித்திருந்ததுடன் இச்செயற்பாடு தாமதம் பெறுகை ஆணைக்கு சபைக்கு தவிர்க்க முடியாமல் இருந்த காரணத்தினால் இடம் பெற்றுள்ளதாக குறிப்பிட விரும்புகின்றேன | அரசியலமைப்புச் சட்டத்தின் 20 ஆம் திருத்தத்திற்கு இணங்க தேசிய கொள்வனவு ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது. | | | |
| (ஓ) | ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டு 2 ஆண்டுகள் கடந்ததன் பின்னர் பொருட்கள், மற்றும் சேவைகள், வேலைகள், தகவல் முறைமைகள் என்பவற்றிற்காக மதியுரையாளர்கள் தெரிவு செய்தல் மற்றும் சேவையில் ஈடுபடுத்துதுல் தொடர்பாக புதிய பெறுகை கோவையின் இறுதி வரைவிற்கு ஆணைக்குழு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். அதன் பிரகாரம் உத்தேச புதிய பெறுகை விகாட்டல் மற்றும் கைநூல் அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 3 மாதஙு களுக்குள் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட இருந்த போதும் 2020 செப்தெம்பர் மாதம் வரை அந்த அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை ல. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு அங்கீகாரம் வழங்குவதன் மூலம் பெறுகை பொறிமுறையை மிகவும் செயற்திறனாகவும் வினைத்திறகாவும் செயற்படுத்த முடியும். | பொருட்கள், மற்றும் சேவைகள், வேலைகள், தகவல் முறைமைகள் என்பவற்றிற்காக மதியுரையாளர்கள் தெரிவு செய்தல் மற்றும் சேவையில் ஈடுபடுத்துதல் தொடர்பாக புதிய பெறுகை கோவையின் இறுதி வரைவிற்கு அமைச்சரவை அங்கீகாரத்துடனும் சட்டமா அதிபரின் இணக்கப்பாட்டுடன் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு பாராளு மன்றத்தின் அங்கீகாரத் திற்காக சமர்ப்பிக்கப் பட்டிருந்த போதும் அது இதுவரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படாமை ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயமொன்றாக தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | அரசியலமைப்புச் சட்டத்தின் 20 ஆம் திருத்தத்திற்கு இணங்க தேசிய கொள்வனவு ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளது. |
| (ஓ) | அரச தனியார் பங்குடமை செயற்திட்டத்திற்காக பெறுகை வழிகாட்டல் தயாரித்தல், மருந்துகள் | பெறுகை வழிகாட்டல் கோவைகள் பெறுகை பொறி முறையை மிகவும் செயற்திறனாகவும் | 2018 ஆம் ஆண்டின் போது தனியாள் பங்குடமை தொடர்பான தேசிய முகவராண்மையால் | அரசியலமைப்புச் சட்டத்தின் 20 ஆம் திருத்தத்திற்கு இணங்க தேசிய கொள்வனவு ஆணைக்குழு |

| | | | | |
|---|---|---|---|---|
| | பெறுகைக்காக செயற்பாட்டு வழிகாட்டலொன்று தயாரித்தல், பசுமை பெறுகை கொள்கை தயாரித்தல் இதுவரை பூர்த்தி செய்ய முடியாமல் இருந்தது. | வினைத்திறனாகவும் செயற்படுத்த முடியும். | (யேீ) தாபிக்கப்பட்டதன் பின்னர் ஆணைக்குழுவுடன் அவர்கள் ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாட்டின் பேரில் பங்குடமை செயற்திட்டமொன்றாக மீண்டும் அரச தனியார் பங்குடைமை செயற் திட்டத்திற்காக உரிய வழிகாட்டல்களின் வரைவாக்கல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பசுமை பெறுகை கொள்கை தயாரித்தல், சுற்றாடல் அமைச்சுடன் இணைந்த செயயற்பட வேண்டியதுடன் இதுவரை அந்த அமைச்சின் மூலம் பசுமை உற்பத்திகளுக்காக மதிப்பிடுவதற்கான நியதிகளை தயாரிக்காமை காரணமாக அவ்வாறான வழிகாட்டலொன்றை தயாரிப்பதற்கு தவறியிருந்தது. | கலைக்கப்பட்டுள்ளது. |
| (ஔ) | ஆணைக்குழுவினால் 2017 ஆம் ஆண்டிற்குரிய 47 அமைச்சுக்களில் பூர்த்தி செய்யப்பட்ட 1471 பெறுகைகள், தொடர்பாக தெரிவுப் பரிசோதனையின் போது பரீட்சிப்பதற்காக 83 பெறுகைகள் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டில் | பூர்த்தி செய்யப்பட்ட பெறுகைகள் தொடர்பாக பரீட்சித்தல் எதிர்வரும் பெறுகை நடவடிக்கைகள் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் மேற்கொள்ளக்கூடிய வகையில் அதன் பிரகாரம் நடவடிக்கை | ந்நோக்கங்கள் திட்டமிடப்பட்ட பெறுகை உரிய நிறுவனத்தின் நோக்கங்களுடன் இணங்குகின்றதா என நிச்சயிக்கப்பட்டு அப்பெறுகை நிறுவனத்தின் நோக்கங்கள நிறைவேற்றுவதற்கு | அரசியலமைப்புச் சட்டத்தின் 20 ஆம் திருத்தத்திற்கு இணங்க தேசிய கொள்வனவு ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதில் 30 பெறுகைகள் மாத்திரம் பரீட்சிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. | எடுத்தல் வேண்டும | உதவுகின்றதா என உறுதிப்படுத்துவதாகும். எவ்வாறாயினும் தற்போது செயற்படுத்தப்படும் வகையில் மிகவும் கூடுதலான கவனமொன்று அந்தந்த நிறுவனங்களின் செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் பெறுகை திட்டம் என்பவற்றை பெற்றுக் கொள்ள வேண்டுமென இந்த ஆணைக்குழுவாலும் அவதானிக்கப்பட்டுள்ளது. | |
| (க) | 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 40 (1) ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். | உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது | அரசியலமைப்புச் சட்டத்தின் 20 ஆம் திருத்தத்திற்கு இணங்க தேசிய கொள்வனவு ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளது. |
| (கா) | 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 41 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் நிலைத்திருத்தலுக்காக ஏற்பாடுகளின் பிரகாரம் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களினை நடாத்துதல் வேண்டும். | உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படாமையால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களினை நடாத்த முடியாதுள்ளதுடன் உள்ளக கணக்காய்வாளரொருவரை நியமிப்பதற்கு தேவையான அங்கீகாரத்தை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து கோரப்பட்ட போதும் | அரசியலமைப்புச் சட்டத்தின் 20 ஆம் திருத்தத்திற்கு இணங்க தேசிய கொள்வனவு ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அதற்கான அங்ககீரம் கிடைக்கவில்லை. அதன் பிரகாரம் பணிப்பொறுப்பு அடிப்படையில் இச்சேவையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (கி) | 2019 ஆம் ஆண்டின் இறுதி வரை அங்கீகரித்த பதவியணிக்காக 05 பேர் அமைய அடிப்படையிலும் 09 பேர் ஒப்பந்த அடிப்படையிலும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர் அமைய அடிப்படையில் நியமிக்கப்பட்ட அரச முகாமைத்துவ உதவியாளர் பதவிக்காக உத்தியோகத்தரொருவர் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையொன்றின் பிரகாரம் அல்லாமல் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தருக்கு 2019 ஆம் ஆண்டில் ரூபா 213,514 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பதவியணி நியமனம் முறைப்படுத்தப்பட வேண்டும் | அரசியலமைப்பின் 156(உ)(1) உப உறுப்புரையின் பிரகாரம் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக அந்நியமனங்களை மேற்கொண்டுள்ளதுடன் திரண்ட நிதியிலிருந்து சம்பளக் கொடுப்பனவை கருத்திற் கொண்டு முறைப்படி பதவியணியை அங்கீகரித்துக் கொண்டுள்ளதாக அறிய தர விரும்புகின்றேன் | அரசியலமைப்புச் சட்டத்தின் 20 ஆம் திருத்தத்திற்கு இணங்க தேசிய கொள்வனவு ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளது. |
| (கீ) | ஆணைக்குழுவின் பெறுகை மேற்பார்வை அலகின் பதவியணி நிறைவேற்றுத் தரத்தின் 01 உத்தியோகத்தர் மற்றும் நிறைவேற்றுத் | மேற்பார்வை நடவடிக்கைகள் சிறப்பாக மேற் கொள்வதற்காக போதியளவு பதவியணியொன்று | செய்யப்பட வேண்டிய வேலைகள் தொடர்பான ஆய்வொன்று மேற்கொண்டு தேவையான பதவியணி | அரசியலமைப்புச் சட்டத்தின் 20 ஆம் திருத்தத்திற்கு இணங்க தேசிய கொள்வனவு ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தரமல்லாத 02 உத்தியோகத்தர்களுடன் உள்ளதால் அந்நடவடிக்கைகளை செயற்திறனாக மேற்கொள்வதற்கு போதியளவு பதவியணியினரொன்று இல்லை என அவதானிக்கப்பட்டது. | இணைக்கப்பட வேண்டும். | அங்கீகரித்துக் கொள்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | |
| (கு) | 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான திறைசேரியின் புத்தகங்களின் பிரகாரம் முற்பணப் பெறுவனவுகள் ரூபா 3,487,279 ஆன போதிலும், நிதிச் செயலாற்றல் கூற்றில் முற்பணப் பெறுவனவுகள் ரூபா 3,014,879 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக முற்பணப் பெறுவனவுகள் ரூபா 472,400 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | அனைத்து முற்பணப் பெறுவனவுகளும் செயலற்றல் கூற்றில் குறிப்பிடப்படுவது அவசியமானது ஆகும்.. | இணங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்தது.. | அரசியலமைப்புச் சட்டத்தின் 20 ஆம் திருத்தத்திற்கு இணங்க தேசிய கொள்வனவு ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளது. . |
| (கூ) | திறைசேரியின் கணினி அச்சீடு (SA 52) மற்றும் மாதிரப் படிவம் இலக்கம் ஏசீஏ – 5 இன் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் முற்பண செலுத்தல்கள் ரூபா 2,515,056 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், நிதிச் செயலாற்றல் கூற்றில் முற்பண செலுத்தல்கள் | அனைத்து முற்பணப் பெறுவனவுகளும் செயலற்றல் கூற்றில் குறிப்பிடப்படுவது அவசியமானதாகும்.. | இணங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்தது.. | அரசியலமைப்புச் சட்டத்தின் 20 ஆம் திருத்தத்திற்கு இணங்க தேசிய கொள்வனவு ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ரூபா 2,267,656 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக முற்பண செலுத்தல்கள் ரூபா 247,400 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | | |
| (கெ) | திறைசேரியின் கணினி அச்சீடு (SA 52) மற்றும் மாதிரிப் படிவம் இலக்கம் ஏசீஏ – 5 இன் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் முற்பணக் கணக்கின் மீதி ரூபா 2,315,633 ஆன போதிலும், நிதி நிலைமைக் கூற்றில் முற்பணக் கணக்கின் மீதி ரூபா 2,123,133 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக முற்பணக் கணக்கின் மீதி ரூபா 192,500 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | முற்பண கணக்கின் மீதி திறைசேரி புத்தகத்தின் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் பதிவு செய்யும் தேவைப்பாடு.. | இணங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்தது.. | அரசியலமைப்புச் சட்டத்தின் 20 ஆம் திருத்தத்திற்கு இணங்க தேசிய கொள்வனவு ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளது. |
| (கே) | திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக தீர்ப்பனவு செய்யப்படாத கட்டுநிதி மீதி ரூபா 1,222,837 ஆன போதிலும், நிதி நிலைமைக் கூற்றில் அது தொடர்பில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | கட்டுநிதி மீதி திறைசேரி புத்தகத்தின் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் பதிவு செய்யும் தேவைப்பாடு. | இணங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்தது.. | அரசியலமைப்புச் சட்டத்தின் 20 ஆம் திருத்தத்திற்கு இணங்க தேசிய கொள்வனவு ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளது. . |
| (கை) | திணைக்களத்தின் புத்தகங்கள் மற்றும் திறைசேரியின் | வழிகாட்டல்களின் பிராகரம் நிதிக்கூற்றுக்களை | இணங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | அரசியலமைப்புச் சட்டத்தின் 20 ஆம் திருத்தத்திற்கு இணங்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | புத்தகங்கள் பிராகரம், முற்பணப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளுக்கிடையே ய ரூபா 1,108,776 ஆன வேறுபாடு காணப்பட்ட போதிலும், அது கட்டுநிதி சீராக்கல் கணக்கிற்கு ரூபா 883,776 ஆக சீராக்கம் செய்யப்பட்டிருந்தது | தயாரிக்கும் தேவைப்பாடு | | தேசிய கொள்வனவு ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளது. |
| (கொ) | திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் திறைசேரியிலிருந்தான கட்டுநிதி பெறுவனவுகள் மீதி ரூபா 74,360,000 ஆன போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான கட்டுநிதி பெறுவனவு ரூபா 79,655,747 ஆக காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தால் திறைசேரியின் கட்டுநிதி பெறுவனவுகள் ரூபா 5,295,747 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | வழிகாட்டல்களின் பிராகரம் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு. | இணங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | அரசியலமைப்புச் சட்டத்தின் 20 ஆம் திருத்தத்திற்கு இணங்க தேசிய கொள்வனவு ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளது. |
| (கோ) | திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் ஆண்டினுள் பெறப்பட்ட வருமானமல்லாத பெறுவனவுகள் ரூபா 4,207,050 ஆன போதிலும், செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | வருமானமல்லாத பெறுவனவுகள் காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டிய தேவைப்பாடு. | இணங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | அரசியலமைப்புச் சட்டத்தின் 20 ஆம் திருத்தத்திற்கு இணங்க தேசிய கொள்வனவு ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளது. |
| | திணைக்களத்தின் | முற்பண அறவீடுகளின் | இணங்குவதாக | அரசியலமைப்புச் |

| | | | | |
|---|---|---|---|---|
| (கௌ) | புத்தகங்களின் பிரகாரம் ஆண்டினுள் பெறப்பட்ட முற்பண அறவிடல்கள் ரூபா 2,131,103 ஆன போதிலும், அது முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்காமையால் காசு உட்பாய்ச்சல் அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | மொத்த பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றின் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காண்பிக்கும் தேவைப்பாடு. | குறிப்பிடப்பட்டிருந்தது.. | சட்டத்தின் 20 ஆம் திருத்தத்திற்கு இணங்க தேசிய கொள்வனவு ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளது. |
| (ச) | திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் ஆண்டினுள் முற்பண செலுத்தல்கள் ரூபா 2,267,656 ஆன போதிலும், ஆன போதிலும், அது காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 1,225,250 இனால் காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தால் ரூபா 1,042,406 இனால் காசு உட்பாய்ச்சல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | முற்பண செலுத்தல்களின் மொத்த பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கும் தேவைப்பாடு | இணங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | அரசியலமைப்புச் சட்டத்தின் 20 ஆம் திருத்தத்திற்கு இணங்க தேசிய கொள்வனவு ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளது. |
| (சா) | மீளாய்வாண்டிற்கான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் கொள்வனவு மூலதன செலவின விடயங்களின் ரூபா 200,000 மொத்த தேறிய நிதியேற்பாடும் செலவிடப்படாது சேமிக்கப்பட்டது. . | மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாட்டை உச்ச அளவில் பயன்படுத்துத நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவைப்பாடு. | கோவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக அலுவலகப் பணிகளுக்கான கட்டுப்பாடுகள் காரணமாக தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை வாங்குவது ஒத்திவைக்கப்பட்டது, பின்னர் அதை ரத்து | அரசியலமைப்புச் சட்டத்தின் 20 ஆம் திருத்தத்திற்கு இணங்க தேசிய கொள்வனவு ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | செய்ய ஆணைக்குழு முடிவு செய்ததால் கொள்வனவு பணிகள் நிறுத்தப்பட்டது. | |
| (சி) | திறைசேரியின் கணினி அச்சீடு (SA 52) மற்றும் ஏ.சி.ஏ - 5 மாதிரியின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான திறைசேரியின் புத்தகங்களின் பிரகாரம் முற்பண கணக்கின் மீதி ரூபா 2,315,633 ஆகும். எனினும் இதனை திணைக்களத்தில் புத்தகங்கள் மற்றும் திறைசேரியின் கணினி அச்சிட்டு பதிவுகளை இணக்கம் செய்வதற்கான கூற்று [நி.பி. 427(1)] பிரகாரம் ஆண்டின் இறுதியில் உள்ளபடியான மீதி 2,540,633 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 225,000 ஆன வேறுபாடு ஒன்று அவதானிக்கப்பட்டது. | திறைசேரியின் புத்தகங்களின் பிரகாரமான மீதியை சரியாக பதிவு செய்வதன் தேவைப்பாடு | இணங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | அரசியலமைப்புச் சட்டத்தின் 20 ஆம் திருத்தத்திற்கு இணங்க தேசிய கொள்வனவு ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளது. |
| (சீ) | திறைசேரியின் கணினி அச்சீடு (SA 52) மற்றும் ஏ.சி.ஏ - 5 மாதிரியின் பிரகாரம் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான திறைசேரியின் புத்தகங்களின் பிரகாரம் முற்பண கணக்கின் மீதி ரூபா 2,315,633 ஆன போதிலும், தனிப்பட்ட | திறைசேரியின் புத்தகங்களின் பிரகாரமான மீதியை சரியாக பதிவு செய்வதன் தேவைப்பாடு | இணங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்தது.. | அரசியலமைப்புச் சட்டத்தின் 20 ஆம் திருத்தத்திற்கு இணங்க தேசிய கொள்வனவு ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் பிரகாரம் தனிப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,540,633 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 225,000 ஆன வேறுபாடு ஒன்று அவதானிக்கப்பட்டது. | | | |
| (சு) | 02 மூலதன செலவினம விடயங்கள் தொடர்பில் ரூபா 48,892 பெறுமதியான பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் (iii) இல் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் அனைத்து பொறுப்புகளும் வெளிப்படுத்தப்பட வேண்டியமை. | இணங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | அரசியலமைப்புச் சட்டத்தின் 20 ஆம் திருத்தத்திற்கு இணங்க தேசிய கொள்வனவு ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளது. |
| (சூ) | திறைசேரியின் கணினி அச்சிட்டு பதிவு (SA 92) பிரகாரம் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான திணைக்களத்தின் பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் என குறிப்பிடப்பட்டிருந்த 02 உருப்படிகளில் பெறுமதி மற்றும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பு (iii) இல் காண்பிக்கப் பட்டுள்ள பெறுமதி ஆகியவற்றுக்கு இடையே ரூபா 59,780 ஆன வேறுபாடு நிலவியது. | நிதிக்கூற்றுக்களில் அனைத்து பொறுப்புகளும் வெளிப்படுத்தப்பட வேண்டியமை. | இணங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | அரசியலமைப்புச் சட்டத்தின் 20 ஆம் திருத்தத்திற்கு இணங்க தேசிய கொள்வனவு ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளது. |

**3.4 தலைப்பு 102 – நிதி அமைச்சு**

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** | **நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள** | **அது தொடர்பான தற்போதைய நிலைமை** |
|---|---|---|---|---|
| (அ) | 2018 பாதீட்டு முன்மொழிவினை இலத்திரனியல் மற்றும் அச்சீட்டு ஊடகங்கள் ஊடாக மக்களை அறிவூட்டுவதற்காகவும் அந்த அறிவித்தல் வடிைப்பு மற்றும் உற்பத்திக்காக 2018 ஆம் ஆண்டில் அமைச்சினால் ரூபா 73,892,963 செலவிடப்பட்டிருந்த போதும் விளம்பர செயற்பாட்டிற்குரிய விவரக் குறிப்புக்களைத் தயாரித்தல் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை பெற்றுக் கொள்ளல் அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக | 2022 மார்ச் 23 வரையில் அத்தவறைத் திருத்துவதற்காக பெறுகைகளை மேற்கொள்ளும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | அமைச்சினால் இரண்டு வருடம் ஊடக சுதந்திரத்தின் வேறுபாடு தொடர்பாக ஊடக நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்து வதற்கு பத்திரிகை விளம்பரம், தொலைக்காட்சி விளம்பரம் வெளியடல், சமூக ஊடக இணையத்தளங்களில் | அமைச்சின் நோக்கங்களுக்குரிய பிரகாரம் அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக | 2022 மார்ச் 23 வரையில் அத்தவறைத் திருத்துவதற்காக பெறுகைகளை மேற்கொள்ளும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | விளம்பரங்களை வெளியிடல் மற்றும் நிகழ்ச்சிகளை தயாரிப்பதற்காக அரசின் பெறுகை வழிகாட்டல் கோவை பின்பற்றப்படாமல் ரூபா 20,382,180 செலவிடப்பட்டிருந்தது. | | | |
| (இ) | 2019 ஆம் ஆண்டின் போது நிதி அமைச்சருடன் அமைச்சு உத்தியோகத்தர்கள் அமைச்சு பதவியணியினரால் வெவ்வேறு உள்நாட்டு வைபவங்கள் மற்றும் கூட்டங்களுக்காக பங்குபற்றுவதற்கான பயன்படுத்திய உள்ளூர் விமான சேவைகளுக்கு கட்டணங்களாக ரூபா 9,101,453 தொகை செலவிடப்பட்டிருந்தது. | அமைச்சருடன் அமைச்சு உத்தியோகத்தர்கள் / அமைச்சரவை பதவியணிக்கு விமான பயண சேவைகளை பயன்படுத்துவது தொடர்பாக நிதியமைச்சினால் ஆலோசனைகள் உள்ளடக்கப்பட்ட சுற்றறிக்கை வெளியிடப்பட வேண்டியமை | கௌரவ நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரின் கடமைகளுடன் ஒப்பிடும் போது தூர பிரயாணத்திற்காக நீண்ட நேரம் எடுப்பதும் பெருந்தெருக்கள் ஊடாக பயணம் செய்து நடைமுறை ரீதியாக சிக்கலொன்றாக உள்ளது. இச்சுற்றுலாக்கள் மிகவும் அவசரமானதும் மிகவும் அத்தியவசியமாக இருந்தமையாலும் கௌரவ அமைச்சரினதும் ஏனைய சிரேஷ்ட அரச உத்தியோகத்தர்களினதும் அவசர கடமையாக கருத்திற் கொண்டு மிக விரைவில் கொழும்புக்கு வரும் தேவைப்பாடு | 2022 மார்ச் 23 வரையில் அரச உத்தியோகத்தர்களுக்கு உள்நாட்டு வைபவங்களுக்காக விமான சேவைகளைப் பயன்படுத்துதல் தொடர்பான ஏற்பாடுகளை உள்ளடக்கியதாக அறிவுறுத்தல்கள் வெளியிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அத்தியவசியமாக இருப்பதால் இலங்கை விமானப் படையின் உப கம்பனியொன்றான Helitours (Pvt) Ltd. இடமிருந்து இச்சுற்றுலா விற்காக போக்குவரத்து வசதிகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |
| (ஈ) | 10 செலவின விடயங்களிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 5,050,000 தொகையான மொத்த தேறிய நிதியேற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.. | ஒதுக்கங்கள் செயற்திறனுடன் பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அவதானிப்புடன் இணங்குவதாக | 2021 ஆம் ஆண்டிலும் 32 செலவு விடயங்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள ரூபா 57,190,000 ஆன ஒதுக்கங்கள் முற்றாகச் சேமிக்கப்பட்டிருந்தது. |
| (உ) | 2020 திசெம்பர் 31 அளவில் நிலுவையாக இருந்த அரசாங்க உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளில் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக உள்ள மொத்தக் கடன்கள் ரூபா 920,110 ஆக காணப்பட்டது. | கடன் நிலுவைகள் தொடர்பான விடயங்களை புலனாய்வு செய்து அது தொடர்பாக தாமதமின்றி மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறவீடு செய்யப்பட முடியாத கடன்கள் நி.பி. 113 இன் பிரகாரம் விட்டுவிடுவதற்காக அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக அரச நிதித் திணைக்களத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன் உத்தியோகத்தர் ஒருவரின் கடன் கோவை கண்டுபிடிக்கப்பட்டி | 2021 திசெம்பர் 31 இல் நிலுவையான அரச உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளில் ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட கடன் மீதிகளில் கூட்டுத்தொகை ரூபா 556,146,000 ஆக இருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ருக்கவில்லை. மேலும் கடன்களை அறவீடு செய்வதற்காக மிகுதியாகவுள்ள கடன் தொகைகள் சட்ட அலுவல்கள் திணைக்களத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளன. | |
| (ஊ) | பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி பிரிவிலுள்ள 07 சந்தர்ப்பங்களின் கீழ் 05 ஆண்டுகள் மற்றும் 04 ஆண்டுகளிற்கு மேலாக காணப்படுகின்றதும் 54 உத்தியோகத்தர்களிமிருந்து அறவிடப்பட வேண்டியதுமான மொத்த நிலுவைக் கடன் மீதிகள் ரூபா 3,334,459 ஆக காணப்பட்டது. | கடன் நிலுவைகள் தொடர்பான விடயங்களை புலனாய்வு செய்து அது தொடர்பாக தாமதமின்றி மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இக் கடன் மீதிகள் பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி பிரிவில் பேணப்படுகின்ற முற்பணக் கணக்கிற்கு பொருந்துவதுடன் எதிர்காலத்தில் இக் கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டிய நபர்கள் பணிபுரியும் இடங்களை இனங்கண்டு கடன்களை அறவீடு செய்வதற்கு அல்லது நி.பி. 113(3) இன் பிரகாரம் அறவிடப்பட முடியாத கடன் நிலுவைகளை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2022 மார்ச் 23 வரையில குறிப்பிட்ட நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்குத் தவறியிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | அமைச்சிற்கு சொந்தமான 30 வாகனங்கள் முறையாக மாற்றப்படாமல் அவை ஏனைய நிறுவனங்களிற்கு கையளிக்கப்பட்டிருந்தன. | உரிய வாகனங்களை முறையாக மாற்றுவதற்கு அல்லது அவற்றை மீளவும் அமைச்சிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | ஒரு வாகனம் மட்டுமே முறையாகக் கையளிக்கப்பட்டிருந்தது டன் ஏனைய வாகனங்களை 2022 மார்ச் 23 வரையில் முறையாகக் கையளிப்பதற்குத் தவறியிருந்தது. |
| (ஏ) | 10 வாகனங்கள் முறையாக மாற்றப்படாமல் ஏனைய நிறுவனங்களிலிருந்து அவை அமைச்சிற்கு பெறப்பட்டிருந்தன. | உரிய வாகனங்களை முறையாக மாற்றுவதற்கு அல்லது அந் நிறுவனங்களிற்கு அவற்றை மீளளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | 09 வாகனங்கள் அமைச்சிற்கு கையளிக்கபபட்டிருந்தது டன் வாகனமொன்று வேறு அலுவலகத்திற்கு தற்காலிக அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. |
| (ஐ) | ஹில்ரன் ஹோட்டல் மற்றும் கிராண்ட் ஹயாட் கொழும்பு இன் பங்குரிமைகளை விற்பனை செய்வதற்கு 2018 யூலை 17 இல் அங்கீகரிக்கப்பட்ட கூட்டு அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் நியமனம் செய்யப்பட்ட பெறுகை தொடர்பான ஆலோசனைக் குழுவானது மதியுரையாளர்களாக பஹ்ரைன் மற்றும் இலங்கையின் எம்ரீஐ கென்சல்ரிங்கின் (MTI Consulting of Bahrain and Sri Lanka) துணைக்கம்பனியொன்றான சிங்கப்பூரின் லசாட் ஏசியாவை (Lazard Asia) தெரிவு செய்வதை | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | பரிந்துரைத்துள்ளது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | | |
| i. | மேற்படி மதியுரை நிறுவனத்துடன் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் மேற்குறிப்பிட்ட ஆலோசனை நிறுவனத்துடன் 2018 செப்தெம்பர் 27 இல் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் நான்கு மைல்கற்களின் (Milestone) கீழ் உரிய தொழிற்பாடுகளை இறுதிப்படுத்துவதற்கு இணங்கியிருந்த போதிலும் அவ் வேலை பூர்த்தி செய்தல் காலப்பகுதி உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையை முறையாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. | அவதானிப்புடன் இணங்குவதாக | 2022 மார்ச் 23 வரையில் காலப்பகுதியை ஒப்பந்தத்தில் சேர்க்கப்படுவதற்கான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |
| ii. | Lazard Asia நிறுவனம் மற்றும் MTI Consulting நிறுவனம் 04 இல் 02 மைல்கற்களை 2019 மே 07 இல் இறுதிப்படுத்தி முறையே ரூபா 13,032,986 (ஐ.அ.டொலர் 68523) மற்றும் ரூபா 4,628,607 தொகையான விலைப்பட்டியல்களை நிதி அமைச்சிற்கு சமர்ப்பித்திருந்ததுடன் , 19 மாதங்களுக்குப் பின்னர் 102-1-2-1409 (ஏனையவை) செலவு விடயத்தின் கீழ் 2020 திசெம்பர் 31 இல் ரூபா 17,500,000 தொகையான | உடன்படிக்கையின் பிரகாரம் செயலாற்றலை அடைவதற்காக குறிப்பட்ட பணம் சரியான நேரத்தில் கொடுப்பனவு செய்யப்படுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல். | அவதானிப்புடன் இணங்குவதாக | எஞ்சிய இரு மைல்கற்கள் இறுதிப்படுததப்பட்டதற்கான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | குறைநிரப்பு ஏற்பாட்டை மேற்கொள்வதன் மூலம் உரிய ஆலோசனை நிறுவனங்களிற்கு மேற்குறிப்பிட்ட ரூபா 17,661,593 மொத்தத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | | |
| (ஒ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிதி அமைச்சு சம்பளப்பட்டியல் அடிப்படையில் ஏனைய நிறுவனங்களில் பணியாற்றுவதற்காக 07 உத்தியோகத்தர்களை விடுவித்திருந்தது. | நிறுவனத்தின் வழமைக்கு மாறான செயற்பாடுகளிற்கு வளங்களை பயன்படுத்துவதை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிறுவனங்களின் கோரிக்கையின் அடிப்படையில் உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர். | 2022 மார்ச் 23 வரையில் உத்தியோகத்தர் ஒருவர் மட்டும் இந்த அமைசசிற்கு மீண்டும் விடுவிக்கப்பட்டிருந்தார். |

**3.5 தலைப்பு 413 – நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில்முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு**

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம் -

2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** | **நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்** | **அது தொடர்பான தற்போதைய நிலைமை** |
|---|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டின் போது மீண்டெழும் மற்றும் மூலதன செலவின விடயங்களில் 18 விடயங்களின் ஆரம்ப மதிப்பீட்டிற்கும் திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்கும் இடையே 99 சதவீதம் முதல் 433 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டன. | வருடாந்த மதிப்பீட்டை சாத்தியமானதாகவும் , ஆக்கபூர்வமானதாக வும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் கீழ் 2020 சனவரி முதல் ஆகஸ்ட் வரை செலவின தலைப்பு 104, பொருளாதார கொள்கை அபிவிருத்தி பிரிவின் கீழ் செலவிடப்பட்ட செலவினங்களை கணக்கீடு செய்வதற்காக அந்த பிரிவிற்குரிய நிதி ஏற்பாடு தவறுதலாக இந்த அமைச்சின் செலவின தலைப்பில் உள்ளடக்கப்பட்டிருந்து. | 2021 ஒக்டோபர் 06 ஆந் திகதிய 2248/35 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் இந்த இராஜாங்க அமைச்சின் செயற்பாடுகள் இரத்துச் செய்யப்பட்டு நிதி அமைச்சின் தலைப்பின் கீழ் மாற்றப்பட்டுள்ளது. |
| (ஆ) | 03 மூலதன செலவின விடயங்களுக்கும் 03 மீண்டெழும் செலவின விடயங்களுக்கும் வருடாந்த பாதீட்டில் ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஏற்பாடான ரூபா 2,540,000 தொகை முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | வருடாந்த மதிப்பீட்டை சாத்தியமானதாகவும் , ஆக்கபூர்வமானதாக வும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த இராஜாங்க அமைச்சு 2020 ஆகஸ்ட் மாதம் ஸ்தாபிக்கப்பட்டதுடன், தேசிய பாதீட்டு திணைக்களத்தினால் தீர்மானிக்கப்பட்ட மதிப்பீடொன்று இந்த 05 மாதங்களுக்காக வழங்கப்பட்டுள்ளதுடன், அதனால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது | 2021.10.6 ஆந் திகதிய 2248/35 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் இந்த இராஜாங்க அமைச்சின் செயற்பாடுகள் இரத்துச் செய்யப்பட்டு நிதி அமைச்சின் தலைப்பின் கீழ் மாற்றப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | என்பதை தயவுடன் அறியத்தருகின்றோம். | |
| (இ) | மீளாய்வாண்டின் போது 17 செலவின விடயங்களுக்காக ரூபா 16,820,000 மிகை நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையினால் அந்த நிதி ஏற்பாட்டை பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 8,221,133 தொகையான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்து. இந்த சேமிப்பு ஒதுக்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 28 சதவீதம் முதல் 84 சதவீதம் வரையிலான வீச்சினை கொண்டிருந்தது. | வருடாந்த மதிப்பீட்டை சாத்தியமானதாகவும், ஆக்கபூர்வமானதாகவும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த இராஜாங்க அமைச்சு 2020 ஆகஸ்ட் மாதம் ஸ்தாபிக்கப்பட்டதுடன், தேசிய பாதீட்டு திணைக்களத்தினால் தீர்மானிக்கப்பட்ட மதிப்பீடொன்று இந்த 05 மாதங்களுக்காக வழங்கப்பட்டுள்ளதுடன், அதனால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது என்பதை தயவுடன் அறியத்தருகின்றோம். | 2021.10.6 ஆந் திகதிய 2248/35 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் இந்த இராஜாங்க அமைச்சின் செயற்பாடுகள் இரத்துச் செய்யப்பட்டு நிதி அமைச்சின் தலைப்பின் கீழ் மாற்றப்பட்டுள்ளது. |

### 3.6 தலைப்பு 237 – தேசிய திட்டமிடல் திணைக்களம்

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம்

2018 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | செயல்நடவடிக்கை திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ள திட்டமிடல் நடைமுறையினை தயாரித்தல் (Preparation of Planning Techniques) எனும் செயற்பாடு 2018 ஆம் வருடத்திற்குள் மேற்கொள்ளப்படவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் செயற்பாடுகளை செயற்படுத்துவதன் மூலம் திணைக்களத்தின் செயற்திறன் மற்றும் வெற்றி நிரூபிக்கப்படுகின்றது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டமிடல் நடைமுறையை தயாரித்தல் (Preparation of Planning Techniques) தொடர்பாகத் தயாரிக்கப்பட்டிருந்த புத்தகத்தை நாளது வரையாக்கப்படுவதற்கு நிதி உதவிகள் வெளி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் பெற முடியாதிருந்தமையால் அப் பணியை செய்வதற்கு முடியாதிருந்தது. | 2022 மார்ச் 23 வரையில் திட்டமிடல் நடைமுறை தயாரிக்கப்படும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளுக்குரிய அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் நாளதுவரையாக்கப் பட்டிராததுடன், | பொருளாதாரத்திற்கு தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் வருடாந்தம் | குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்பிற்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை சரியானதாகும். பரிந்துரைகளை குறித்து வைத்துக்கொள்கின்றேன். | 2022 மார்ச் 23 வரையில் திணைக்களத்தின் பணிப்பொறுப்பு தொடர்பில் தெளிவுபடுத்தும் நிதிப் பிரமாணங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | அரசின் நிதிப் பிரமாணக் கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பொறுப்பு தொடர்பில் தெளிவுபடுத்தும் பிரமாணங்கள் நடைமுறைக்கு பொருத்தமான முறையில் திருத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது . | நாளதுவரையாதல்ட மற்றும் நிதிப்பிரமாணங்கள் காலத்திற்கு காலம் திருத்தப்படுகின்றமையால் அதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும்.. | | நடைமுறைக்கு பொருத்தமான முறையில் திருத்தப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | கடற்கரையின் மணலை வளப்படுத்தும் செயற்திட்டம் தொடர்பில் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் தேவைப்பபாட்டின் பிரகாரம் பொருத்தமான பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிராமையால் அவ்வாறானதொன்றை மேற்கொள்வதற்காக தொழில்நுட்ப உதவியினைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்திட்ட முன்மொழிவொன்று மற்றும் அதனை அடிப்படையாக | நிகழ்ச்சித்திட்டத்திற்கான நிதியேற்பாட்டினை மேற்கொள்வதற்கு முன்னர் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பரிந்துரையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்பிற்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை சரியானதாகும். பரிந்துரைகளை குறித்து வைத்துக்கொள்கின்றேன். | 2022 மார்ச் 23 வரையில் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் செயற்திட்டம் தொடர்பான ஒழுங்கு முறைகளை வலுப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கொண்ட புதிய செயற்திட்ட முன்மொழிவொன்றினை சமரப்பிக்குமாறு குறித்த திணைக்களத்தின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறானதொன்று இடம்பெற்றிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டதுடன் செயற்திட்டத்திற்காக பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டதன் பின்னர் அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தினன் பிரகாரம் பாதீட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், பரிந்துரைகளை முன்வைப்பதற்கு முன்னர் பாதீட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், அந்த செயற்திட்ட முன்மொழிவு காலத்திற்கு தேவையானதொன்றாக கருதி நடைமுறைப்படுத்தல் நிலைபேறான தீர்வொன்றாக அமையுமெனின் அந்த முன்மொழிவினை செயற்படுத்தல் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொடர்பில் எதிர்ப்பொன்று காணப்படவில்லை என தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் கருத்து தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் மூலம் தேவையான முடிவு தவறாகக்கூடும் என அவதானிக்கப்படுகின் றது. | | | |
| (ஈ) | திறைசேரியின் SA 92 கொண்ட திரட்டிய பொறுப்புக்கள் அறிக்கையில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 783,629 தொகைக்கான 04 பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காட்டப்பட்டிருக்கவில் லை. . | பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் உரிய முறையில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இதன் கீழ் காட்டப்பட்டுள்ள பொறுப்புக்கள CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் தவறுதலாக ஆகஸ்ட் மாதத்தில் உட்படுத்தப்பட்டிருந்த கொடுக்கல் வாங்கலாக இருந்ததுடன், அவை அம்மாதத்திலேயே கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் இந்த கொடுக்கல் வாங்கல் திசெம்பர் மாதம் CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் உட்படுத்தப் பட்டிருக்கவில்லை என SA 92 திறைசேரி அச்சுப் பிரதியில் காட்டப்பட்டுள்ள திகதிகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது . எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படாதிருப்பதற்காக ஆலோசனைகள் வழங்கப்பட்டிருந்ததென | CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பொறுப்புக்களுக்காக கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக பரீட்சிக்கப்பட்டதுடன் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் செயற்படுத்தப்பட்டுள்ள தா என்பது தொடர்பாக மேற்பார்வை செய்யப்படுகின்றது. இவ்வாறான சம்பவங்கள் அதற்குப் பின்னர் அறிக்கையிடப்படவில்லை ல. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கருணையுடன் அறிவிக்கின்றேன். | |
| (உ) | 2020 ஒக்தோபர் 09 திகதிய 2/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 3.4 இன் படி குறிப்பு இலக்கம் (iii) கீழ் காணப்படும் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் கீழ் காணப்படும் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் திறைசேரியினால் ஒவ்வொரு செலவுத் தலைப்பிற்கும் வழங்கும் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புகள் கூற்றுடன் இணங்கியிருக்க வேண்டியிருந்ததுடன், அவ்வாறு அறிவிக்கப்படாத ஏதேனும் ஈடுபாட்டுப் பொறுப்பொன்று முன்னைய ஆண்டிற்கான செலவு என நடைமுறை ஆண்டில் தீர்க்கப்படாதிருக்க வேண்டிய போதிலும் திறைசேரியின் SA 92 திரட்டிய பொறுப்புக்கள் அறிக்கையில் | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | ரூபா 264,291 இற்கான பொறுப்புக்கள் 2021 ஆண்டின் போது நி.பி. 94(1) மற்றும் (2) படி தீர்க்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் வருடத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படாது மொத்தம் ரூபா 776,593 ஆன பொறுப்புக்களுக்கு இணங்கியிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | காட்டப்பட்டிருக்காத கூட்டுத்தொகை ரூபா 264,291 இற்கான பொறுப்புக்கள் 2021 ஆண்டின் போது தீர்க்கப்பட்டிருந்தது. | | | |
| (ஊ) | நி.பி. 880 பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தரினால் பிணை வைப்புக்கள் வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | 2022 மார்ச் 23 வரையில் குறிப்பிட்ட உத்தியோகத்தரினால் பிணை வைப்புக்கள் வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | திணைக்களத்தின் வலைதளத்தில் 2020 ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயலாற்றல் அறிக்கை உட்படுத்தப்பட்டு நாளதுவரை ஆக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய மே 12 திகதி வரை 2018 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் 2017 ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கை உட்படுத்தப்பட்டிருந்தன என அவதானிக்கப்பட்டது. | வலைதளம் உரிய முறையில் நாளதுவரை ஆக்கப்பட வேண்டிய தேவை. | வலைதளம் உரிய முறையில் நாளதுவரை ஆக்குவதற்கு குறித்துக் கொண்டேன். | 2022 மார்ச் 23 வரையில் 2020 ஆம் வருடம் வரையில் திணைக்களத்தின் செயலாற்றல் அறிக்கை வலைத் தளத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் வருடத்தின் பின்னர் செயல் நடவடிக்கைத் திட்டம் வலைத் தளத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. . |
| (ஏ) | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் அதன் கீழான சுட்டிகளை | நெருங்கக் கூடிய நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் தொடர்பாக கவனம் | தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அடிப்படை பணிப்பொறுப்பு தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 2022 மார்ச் 22 வரையில் குறிக்கோள் இனங் காணப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | முதன்மைப்படுத்தி நிறுவனத்தின் குறிக்கோள் மற்றும் சுட்டிகளை இனங்காணல் மற்றும் நெருங்குதல் தொடர்பாக திணைக்களம் கவனம் செலுத்த வேண்டியிருந்த போதிலும், அதன் படி மீளாய்வாண்டில் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக செயற்பட்டிருந்தமை கணக்காய்விற்கு விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | செலுத்தி குறிப்பிட்ட திட்டங்களை தயாரித்தல் மற்றும் குறிக்கோள்களை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல். | (National Development Framework) தயாரித்தல் மற்றும் அதனை கடைபிடித்து உரிய அமைச்சுடன் கொள்கைத் தீர்மானம் மற்றும் அந்த அமைச்சுக்களினால் தயாரிக்கப்படும் செயற்திட்ட பிரேரணைகளை மதிப்பீடு செய்தலாகும். அதன்படி தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால், அரச அபிவிருத்தி கொள்கைகள் சட்டகம் தயாரிக்கும் போது நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் குறிக்கோள்களுக்கு கவனம் செலுத்தப்பட்டது. அதேபோல், இந்த நிறுவனம் செயற்திட்டங்களை மதிப்பீடு செய்யும் போதும் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள் மற்றும் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு கொள்கை அடிப்படையில் தொடர்ச்சியாக பங்களிப்பு வழங்கும் நிறுவனமொன்றாகும். | எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியிலுள்ள 118 பதவிகளில் 25 பதவிகள் வெற்றிடமாக காணப்படுவதனால் அவை அங்கீகரிப்பட்ட | திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை முறைப்பிரகாரம் நடாத்திச் செல்வதற்கு செயற்பட வேண்டும். | திணைக்களத்திற்கு தேவையான இடவசதிகளை வழங்கும் படி பல சந்தர்ப்பங்களில் நிதியமைச்சிடம் வேண்டுகோள் சமர்ப்பிக்கப்பட்டது. இட வசதிகள் கிடைத்த பின்னர் வெற்றிடங்களை | 2021 திசெம்பர் 31 வரையில் 10 வெற்றிடங்கள் காணப்பட்டன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பதவியணியில் 21 சதவீதமாக காணப்பட்டதுடன், சிரேஷ்ட மட்டத்தை சேர்ந்த பணிப்பாளர் பதவிகள் 05 உம், உதவிப் பணிப்பாளர் / பிரதிப் பணிப்பாளர் 06 பதவிகளும் உட்பட 11 பதவிகள் பல வருட காலமாக வெற்றிடமாக காணப்படுவதுடன், ஆட்சேர்ப்பதற்காக போதியளவு இடவசதிகள் காணப்படவில்லை என திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலைமை திணைக்களத்தின் செயலாற்றுகையை பாராட்டக்கூடிய மட்டத்தில் வைத்திருப்பதில் பாதிக்கக்கூடியதாக இருந்தது என அவதானிக்கப்பட்டது. | | நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஓ) | தாபனக் கோவையின் பிரிவு 13.3 இன் பிரகாரம், பதவியொன்றிற்கு முழு நேர அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவரின் சேவை தேவையெனின், நிரந்தர நியமனம் தாமதம் இன்றி | திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை முறைப் பிரகாரம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல | திணைக்களத்தின் நூலகர் பதவியின் வெற்றிடத்தை நிரப்புவதற்காக அரச சேவை அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | 2022 மார்ச் 23 வரையில் நூலகர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செயற்பட வேண்டும் எனினும், திணைக்களத்தின் நூலகர் பதவி 08 வருடங்களை மிகையான காலம் வெற்றிடமாக காணப்படுகின்றதென அவதானிக்கப்பட்டது. | | | |

**3.7 தலைப்பு 238 – அரசாங்க நிதிக் கொள்கைத் திணைக்களம்**

நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்** | **நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடைமுறைகள்** | **அது தொடர்பிலான தற்போதைய நிலைமை** |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 756 மற்றும் 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.1.5 ஆம் பந்தியின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு வழங்கப்பட்ட கணிப்பீட்டு அறிக்கையில் காண்பிக்கப்பட்ட பரிந்துரை கணக்காய்வு திகதியான 2018 ஏப்ரல் 19 ஆந் திகதி வரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் துரிதமாக செயற்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் சுற்றறிக்கை பிரகாரம் பொருள் மெய்மையாய்வு அறிக்கை பூர்த்தி செய்வதாக குறிப்பிடுகின்றேன். | 2020 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பரிந்துரைகள் 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | மீண்டுவரும் செலவில் 2006/2007 ஆம் ஆண்டுகளில் சிங்கப்பூரில் நடைபெற்ற சர்வதேச நீதிமன்றத்தில் ஒரு தனியார் கம்பனியின் பிணக்கினைத் தீர்த்து வைப்பது தொடர்பாக | வருடாந்த மதிப்பீட்டினை நடைமுறைச் சாத்தியமாகவும் ஆக்கபூர்வமான தாகவும் தயாரிப்பதற்குத் தேவையான | இதற்காக சர்வதேச நீதிமன்ற தீர்ப்புக்கு இணங்க உரிய கம்பனியுடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டியிருந்தது எனவும் அதுவரை | 2021 ஆம் ஆண்டின் போது இதற்காக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலுத்த வேண்டிய பணமாக ரூபா 1,670,000,000 நிதி ஏற்பாடு ஒதுக்கீடு 2019 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டின் இறுதியில் அந்த நிதிஏற்பாடு முழுவதும் பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது. | முயற்சிகள் எடுத்தல் அத்தியாவசியமான தாகும். | உடன்படிக்கை செய்து கொள்ளப்படாததனால் அப்பணத்தை செலுத்துவதற்காக முன்வந்திருக்காததனால் கொடுப்பனவிற்காக முன்வரும் வரை அதற்காக வருடாந்தம் நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்ய வேண்டியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. | |
| (இ) | வரி வருமானத்தின் கீழுள்ள மதுபான வரி வருமானத்தில் 1994 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையான ரூபா 986,683,292 நிலுவை வருமானத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அல்லது திணைக்களத்தால் அது தொடர்பாக மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுக்க வேண்டும். | மதுவரித் திணைக்களத்தினால் இந்நிலுவை வரிப் பணத்தை அறவீடு செய்வதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடப்பட்டிருந்தது. | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் நிலுவைப் பணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | தெரிவுப் பரிசோதனையின் போது 12 திணைக்களங்கள் தொடர்பாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,684,742,481 திரண்ட நிலுவைப் பணமும் 2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 813,737,824 நிலுவைப் பணமும் 2019 ஆம் | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுக்க வேண்டும். | அரசாங்கத்தின் வரி மற்றும் வரியற்ற வருமானங்களுக்காக இதுவரையுள்ள அனைத்து வருமானக் குறியீடுகள் மற்றும் தொடர்புபட்ட நிலுவை வருமானங்கள் சம்பந்தமாக இதுவரை திணைக்களத்தினால் | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் நிலுவை வருமானங்களை துரிதமான அறவிடுவதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆண்டிற்காக ரூபா 938,291,785 நிலுவைப் பணமுமாக ரூபா 5,434,916,146 மொத்த தொகையான நிலுவைப் பணமும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | | தேவையான மேலதிக கொள்கை ரீதியான தீர்மானங்கள் எடுப்பதனை முன்னிட்டு விபரமான பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாகவும் இதன் போது விசேட கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. | |
| (உ) | இலங்கை விமானப் படைத் திணைக்களத்தினால் 20.03.06.00 ஆம் இலக்க வருமானக் குறியீட்டின் கீழ் ஐக்கிய நாடுகளின் சமாதான செயற்பாட்டுக் கடமைகளின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அமெரிக்க டொலர் 1,544,118 தொகையான திரண்ட நிலுவைப் பணமும் 2018 ஆம் ஆண்டிற்காக அமெரிக்க டொலர் 3,228,591 தொகையான நிலுவைப் பணமும் 2019 ஆம் ஆண்டிற்காக அமெரிக்க டொலர் 7,271,434 தொகையான நிலுவைப் பணமும் ஆக அமெரிக்க டொலர் 12,044,143 மொத்த தொகையான நிலுவைப் பணம் காணப்பட்டமை | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுக்க வேண்டும். | அரசாங்கத்தின் வரி மற்றும் வரியற்ற வருமானங்களுக்காக இதுவரையுள்ள அனைத்து வருமானக் குறியீடுகள் மற்றும் தொடர்புபட்ட நிலுவை வருமானங்கள் சம்பந்தமாக இதுவரை திணைக்களத்தினால் தேவையான மேலதிக கொள்கை ரீதியான தீர்மானங்கள் எடுப்பதனை முன்னிட்டு விபரமான பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாகவும் இதன் போது விசேட கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் நிலுவை வருமானங்களை துரிதமான அறவிடுவதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. | | | |
| (ஊ) | திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் உள்ள வருமானக் குறியீடு 1002.10.00 இன் கீழ் சமூக பொறுப்பு வரியின் கீழ் ரூபா 64,630,699 நிலுவை மீதியொன்று காணப்பட்டது. 2020 ஆம் ஆண்டின் போது அவற்றுள் ரூபா 15,838 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் இது அறவிடப்பட வேண்டிய மொத்த தொகையில் 0.025 சதவீதமாக காணப்பட்டது. | நிதிப் பிரமாணம் 128(உ) இன் பிரகாரம் தாமதமின்றி வருமான நிலுவைகளை சேகரித்தல் வேண்டும். | நிலுவையாகவுள்ள வருமானங்கள் தொடர்பான அறிக்கைகள் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு அரையாண்டு ரீதியாக தொடர்ச்சியாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது டன் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் அத்தகைய அறிக்கைகளை வழங்குமாறு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் சுங்கத் திணைக்களத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. நான் இதனை பெற்றுக்கொண்டதும் தங்களிற்கு அனுப்புவதுடன் இது தொடர்பான நினைவூட்டல் ஒன்றையும் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 5,820 ஆன வருமானம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் , ரூபா 1,449,239 ஆன நிலுவை வருமானம் பதிவழிக்கப்பட்டிருந்தது. |
| (எ) | திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட 56 பதவிகள் காணப்பட்டதுடன் உள்ளபடியான பதவியணியினர் 50 ஆகும். அதற்கிணங்க 06 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் இது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 11 சதவீதமாக காணப்பட்டது. | திணைக்களத்திற்கு தேவையான பதவியணியினரை முறையாக பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல். | புதிய பதவியணியினரின் பிரகாரம் திணைக்களத்தின் பணிப்பாளர் பதவி ஏற்கனவே நிரப்பப்பட்டுள்ளது. புதிய பதவியணியினரின் கீழ் நிர்வாக சேவையில் 06 அங்கீகரிக்கப்பட்ட | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக 06 பதவி வெற்றிடங்கள் நிலவின. சிரேஷ்ட மட்டத்திலான மேலதிக பணிப்பாளர் நாயகம் திறந்த பதவியை கீழ் ஒடுக்குமாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேலும் வெற்றிடங்களினுள் சிரேஷ்ட நிலை பதவிகளில் 04 வெற்றிடங்கள் காணப்பட்டன. | | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் பதவிகள் காணப்பட்டதுடன் அவற்றில் 04 ஏற்கனவே நிரப்பப்பட்டுள்ளன. அலுவலக அறைகளை நிர்மாணிப்பதற்கான பூர்வாங்கப் பணிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளதால் அலுவலக அறைகள் நிர்மாணிக்கப்பட்டவுடன் இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகளை எடுப்பேன். | அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஏ) | மூன்றாம் மட்டத்திலுள்ள மொழிபெயர்ப்பாளர் (ஆங்கிலம்/ சிங்களம்) பதவி ஏறத்தாழ 04 ஆண்டுகளாக வெற்றிடமாக உள்ளமை அவதானிக்கப்பட்டது. | தேவையானவாறு உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல். | அலுவலக அறைகளை நிர்மாணிப்பதற்கான பூர்வாங்கப் பணிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளதால் அலுவலக அறைகள் நிர்மாணிக்கப்பட்டவுடன் இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகளை எடுப்பேன். | மொழிபெயர்ப்பாளர்களை ஒடுக்குமாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

**3.8 தலைப்பு 239 – வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்**

நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்** | **நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடைமுறைகள்** | **அது தொடர்பிலான தற்போதைய நிலைமை** |
|---|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டுக்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், 2018 ஆம் ஆண்டினுள் புதிய கடன் உடன்படிக்கையின் மூலம் ஐ.அ.டொலர் 2,004 மில்லியனான நிதியினை பெற்றுக்கொள்ள எதிர்பார்த்திருந்த போதிலும், 2018 ஆம் ஆண்டின் போது 40 கடன் உடன்படிக்கைகளுக்கு தொடர்புடையதாக கைச்சாத்திடப்பட்டிருந்த நிதியீட்டல் இணக்கப்பாடுகளின் பெறுமதி ஐ.அ.டொலர் 1,242 மில்லியன் ஆகும். அவற்றுக்கிடையே உலக வங்கி, சீனா, யப்பான் மற்றும் கொரியா ஆகிய நாடுகளிலிருந்து பெற்றுக்கொள்ள | முடியுமான அளவில் எதிர்பார்த்தவாறு இலக்குகளை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | உங்கள் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உண்மையாவதுடன், அதற்கான காரணங்கள் நடைமுறைக்கு சாத்தியமான மற்றும் எமது விடயப்பரப்பிற்க அப்பாற்பட்ட அரசியல் மாற்றங்கள், சட்டச் சிக்கல்கள் மற்றும் மூலோபாய முடிவுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் ஆகியவற்றின் காரணமாக, 2018 இல் திட்டமிட்டபடி ஒப்பந்தங்களில் கையெழுத்திட முடியவில்லை. | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், நிலவிய அரசு மற்றும் அமைச்சரவையின் சில தீர்மானங்களின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எதிர்பார்த்துள்ள நிதியத்தின் அளவானது முறையே ஐ.அ.டொ. 200, 400, 500 மற்றும் 40 மில்லியனாக காணப்பட்டதுடன், 2018 ஆம் ஆண்டினுள் முறையே ஐ.அ.டொ. 104, 165, 98 மற்றும் 22 மில்லியனான நிதியினைப் பெற்றுக்கொள்ள முடியுமானதாக இருந்தது. | | | |
| (ஆ) | கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கடன் உடன்படிக்கைகளுக்காக கைச்சாத்திடப்பட்டிருந்த கருத்திற்கொள்ளக்கூடிய அளவில் காலம் கடந்திருந்த போதிலும், அது தொடர்பில் செயற்திட்டம் 2018 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | | |
| (i) | **கடன் இலக்கம் 2014023**<br><br>புவியியல் தொலைக்காட்சி நிலைமாற்றல் டிஜிட்டல் மயப்படுத்தும் செயற்திட்டம் - 2014.09.323 | ஒப்பந்த திட்டங்களை விரைந்து செயல்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2014 செப்தம்பர் 24 ஆந் திகதி செயற்திட்டத்திற்காக கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இதுவரையிலும், JICA நிறுவனத்தின் கடன் உடன்படிக்கையை திருத்தும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டிருக்கவி | கடன் ஒப்பந்தத்தின் கடன் பயன்பாட்டு காலம் 2028 டிசம்பர் 17 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ல்லை. | |
| (ii) | **கடன் இலக்கம் 2014039**<br><br>ருவன்வெல்ல நீர் விநியோகச் செயற்திட்டம் - 2014.12.30 | -மேற்படி- | குறித்த கடன் உடன்படிக்கைக்கு 2014 திசெம்பர் மாதத்தில் கைச்சாத்திடப்பட்டது. விலைக்கேள்வியானது செயற்திட்டத்தின் பொறியியல் மதிப்பீட்டினை விட உயர்வான பெறுமதியினை கொண்டிருந்த காரணத்தால் இரு தரப்பினருக்கிடையே இறுதி இணக்கப்பாடு ஏற்பட்டிருக்கவில்லை. | சிவில் ஒப்பந்தத்திற்கான நிலுவைத் தொகை இலங்கை அரசினால் மேற்கொள்ள இணங்கியிருந்ததுடன், 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் செயற்திட்டத்தின் 20 சதவீதமான பணி மாத்திரம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. |
| (iii) | **கடன் இலக்கம் 2013052**<br><br>பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு | -மேற்படி- | இது வட்டியற்ற கடனாவதுடன், சிக்கல் எதுவுமற்ற செயற்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த சீன தூதரகம் இணக்கப்பாட்டினை எதிர்பார்த்தவாறு இருந்தது. | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | **கடன் இலக்கம் 2014021**<br><br>திறன்கள் அபிவிருத்திச் செயற்திட்டம் (பீ பிரிவு) – 2014.09.12 | -மேற்படி- | பலமுறை கலந்துரையாடல்கள் நடத்தப்பட்ட போதிலும், திறன் அபிவிருத்தி அமைச்சின் செயற்பாடுகளில் வெளிநாட்டு அபிவிருத்தி பங்குதாரர்கள் திருப்தி அடையும் வரை உரிய பணம் முறையாகப் பயன்படுத்தப்படவில்லை. | இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், பயன்படுத்தப்படாத நிதி இரத்து செய்யப்பட்டுள்ளது. |
| (இ) | நிதி அமைச்சின் செலவில் | திணைக்களத்திற்குரிய சொத்துக்களை | திணைக்களத்தின் நவீனமயப்படுத்தல் | 2020 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட புதுப்பித்தல் பணிகளின் கூட்டுத்தொகை ரூபா 22,160,324 பெறுமதியுடன் கூடிய சொத்துக்கள் முறையாக திணைக்களத்திற்கு பொறுப்பேற்று பதிவேடுகளுக்கு உட்படுத்துவதற்கு 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்றல் மற்றும் பதிவேடுகளுக்கு உட்படுத்தலை விரைவுபடுத்த வேண்டியமை. | செயற்பாடுகள் நிதி அமைச்சின் செலவில் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் நிதி அமைச்சினால் தேவையான ஆவணங்கள் முறைப்படி இத்திணைக்களத்திற்கு 2020.12.31 இற்கு முன்னர் கையளிக்காமையால் அவற்றை பரீட்சித்து திணைக்களத்தின் புத்தகங்களுக்கு உட்படுத்தும் செயற்பாடுகள் தாமதமாகின. அச்செயற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | குறித்த சொத்துக்களை சுவீகரிக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | அரசாங்க கடன்களின் தரவுத் தளத்தை பராமரிப்பது திணைக்களத்தின் முக்கிய பணியாக இருந்தது. அக்கடனைப் பெற்றுக்கொள்ளல், திருப்பிச் செலுத்துதல் மற்றும் சேவை செய்தல் முறைமையில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் மற்றும் அது தொடர்பான ஏனைய தரப்பினரின் தகவல் தொடர்பான கணனியில் உள்ள தகவல்களை ஒரே நேரத்தில் புதுப்பிக்கும் வகையில் முறைமை உருவாக்கப்படாததால், அந்தத் தரப்பினர் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் திணைக்களத்தின் தகவல்களில் பின்வரும் வேறுபாடுகள் காணப்பட்டன. | | | |
| (i) | இலங்கை மத்திய வங்கியின் பொதுக் கடன் திணைக்களத்தில் உள்ள வெளிநாட்டுக் கடன் சேவைகளுக்குரிய ரூபா 222.6 மில்லியன் பெறுமதி திணைக்கள முறைமையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து தொடர்புடைய தரப்பினருடனும் சரியாகவும் நாளதுவரையான தகவல்கள் உள்ளடக்கிய முறைமையொன்றை அபிவிருத்தி பேணிச்செல்லல் வேண்டும். | 02 கடன் தொகைளுக்கு செலுத்தப்படும் முகவர் மற்றும் பிணை பொறுப்புக் கட்டணங்கள் வெவ்வேறு வகையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் ஏனைய கடன் கடன் ஒப்பந்தங்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் நேரடியாக ஒப்பந்தம் செய்யப்பட்ட திட்டங்களாகும். அதனுடன் தொடர்புடைய கடப்பாட்டுக் கட்டணங்கள் முறையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. | நிதி போக்குவரத்து முகாமைத்துவ மற்றும் கணக்கீட்டின் அடிப்படையில் (CS DRMS) தரவுக் கட்டமைப்பு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | திணைக்களத்தின் முறைமையில் உள்ளடக்கப்பட்ட வெளிநாட்டு கடன் சேவைக்குரிய ரூபா 461 மில்லியன் பெறுமதியொன்று இலங்கை மத்திய வங்கியின் அரச கடன் திணைக்களத்தின் தகவல்களில் வில்லை. | - மேற்படி - | ஒப்பந்தத்தின் படி, இக்கடனிற்காக பயன்பாட்டுக் காலத்தில் வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் மூலதனமாக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் அந்நிறுவனங்களுக்குரிய மூலதனமாக்கப்பட்ட கடப்பாட்டுக் கட்டணங்கள் முறைமையில் சேர்க்கப்பட்ட போதும் பணம் செலுத்தாததன் | காசாக செலுத்தப்படாமையால் இது இலங்கை மத்திய வங்கியின் அரச கடன் திணைக்களத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | காரணமாக அவை மத்திய வங்கியின் தகவலில் உள்ளடக்கப்படவில்லை. | |
| (உ) | வெளிநாட்டு உதவிகளைப் பெறுதல் மற்றும் செயற்திறனாகப் பயன்படுத்துதல் தொடர்பாக திணைக்களத்தினால் உரிய தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்துவது திணைக்களத்தின் பிரதான செயற்பாடாக இருந்த போதிலும், இது தொடர்பில் பொது திறைசேரியால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் காணப்பட்டது. | | | |
| (i) | 1994 ஏப்ரல் 20 ஆந் திகதிய 30/94 ஆம் இலக்க வெளிநாட்டு உதவி கணக்கு வைப்பிற்குரிய அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிநாட்டு உதவி தொடர்பாக அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் பொது திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த | அனைத்து தொடர்புடைய தரப்பினருடனும் சரியாகவும் நாளதுவரையான தகவல்கள் உள்ளடக்கிய முறைமையொன்றை அபிவிருத்தி பேணிச்செல்லல் வேண்டும். | இந்த திணைக்களத்தின் மூலம் மற்றும் ஏனைய அனைத்து திணைக்களங்கள் மற்றும் கூட்டிணைப்புடன் அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங் களுக்கு வெளிநாட்டு மானியங்களைப் பெறுவதற்கான சரியான வழிமுறையை அறிந்து அதற்கேற்ப செயற்படுமாறு சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களின்படி செயல்பட வேண்டும் என்பதுடன், அதை உறுதிப்படுத்துவது சம்பந்தப்பட்ட வரிசை அமைச்சின் செயலாளரின் பொறுப்பாகும், ஆனால் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் இது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | போதும் தெரிவு பரிசோதனையின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பொது திறைசேரியின் அறிவூட்டலொன்று இல்லாமல் 24 நிறுவனங்களினால் 77 செயற்திட்டங்களுக்காக ரூபா 2,026 மில்லியன் வெளிநாட்டு மானியங்கள் நேரடியாக நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | | | |
| (ii) | அவ்வாறே தெரிவு அடிப்படையில் பெற்றுக்கொண்ட தகவல்களின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் அவ்வாறு பொது திறைசேரிக்கு அறிவிக்காமல் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களால் மொத்தம் ரூபா 1,266 மில்லியனானன வெளிநாட்டு உதவிகள் நேரடியாக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. | - மேற்படி - | உரிய சுற்றறிக்கைளின் பிரகாரம் நிதிஏற்பாடுகளைப் பெற்றுக் கொள்வது அமைச்சு செயலாளரின் பொறுப்பாகும். | - மேற்படி - |
| (ஊ) | திணைக்களத்தின் பிரதான நோக்கங்களுக்கு இடையே முன்னனி துறை அபிவிருத்தி நிதியளிப்பதற்காக ஏற்கக் கூடிய | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | கிரயமொன்றின் கீழ் வெளிநாட்டுக் கடன் பெற்றுக் கொள்வதற்கும் வெளிநாட்டுக் கடனை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துவதற்காக வசதிகள் செய்தல் உட்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட பின்வரும் விடயங்கள் காரணமாக அந்நோக்கங்களை அடைந்து கொள்ளும் போது திணைக்களத்தின் ஈடுபாட்டில்லாமல் எவ்வளவு தூரம் வெற்றியளிக்கும் என்பது தொடர்பாக கணக்காய்வில் கேள்விக்குரியாக இருந்தது. | | | |
| (i) | 2020 ஆம் ஆண்டில் உடன்படிக்கை செய்யப்பட்டு பெற்றுக்கொண்ட வெளிநாட்டுக் கடன்களின் பெறுமதி 1,281.1 மில்லியன் அ.டொ. கடனாக இருந்ததுடன் அதில் 39 சதவீதம் சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக் கொண்ட 500 மில்லியன் அ.டொ. கடன் சந்தை கடனாக இருந்ததமை | அனைத்து தொடர்புடைய தரப்பினருடனும் சரியாகவும் நாளதுவரையான தகவல்கள் உள்ளடக்கிய முறைமையொன்றை அபிவிருத்தி பேணிச்செல்லல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டு முழுவதும் காணப்பட்ட கோவிட் தொற்றுநோய் நிலைமை உட்பட நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும் பிற காரணிகள் காரணமாக மிகவும் விரிவான நாட்டின் சென்மதி நிலுவை பற்றாக்குறையை தீர்வுசெய்தல் உட்பட விடயங்களுக்காக ரூபா 500 மில்லியன் அ.டொ கடன் வசதியை பெற்றுக் | வரவு செலவுத் திட்டத்தை நிதியீட்டம் செய்வதற்காக சந்தைக் கடன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. | | கொள்வதற்காக அமைச்சரவையால் வழங்கப்பட்ட ஆலோசணையின் பிரகாரம் நிதி அமைச்சிற்காக இத்திணைக்களத்தினால் உரிய நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டுள்ளது | |
| (ii) | 2020 ஆம் ஆண்டில் 4,057.9 மில்லியன் அ.டொ. கடனிற்காக சேவை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் அதில் 1,419.4 மில்லியன் அ.டொ. அதாவது 35 சதவீதம் மாத்திரம் கடன் வட்டி கொடுப்பனவாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாண்டில் உடன்படிக்கை செய்து பெற்றுக்கொண்ட வெளிநாட்டுக் கடன் மிக உயர்ந்த பெறுமதியொன்றை எடுத்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | 2020 ஆம் ஆண்டின் இறுதி வெளிநாட்டுக் கடன் அளவு 35 மில்லியன் அ.டொ. இற்கு அண்மித்ததாக இருந்தன. அதன் பிரகாரம் வருடாந்தம் செலுத்த வேண்டிய வட்டி அளவு தற்போது அதிகரித்துள்ளது. | வருடாந்தம் பெறப்படும் கடனின் அளவு அதிகரிப்பால், வருடாந்தம் எடுக்கப்படும் கடனை விட வட்டியின் அளவு அதிகரித்திருந்தது. |
| (iii) | வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுக் கொள்ளும் போது உடன்படிக்கை செய்த தொகையில் பயன்படுத்தாத பெறுமதிக்காக உடன்படிக்கையின் பிரகாரம் அநேகமான சந்தர்ப்பங்களில் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | அரசினால் பாரியளவு செலவினமொன்று மேற்கொள்ளப்படுவதாக அவதானிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக உடன்படிக்கை பிரகாரம் உரிய காலப்பகுதியில் கடன்தொகை பெற்றுக்கொண்டு உரிய செயற்திட்டத்திற்கு ஈடுபடுத்தி அச்செயற்திட்டத்திலிருந்து கிடைக்கும் நலன்களிலிருந்து கடன் வட்டி மற்றும் தவணைக் கொடுப்பனவு வினைத்திறனாக கடன் முகாமைத்துவம் மூலம் இடம்பெற வேண்டிய போதிலும் வெளிநாட்டுக் கடன் பெற்றுக் கொள்வது தொடர்பாக தெரிவு பரிசோதனையின் போது அவ்வாறு இடம்பெறாத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. | | | |
| * | **கடன் இலக்கம் 2015025** மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டத்தை நடை முறைப்படுத்துவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 76 மில்லியன் அ.டொ. 05 ஆண்டு சலுகை காலத்துடன் 26 ஆண்டுகளில் கொடுப்பனவு செய்யும் | உடன்படிக்கை செய்த கடன்தொகையை செயற்திறனாகவும் விரைவாகவும் பயன்படுத்துவதன் மூலம் அரசிற்கு ஏற்க வேண்டிய மேலதிக செலவினத்தை குறைத்துக் கொள்ளல் | தகைமையுடைய ஒப்பந்தக்காரரிடம் போதியளவு நிதி இயலளவு இல்லாமையால் 2020 இ திசெம்பரில் மற்றொரு நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. அதன்படி, திட்டமிட்டபடி முன்னேற்றம் இல்லாததால் ஒப்பந்ததாரர்களின் செயன் முன்னேற்றத்தை | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மொத்த பௌதீக செயன்முன்னேற்றம் 29 சதவீதமாக காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு 2015 ஆம் ஆண்டு செப்தெம்பர் 17 ஆம் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டது. அக்கடன் தொகையில் பயன்படுத்தாத கடனுக்காக தொகைக்கு 0.15 சதவீதமான பொறுப்புக் கட்டணத்தைச் செலுத்த ஒப்புக் கொண்டது.<br><br>கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பிரகாரம், 2020 ஜுன் 20 ஆந் திகதி அளவில் கடனைப் பெற்று பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அக் கடன் தொகையில் 31,973,267 மில்லியன் அ.டொ. மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது . அதன்படி, கடன் தொகையில் 58 சதவீதம் அல்லது 44,026,733 அ.டொ. பயன்படுத்தப்பட வில்லை. அதற்காக 0.15% பொறுப்புக் கட்டணமாக, 2020 ஜுன் மற்றும் திசெம்பர் மாதங்களில் ரூபா 14,410,871 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. | | திட்டமிடப்பட்ட திகதியில் அடைந்து கொள்ள முடியவில்லை. | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| * | **கடன் இலக்கம் 2015019**<br><br>படல்கம பால் விநியோக நிலையத்தை நிறுவுவதற்கான திட்டச் செலவுக்கு நிதியளிப்பதற்காக HSBC வங்கியிலிருந்து ஏற்றுமதி கடன் வசதியின் கீழ் 56,580,214 ஆன கடனை 03 வருட சலுகை காலத்துடனும் 13 வருட திருப்பிச் செலுத்தும் காலத்துடன் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இக்கடன் தொகையில் பயன்படுத்தாத மீதிக்காக வருடாந்தம் 0.5 சதவீத இணக்கப்பாட்டுக் கட்டணத்தின் கீழ் பெற்றுக்கொள்வதற்கும் அவ்வாறே 9,975,863 யூரோ கடன்தொகையொன்று 02 வருட சலுகை காலத்துடன் 06 ஆண்டு திருப்பிச் செலுத்தும் காலத்துடன் பெற்றுக் கொள்வதற்கும் 2015 ஆகஸ்ட் 14 ஆந் திகதி உடன்படிக்கையொன்று செய்யப்பட்டிருந்தது.<br><br>கணக்காய்விற்கு | - மேற்படி - | காணிகளை கையேற்பதில் ஏற்பட்ட தாமதம், இயந்திரங்களை நிர்மாண இடத்தை அடைவதில் தாமதம் மற்றும் கோவிட்-19 தொற்றுநோய் போன்ற காரணங்களால் செயற்திட்டத்தை குறித்த நேரத்தில் பூர்த்தி செய்ய முடியவில்லை. | இந்த செயற்திட்டம் 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் 90 சதவீதம் வரையான செயன்முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டிருந் ததுடன், செயற்திட்டம் 2022 ஆம் ஆண்டினுள் நிறைவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பிரகாரம், 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அக் கடன் தொகையில் 59,190,497 யூரோ மாத்திரம் பயன்படுத்தப் பட்டிருந்ததுடன் அத்திகதியில் பயன்படுத்தப்படாத பெறுமதி 7,365,580 யூரோ ஆக இருந்தது. அதன் பிரகாரம் பயன்படுத்தப்படாத அப்பெறுமதிக்காக உடன்படிக்கை பிரகாரம் 0.5 சதவீதம் வருடாந்த இணக்கப்பாட்டுக் கட்டணமாக ரூபா 7,890,913 தொகை மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | | |
| (எ) | இலங்கை அரசின் கொள்கை ரீதியான தீர்மானத்தின் பிரகாரம் 2019011 ஆம் இலக்க "இலகு புகையிரத சேவை முறைமை" செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | | |
| (i) | குறித்த கடன் உடன்படிக்கை முடிவடைந்த காரணத்தினால் அச்செயற்திட்டத்திற்குரிய (முன்னைய | சரியான ஆய்வுகள் மற்றும் பகுப்பாய்வு அடிப்படையில் செயற்திட்டங்கள் மற்றும் செயற்திறனான | கடன் தொகையை மீளச் செலுத்தும் சந்தர்ப்பத்தில் இது தொடர்பாக கலந்துரையாடி இணக்கப்பாட்டிற்கு வர | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் செயற்திட்ட அலுவலகமும் மூடப்பட்டிருந்ததுடன், செயற்திட்டத்தின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | கட்டணங்கள் (Front End Fee) என ஏற்கனவே செலவிடப்பட்டுள்ள 60,080,000 யப்பான் யென் ¥ தொகை தொடர்பாக எடுக்கப்படும் எதிர்வரும் நடவடிக்கை தொடர்பாக 2020 திசெம்பர் 31 அந் திகதி வரையிலும் தீர்மானத்திற்கு வராமல் இருந்ததுடன் பெற்றுக் கொண்ட கடன் தொகையை மீளச் செலுத்தும் சந்தர்ப்பத்தில் இது தொடர்பாக கலந்துரையாடுவதற்கு இருப்பதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | பயன்பாட்டிற்காக வசதிகள் வழங்கப்பட வேண்டும். | உள்ளது | எஞ்சிய பணிகளுக்காக தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | அவ்வாறே 2020 திசெம்பர் 31 ஆந் திகதி முதல் மதியுரை ஒப்பந்த உடன்படிக்கையை பூர்த்தி செய்த காரணத்தினால் குறித்த மதியரை நிறுவகத்தினால் நட்டங்கள் மற்றும் சேதங்களுக்காக US $ 23,657,761 உட்பட US$ 31,364,767 இற்காக உரித்து மற்றும் இருந்ததுடன் மொத்த உரித்து கோரலுக்கு ஒப்பாக நட்ட சேதங்களை அறவிடும் | - மேற்படி - | இதற்குரியதாக இரண்டு தடவைகள் கூடியிருந்ததுடன் எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | சதவீதம் 75 சதவீதமாக இருந்தது. | | | |
| (iii) | 2021 சனவரி 19 ஆந் திகதி வரை உரிய கடன்தொகையில் 2,905,525 ஜப்பான் யென் ¥ அதாவது ரூபா 4,886,234,915 தொகை பயன்படுத்தப் பட்டிருந்ததுடன் அக்கடன் உடன்படிக்கை முடிவுறுத்த நேர்ந்த காரணத்தினால் பயன்படுத்திய தொகையை மீண்டும் கொடுப்பனவு செய்யும் முறை தொடர்பாக இணக்கப்பாட்டிற்கு இதுவரை வந்திருக்கவில்லை. | - மேற்படி - | குழுவின் தீர்மானத்தின் பேரில் இந்த உடன்படிக்கைக்குரிய எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (iv) | 2021 சனவரி மாதம் வரையில் இச்செயற்திட்டத்தின் அலுவலகத்தை மூடியமை உட்பட செயற்திட்டத்தின் அடுத்த நடவடிக்கைகளை முடிவுறுத்துதல் உட்பட செயற்திட்டத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்யப்படவில்லையென அறிக்கையிடப்பட்டிருந்த து.அவ்வாறே கோவைகளின் பிரகாரம் இச்செயற்திட்டத்தை | - மேற்படி - | இந்நடவடிக்கைகள் ஆரம்ப கட்டத்தில் காணப்படுவால் இதுவரை அதன் செயன் முன்னேற்றம் தொடர்பாக இத்திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கவி ல்லை | 2021 ஒக்தோபர் 16 ஆந் திகதிய மற்றும் 2021 திசெம்பர் 09 ஆந் திகதிகளில் முறையே MUDFH/F/9/1-Budget மற்றும் MUDFH/F/LRT ஆம் இலக்க நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் மூலம் நட்டஈட்டினை செலுத்துவதை கருத்திற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக சில |

| | | | | |
|---|---|---|---|---|
| | பூர்த்தி செய்வதுடன் இணைந்ததாக மாற்று செயற்திட்டமொன்ற தொடர்பாக தகவல்கள் மற்றும் ஏற்கனவே பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த மதியுரை சேவைகள் அளவு வேறு செயற்திட்டமொன்றுக்காக செயற்திறனாக ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்ட போதும் அது தொடர்பான விபரங்கள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | | உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டு, அவர்களுக்கு சம்பளம் மற்றும் படிகளை வழங்குவதற்காக ரூபா 8 மில்லியனான நிதியேற்பாடு தேசிய வரவு செலவுத்திட்ட பணிப்பாளர் நாயகத்திடம் கோரப்பட்டிருந்தது. |

### 3.9 தலைப்பு 240 – தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்** | **நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடைமுறைகள்** | **அது தொடர்பிலான தற்போதைய நிலைமை** |
|---|---|---|---|---|
| (அ) | 2014 இன் பாதீட்டு முன்மொழிவின் கீழ் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்யும் போது வரிகளில் இருந்து விடுவிக்கப்படடிருந்த போதிலும் வழங்குனர் கம்பனி அது வரையிலும் உற்பத்தி வரி செலுத்தி இறக்குமதி செய்த 2000 மோட்டார் சைக்கிள்களை பெற்று பகிர்தளிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. அந்த 2000 மோட்டார் சைக்கிள்களுக்குரிய ரூபா 109,612,000 தொகையான உற்பத்தி வரித் தொகையில் ரூபா 12,505,974 தொகை 2020 திசெம்பர் 31 ஆந் திகதி 05 | சரியான கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுப்பதற்காக அரசாங்க செலவினங்கள் எவ்வாறான மட்டத்தில் வைக்கப்பட வேண்டும் என தீர்மானிப்பதற்காகவும், பாதீட்டு இடைவெளியினை எவ்வளவு என தீர்மானிப்பதற்காகவும் மேற்பார்வை நடவடிக்கைகள் மற்றும் கொள்கைரீதியான பகுப்பாய்வுகளுக்காகவும் , வருமான எதிர்வுகூறல் மற்றும் அறிக்கைகளை வைத்துக் கொள்ளல் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். | திருத்தப்பட்ட முரண்களுக்கான காரணம் தெளிவாக நிதிக் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ளதுடன், மதிப்பீடு தயாரிக்கின்ற சந்தர்ப்பத்தின் போது இனங்காணப்படாத முன்னுரிமை செலவின விடயங்களை செய்வதற்காக மதிப்பீட்டை திருத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது, முடிந்தவரை துல்லியமாக செலவுகளை மதிப்பிடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வருடங்களுக்கு பின்னர் 2108 - குத்தகை வாகனத்திற்காக பெறப்பட்ட கடன் பணத்தை மீள செலுத்தும் செலவின விடயத்தின் கீழ் செலவிடப்பட்டிருந்தது. மிகுதி வரித் தொகையை எதிர்காலத்தில் செலுத்துவதற்கு ஏற்பட முடியும் என மேலும் அவதானிக்கப்பட்டது. | | | |
| (ஆ) | ஆரம்ப செலவின மதிப்பீடு மற்றும் திருத்தப்பட்ட செலவின மதிப்பீடு தயாரிக்கும் போது 08 செலவின விடயங்களில் முரண்கள் 88 சதவீதத்திற்கு குறைவடைந்தது முதல் 64 சதவீதம் வரை அதிகரித்த இடைவெளியில் வேறுபாடு காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | சரியான கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுப்பதற்காக அரசாங்க செலவினங்கள் எவ்வாறான மட்டத்தில் வைக்கப்பட வேண்டும் என தீர்மானிப்பதற்காகவும், பாதீட்டு இடைவெளியினை எவ்வளவு என தீர்மானிப்பதற்காகவும் மேற்பார்வை நடவடிக்கைகள் மற்றும் கொள்கைரீதியான பகுப்பாய்வுகளுக்காகவும் , வருமான எதிர்வுகூறல் மற்றும் அறிக்கைகளை வைத்துக் கொள்ளல் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். | திருத்தப்பட்ட முரண்களுக்கான காரணம் தெளிவாக நிதிக் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ளதுடன், மதிப்பீடு தயாரிக்கின்ற சந்தர்ப்பத்தின் போது இனங்காணப்படாத முன்னுரிமை செலவின விடயங்களை செய்வதற்காக மதிப்பீட்டை திருத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதியில், 04 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 1,518.92 மில்லியனான நிதியேற்பாடு முழுமையாகவும், 07 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டின் 27 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையான வீச்சளவிலான கூட்டுத்தொகை ரூபா 29,012.59 மில்லியன் ஆன நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமல் எஞ்சியிருந்தது. |
| (இ) | 2001 பெப்ரவரி 16 ஆம் திகதி மரணமடைந்த உத்தியோகத்தரிடம் | நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்காக அல்லது | இது தொடர்பாக சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுப்பதற்கு | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் நிலவைக் கடன் மீதி |

| | | | | |
|---|---|---|---|---|
| | இருந்து அறவிட வேண்டிய ரூபா 102,497.60 தொகையான கடன் மீதி 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக திணைக்களத்தின் புத்தகங்களில் காணப்படுகின்றது. இது தொடர்பாக கடந்த கணக்காய்வு ஐயவினாக்களில் தொடர்ச்சியாக சுட்டிக் காட்டப்பட்ட போதிலும், இது வரையில் அந்த கடனை அறவிடுவதற்கோ அல்லது அதற்குரிய மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கோ தேவையான செயற்பாடுகள் 2014 பெப்ரவரி 26 ஆம் திகதியின் பின்னரும் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | விடுவிப்பதற்காக போதியளவான மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பதிவுத் தபால் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். | அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2000 செப்டம்பர் 18 ஆம் திகதி மரணமடைந்த உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 101,561.30 தொகை 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கு தேவையான மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்தமை | நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்காக அல்லது விடுவிப்பதற்காக போதியளவான மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அவர்களுடன் தொடர்புடைய தரப்பினருக்கு எதிராக சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்குமாறு பதிவுத் தபால் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் நிலவைக் கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கோவைகளின் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | | | |
| (உ) | 2015 செப்டம்பர் 23 ஆம் திகதி முதல் கடமை நடவடிக்கைகளுக்காக அறிக்கையிடாமையின் காரணமாக 2015 ஒக்டோபர் 13 ஆம் திகதி சேவையை கைவிட்டுச் சென்றதாக கட்டளையொன்று விநியோகிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் 2017 ஏப்ரல் 26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் ஏற்கப்படாததாக அறிவிக்கப்பட்டிருந்தமை 2018 ஆகஸ்ட் 17 ஆம் திகதி பாதீட்டு பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த உத்தியோகத்தரிடமிருந்து 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிட வேண்டிய ரூபா 150,119 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை. | நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்காக அல்லது விடுவிப்பதற்காக போதியளவான மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுப்பதற்கு பதிவுத் தபால் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான பதில் கிடைக்காதிருக்குமாயின் வழக்கு தொடர்வதற்கு எதிர்பார்க்கின்றோம். | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் நிலவைக் கடன் மீதி அறவிட தவறியிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | பாதீட்டு திணைக்களத்தின் 150 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்காக நிதிக் குத்தகையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட கூட்டுமொத்தமாக ரூபா 2,824,733,981 ஆன வாகனங்களின் குத்தகைக் காலம் மீளாய்வாண்டின் முடிவடைந்திருந்த போதும் அவற்றை உரிய நிறுவனங்களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குத்தகை காலம் முடிவடைந்த வாகனங்களை முறையான பிரகாரமும் விரைவாகவும் கையளித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். | அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட, ஏனைய நிறுவனங்களுக்கு இதுவரை கையளிக்கப்படாத ரூபா 2,824,733,981 தொகையான குத்தகை வாகனங்கள் 2020 ஆம் ஆண்டு முழுவதும் காணப்பட்ட COVID 19 தொற்றுநோய் நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட சிற்சில நடவடிக்கைகளின் காரணமாக ஆண்டின் போது உரிய பிரகாரம் கையளிப்பதற்கு முடியாதிருந்தது. | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் வாகனங்களை சுவகரிக்கம் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | 2014 யூலை 23 ஆம் திகதிய 2/2014 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் பதிவு உரித்து 05 வருட காலத்திற்கு பின்னர் ஆட்களின் பெயரில் கையளிக்கப்பட வேண்டிய போதிலும் பொதுத் திறைசேரியினால் ரூபா 16,792,961,055 பெறுமதியான மோட்டார் சைக்கிள்கள் அந்த | குத்தகை காலம் முடிவடைந்த வாகனங்களை முறையான பிரகாரமும் விரைவாகவும் கையளித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2020 வரை கொடுப்பனவுகள் பூர்த்தியடைந்த மோட்டார் சைக்கிள்களை கையளிப்பதற்காக ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் COVID 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக அந்த நடவடிக்கைகள் தாமதமடைந்திருந்தன. | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் குத்தகைக் காலம் 5 வருடங்களை விஞ்சியிருந்த மோட்டார் சைக்கிள்களின் உரித்தினை கையளிக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | காலம் முடிவடைந்திருந்த போதிலும் அவற்றை உரியவாறு கைளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஏ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிரேஷ்ட நிலையில் 12 பதவிகளும், இரண்டாம் நிலையில் 09 பதவிகளும் மற்றும் ஆரம்ப நிலையில் 04 பதவிகளும் ஆக 25 வெற்றிடங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | இதனிடையே பதவியணியினர் வெற்றிடங்கள் காணப்பட்டமை திணைக்களத்தின் செயலாற்றலுக்கு பாதகமான வகையில் தாக்கமளிக்குமாயின் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது அவ்வாறு இல்லையாயின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை திருத்துவதற்கோ நடவடிக்கை எடுத்தல் அவசியமாகும். | வெற்றிடங்கள் காணப்படுகின்ற பதவிகளை நிரப்புவதற்காக அவ்வப்போது கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை அதற்காக உத்தியோகத்தர்கள் கிடைத்திருக்கவில்லை. | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் வெற்றிடங்கள் நிலவின. |

## 3.10 தலைப்பு 241 – பொது முயற்சிகள் திணைக்களம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்** | **நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடைமுறைகள்** | **அது தொடர்பிலான தற்போதைய நிலைமை** |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை 2013 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை 06 வருடங்களுக்கான வருடாந்த அறிக்கைகள் ஏதும் சமர்ப்பித்திருக்காததுடன், இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 2014 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை 05 வருடங்களாக வருடாந்த அறிக்கைகள் சமர்ப்பித்திருக்கவில்லை. | பொது முயற்சிகளின் வருடாந்த அறிக்கைகள் தாமதம் இன்றி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இணங்குகின்றேன். அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம், மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கான வருடாந்த அறிக்கைகள் குறிப்பிட்ட காலப் பகுதியில் சமர்ப்பிக்கும் படி எழுத்து மூலமாக தொடர்ச்சியாக இந்த நிறுவனத்தினால் அறிவுறுத்தப்பட்ட போதிலும் அது தொடர்பாக அந்த நிறுவனங்களினால் உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் 2017 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலும், மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை 2015 அம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலும், இலங்கை ஏற்றுமதி காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 2019 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ஆ) | 2019 நிதி நிதியமைச்சின் வருடாந்த அறிக்கையின் படி 2016, 2017 மற்றும் 2018 ஆண்டுகள் மீது கவனம் செலுத்தும் போது மேற் குறிப்பிட்ட 52 | பொது முயற்சிகளின் வருடாந்த அறிக்கைகள் தாமதம் இன்றி பெற்றுக் கொள்வதற்கு | இணங்குகின்றேன். வருடாந்த அறிக்கைகள் சமர்ப்பித்தல் தொடர்பாக மேற்பார்வை | 2022 மார்ச் 16 ஆந் திகதி வரையில் 11 அரச நிறுவனங்களின் 2020 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கைகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பகிரங்க தொழில் முயற்சிகளில் முறையே 09, 20 மற்றும் 37 நிறுவனங்கள் ஆக வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்க வேண்டும்.. | அலுவல்கள் விஸ்தரித்தல் தொடர்பாக குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டது. | பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2020 ஆம் ஆண்டிற்காக திருத்திய வருமான மதிப்பீடு ரூபா 30,961,000,000 ஆக இருந்ததுடன் உள்ளவாறான வருமானம் ரூபா 14,768,452,766 ஆக இருந்த காரணத்தினால் அது திருத்திய மதிப்பீடில் 48 சதவீதமாக இருந்தது. | அனைத்து அரச நிறுவனங்களிலிருந்தும் அரசின் இலாபம் மற்றும் பங்கிலாபம் அறவிடப்படவில்லை. | 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொவிட் தொற்று காரணமாக பொது முயற்சிகள் இலாபம் மற்றும் பங்கிலாபம் குறைவடைந்திருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போது உள்ளபடியான வருமானமானது மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 55.61 சதவீதமாக காணப்பட்டது. |
| (ஈ) | 7 நிறுவனங்களுக்குரிய திருத்திய வருமான மதிப்பீட்டிற்கு ஒப்பாக உள்ளவாறான வருமானம் குறைவடைந்தமை 33 சதவீதத்திற்கும் 84 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | அனைத்து அரச நிறுவனங்களிலிருந்தும் அரசின் இலாபம் மற்றும் பங்கிலாபம் அறவிடப்படவில்லை. | அரசாங்கத்தின் லாபம் மற்றும் ஈவுத்தொகை அனைத்து பொதுச் முயற்சிகளிலிருந்தும் வசூலிக்கப்படுவதில்லை. | 2021 ஆம் ஆண்டிலும், வருமான மதிப்பீட்டோடு ஒப்பிடுகையில் உண்மையான வருமானம் குறைவாக இருந்தது. |
| (உ) | தேசிய முகாமைத்துவ நிறுவகம், முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் மற்றும் தேசிய லொத்தர் சபை ஆகிய 03 நிறுவனங்கள் கடந்த 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இலாபத்தில் வருமானத்திற்கு எவ்வித பங்களிப்பினையும் வழங்கியிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொவிட் தொற்று காரணமாக பொது முயற்சிகள் இலாபம் மற்றும் பங்கிலாபம் குறைவடைந்திருந்தது. | 2020 ஆம் ஆண்டில் கோவிட் தொற்றுநோய் காரணமாக, பொது முயற்சிகளின் லாபம் மற்றும் ஈவுத்தொகை குறைந்துள்ளது. | தேசிய லொத்தர் சபையினால் 2021 ஆம் ஆண்டுக்கானஇலாப பங்களிப்பாக ரூபா 900 மில்லியன் திறைசேரிக்கு வழங்கப்பட்டுள்ளது. |
| (ஊ) | 2020 ஆம் ஆண்டில் 2301 - உரித்து பங்களிப்பு தொகை விடயத்தின் கீழ் | செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் முதலீடு செய்யப்பட | காசோலை கையளிப்பு 2021.06.17 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டுள்ள | 2021 நவம்பர் 30 ஆந் திகதியில் உள்ளபடியாக வங்கி |

| | | | | |
|---|---|---|---|---|
| | 02 கம்பனிகளின் ஆரம்ப மூலதனத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 40,000,000 தொகையான காசோல குறித்த கம்பனி கூட்டிணைக்கப்பட்டிருந்த போதும் தொழிற்பாட்டினை ஆரம்பிக்காமையால் 2021 யூன் 16 ஆந் திகதி அக்கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.<br>(i) Center for Excellence Robotics Applications (pvt) Ltd.<br>(ii) Sahasya Investments Ltd. | வேண்டும் | து. | இணக்கக்கூற்றின் பிரகாரம், இந்த காசோலைகள் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகளாக காண்பிக்கப்பட்டுள்ளது. |
| (எ) | மீளாய்வாண்டில் இலங்கை மின்சார சபைக்கு மேலதிக மூலதனமாக ரூபா 48,000,000,000 வழங்கப்பட்டிருந்த போதும் அதற்காக நிதி ஏற்பாடு மேற்கொள்ளாமை தொடர்பாக திணைக்களத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | திரண்ட நிதியத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவிற்காக பொருத்தமான நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். | எரிபொருள் விலை நிலையான நிதியத்தின் மூலம் செய்யப்பட்ட மேலதிக மூலதன நிதி ஏற்பாடாகும். | மேலதிக மூலதனத்தை ஈட்டுவதற்காக திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய தொகையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையால், அதற்காக பாராளுமன்றத்தின் அங்கீகாரம் 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | திணைக்களத்தினால் அரசாங்கத்திற்குச் சொந்தமான வியாபாரங்களில் மேற்கொள்ளப்படும் மூலதன பங்களிப்பு, உரிய நிறுவனங்களினால் சரியாக கணக்கீடு | முறையான வழிகாட்டலின் கீழ் மூலதனப் பங்களிப்பு கணக்கீடு செய்வதை உறுதிப்படுத்தும் நடைமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டும் | மூலதன பங்களிப்பு வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் அப்பணத்தை மேலதிக மூலதனமாக கருதி கணக்கீடு செய்வதற்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் அவ்வாறு கணக்கு வைக்கப்படாத நிறுவனங்கள் தொடர்பில் பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அதற்காக திணைக்களத்தினால் முறையான வழிகாட்டலொன்று இடம்பெற்றிருந்தமை அவதானிக்கப்படவில்லை. | | | க்கான தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லலை. |
| (ஐ) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் திணைக்களத்தினால் மேற்பார்வை செய்யப்பட்டு காணப்பட்ட 118 பொது முயற்சிகளில் 18 நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படவில்லையென கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அதில் சில நிறுவனங்கள பல வருடங்களின் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கவில்லையென அவதானிக்கப்பட்டது. | குறிப்பிட்ட காலத்திற்குள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து நிதிக்கூற்றுக்களை பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்காத நிறுவனங்களை, அவை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக சான்றுபடுத்தும் தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லலை. |
| (ஒ) | 2019 ஆம் ஆண்டில் அரச வர்த்தக முயற்சிகளின் இலாப வருமானம் மற்றும் பங்கிலாப வருமானம் முறையே ரூபா 22,833 மில்லியன் மற்றும் ரூபா 5,024 மில்லியனாக இருந்ததுடன் 2020 ஆம் ஆண்டில் அது முறையே ரூபா 14,708 மில்லியன் மற்றும் ரூபா ரூபா 2,855 மில்லியன் வரை 36 சதவீதத்தினாலும் 44 சதவீதத்தினாலும் வீழ்ச்சி | சரியான நாளதுவரையாக்கப்பட்ட தகவல்களை பேணிச் செல்லல் வேண்டும். மற்றும் அதன் மீது தேவையான கண்காணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். | கொவிட் தொற்று காரணமாக பொது முயற்சிகளில் இலாபம் மற்றும் பங்கிலாபம் குறைவடைவதற்கு காரணமாக இருந்தன. அனைத்து பொது முயற்சிகளில் இலாபம் மற்றும் பங்குலாபம் அறவிடப்படாமல் இருந்ததுடன் பங்கிலாபம் குறித்த கம்பனியின் இயக்குனர் | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் அனைத்து நிறுவனங்களினதும் நிதிச் செயன்முன்னேற்றங்களை காண்பிக்கும் தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அடைந்திருந்தது. 2020 நிதிக் கூற்றுக்களில் வருமானக் குறியீடு 20:02:03 (இலாபம்) இன் கீழ் 33 நிறவனங்களின் விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தது டன் வருமானக் குறியீடு 20:02:04 (பங்குலாபம்) இன் கீழ் 43 நிறுவனங்கள் காண்பிக்கப்பட்டிருந்தது. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அரச வர்த்தக வியாபாரங்களின் எண்ணிக்கை 206 ஆக இருந்தது. இதன் பிரகாரம் 150 அரச நிறுவனங்களின் வருமானம்.˙. இலாபம் / நட்டம் கருத்திற் கொள்ளப்படாதிருந்ததுடன் அதற்கு காரணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | | சபையாலேயே தீர்மானிக்கப்படுகின்றது. | |

### 3.11 தலைப்பு 242 – முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்** | **நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடைமுறைகள்** | **அது தொடர்பிலான தற்போதைய நிலைமை** |
|---|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியணியினர், கல்விசாரா பதவியணியினர் மற்றும் கல்விசார் உதவிச் சேவைகளிற்கான ஆட்சேர்ப்புத் திட்டங்களை அங்கீகரித்தல் உள்ளடக்கப்பட்டிருந்தது. எனினும் அத்தகைய திட்டங்கள் 2019 மே வரையிலும் அது அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய ஆட்சேர்ப்புத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும். | அது தொடர்பாக பரீட்சித்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் பல்கலைக்கழக கட்டமைப்பிற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிற்கான பதவியணியை அங்கீகரிப்பதற்கு உரிய விதிமுறைகள் | பதவியணி அங்கீகாரத்திற்காக தயாரிக்கப்பட்ட விதிமுறைகள் முறையாக | அமைச்சரவையால் காலத்திற்குக் காலம் எடுக்கப்படுகின்ற கொள்கை தீர்மானங்களின் | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் அனைத்து அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களினதும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கோவைப்படுத்தப்பட்டு பேணப்பட வேண்டும். | அடிப்படையில் விதிமுறைகள் தொடர்ந்து மீளாய்வு செய்யப்படுவதன் காரணமாக விதிமுறைகளை தாமதமின்றி தயாரிக்க முடியாதிருந்தது. | பதவியணியை அங்கீகரிக்கும் விதிமுறைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அதன் கீழான குறிகாட்டிகளை முதன்மைப்படுத்தி நோக்கங்கள் மற்றும் சுட்டிகளை இனங்கண்டு அடைந்துகொள்ளுதல் தொடர்பாக திணைக்களம் கவனம் செலுத்த வேண்டிய போதிலும், 2019 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் கீழும் குறித்த நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பிலும் அவ்வாறு நடவடிக்கை எடுப்பதற்கு திட்டங்கள் தயாரிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அதன் கீழான குறிகாட்டிகளை முதன்மைப்படுத்தி நோக்கங்கள் மற்றும் சுட்டிகளை இனங்கண்டு அடைந்துகொள்ளுதல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். | அந்த நோக்கங்கள் மற்றும் குறிகாட்டிகள் நேரடியாக திணைக்களத்தின் செயலாற்றலுடன் தொடர்புடையவை அல்ல என்பது அவதானிக்கப்படுவதுடன், நிறுவனங்களுக்குரிய துறைகளின் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் இந்த திணைக்களத்தின் பணிப்பொறுப்புகள் தீர்மானிக்கப்படுகிறதுடன், அந்த நிறுவனங்களின் திட்டங்களை அறிவித்து, திணைக்களத்திற்கு பரிந்துரைத்த பின், அதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டு, பணிப்பொறுப்பில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் இனங்காணப்பட்டிருந்த நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் அவற்றுக்கான செயலாற்றல் குறிகாட்டிகள் பிரகாரம் செயலாற்றல் அளவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அரசாங்க சேவை | திட்டமிடப்பட்ட பணிப்பொறுப்புக்கள் குறிப்பிட்ட | கொவிட் 19 தொற்றுநோய் நிலையில் ஏனைய | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் திணைக்களத்தின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | மனித வளத் தகவல்களை வெளியிடுதல் மற்றும் 2020 ஆண்டின் அரசாங்க சேவை மனித வளங்கள் தொடர்பாக தகவல்களை உட்படுத்தி திணைக்களத்தின் வெளியீடுகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | காலப்பகுதியுள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். | அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களில் இருந்து தகவல்கள் பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் ஏற்பட்ட காரணத்தினால் குறிப்பிட்ட கூற்றினை நாளதுவரை ஆக்க முடியவில்லை. | வெளியீடுகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | சிரேஷ்ட மட்டத்தில் வெற்றிடமாக காணப்படும் மனிதவள முகாமைத்துவ விஷேடத்துவர் பதவி, வேலை ஆய்வு விஷேடத்துவர் பதவி மற்றும் பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் பதவிகள் 02, 2019 ஆண்டு முதல் காணப்படுவதுடன், சிரேஷ்ட மட்டத்தில் வெற்றிடங்கள், சிரேஷ்ட மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையில் 40 சதவீதத்தை பெறுவதுடன், அது திணைக்களத்தின் செயலாற்றுகையை பாதிக்கக்கூடியாக இருந்ததென அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளை முறைப்பிரகாரம் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதி மற்றும் உதவிப் பணிப்பாளர் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கும் படி பொது நிருவாக அமைச்சுச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இது வரை உத்தியோகத்தர்கள் வழங்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் வெற்றிடங்களை நிரப்ப முடியாதிருந்தது. |

### 3.12 தலைப்பு 243 – அபிவிருத்தி நிதித் திணைக்களம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்** | **நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடைமுறைகள்** | **அது தொடர்பிலான தற்போதைய நிலைமை** |
|---|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டின் போது மீண்டெழும் செலவினங்களுக்காக 21 செலவின விடயங்களின் ரூபா 15,988,107,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாடுகளில் ரூபா 11,995,799,491 கூட்டுத்தொகையான நிதியேற்பாடுகள் 28 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் சேமிக்கப்பட்டிருந்தது. | ஏற்பாடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டினை உச்ச அளவில் பயன்படுத்த வேண்டியமை. | ரூபா 8,455 மில்லியன் சிரேஷ்ட பிரஜைகளுக்கான வட்டிச் சலுகைகளை செலுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளக்கு கட்டுநிதி கிடைக்காமையால் இந்த சேமிப்பு இடம்பெற்றுள்ளது என்பதும், ரூபா 3,541 மில்லியன் ஏனைய நிவாரணங்கள் செலுத்துவதற்காக அதற்கு நிலவும் கேள்வியின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், வங்கியுடன் கைச்சாத்திட்டுள்ள உடன்படிக்கையின் பிரகாரம் ஆண்டின் இறுதி காலாண்டிற்குரிய வங்கியினால் எமக்கு வழங்கப்படும் சலுகைக் கோரிக்கைகளுக்காக செலுத்தப்படுவது | 2021 ஆம் ஆண்டுக்காக 22 செலவின விடயங்களுக்காக ரூபா 2,072,060,400 கூட்டுத்தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 972,111,854 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், ஆண்டின் இறுதியில் ரூபா 1,099,948,546 கூட்டுத்தொகை எஞ்சியிருந்தது. அந்த சேமிப்பு 7 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அதற்கடுத்த ஆண்டின் முதல் காலாண்டில் எனவும், எஞ்சிய நிதியேற்பாடுகள் 2019 ஆம் ஆண்டிற்கான பொறுப்புகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பிரகாரம், 2017 ஆம் ஆண்டு முதல் அனுமதிப்பத்திரம் பெற்ற வணிக வங்கிகளில் ரூபா 1.5 மில்லியன் அல்லது அதற்கு குறைவாக சிரேஷ்ட பிரஜைகளால் பேணப்படும் நிலையான வைப்புகளுக்காக 15 சதவீத வட்டி செலுத்தப்படுகின்றது. பொதுவான வட்டி வீதம் மற்றும் செலுத்தப்படும் 15 சதவீத வட்டி ஆகியவற்றுக்கடையிலான வேறுபாட்டுக்குரிய பணம் பொது திறைசேரியால் குறித்த வங்கிகளுக்கு மீளளிப்பு செய்யப்படும். 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக 7 அரச வங்கிகள் மற்றும் 22 தனியார் வங்கிகளுக்கு உரியதாக செலுத்த வேண்டிய மொத்த வட்டிச் சலுகைப் பணம் ரூபா 50,038,492,608 ஆகும். 2019 ஆம் ஆண்டின் போது இந்த கொடுப்பனவுகளை | ஏற்பாடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டினை உரிய பணிகளுக்கு உச்ச அளவில் பயன்படுத்த வேண்டியமை. | செலுத்த வேண்டிய இந்த பணத்திற்காக 2020 திசெம்பர் 15 ஆந் திகதி ரூபா 59,605,490,495 ஆன திறைசேரி பிணைமுறிகள் வெளியிடப்பட்டதுடன், எஞ்சிய தொகையான ரூபா 2,262,927,825 தொகையானது 2020 திசெம்பர் 18 ஆந் திகதி தீர்ப்பனவு செய்யப்பட்டது. அதன் பிரகாரம், 2020 திசெம்பர் 18 ஆந் திகதி வரையிலும் சிரேஷ்ட பிரஜைகளுக்காக பேணப்படும் நிலையான வைப்புகளுக்காக வணிக வங்கிகளுக்காக 2020ஆம் ஆண்டிற்கான இரண்டாவது காலாண்டு (2020 யூன் 30) வரையிலும் செலுத்த வேண்டிய வட்டிச் சலுகை முழுமையாக வணிக வங்கிகளுக்கு செலுத்தி தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டுக்காக ரூபா 31,365,500,000 ஆன நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் ரூபா 31,356,447,996 பயன்படுத்தப்பட்டிருந்த து. அதன் பிரகாரம், ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டின் ரூபா 9,052,003 ஆன நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேற்கொள்வதற்காக ரூபா 9,697,360,000 ஆன நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது டன், ஆண்டின் இறுதியில் உள்ளபடியாக அவற்றுள் ரூபா 1,242,324,885 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆண்டின் இறுதியில் உள்ளபடியாக எஞ்சிய நிதியேற்பாடு ரூபா 8,455,035,115 ஆகும். | | | |
| (இ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக சிரேஷ்ட மட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 06 வெற்றிடமாக காணப்பட்டது. | பதவியணியில் நிலவும் வெற்றிடங்கள் திணைக்களத்தின் செயலாற்றலுக்கு பாதகமான முறையில் தாக்கமளிக்கும் எனின் அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு அல்லது அவ்வாறல்லாத போது அந்த பதவியணியை திருத்துவதற்கும் உரிய நடவடிக்கை எடுப்பதன் தேவைப்பாடு | சிரேஷ்ட மட்டத்திலான உத்தியோகத்தர்களின் நியமன அதிகாரியான அரச சேவைகள் ஆணைக்குழுவினால் மாற்றீடொன்றை வழங்காது இந்த திணைக்களத்திலிருந்து வெளியே இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். எவ்வாறான போதிலும், நிலவும் வெற்றிடங்கள் தொடர்பில் கலாண்டு ரீதியாக அரச சேவைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. வெற்றிடத்தை நிரப்பும் வரையிலும், தற்போதுள்ள ஊழியர்களை இயலுமான அளவு உச்சமாக அளவில் அலுவலக பணிகளுக்கு பங்களித்தமையால் பதவியணி வெற்றிடங்கள் | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிறைவேற்று மட்டத்திலனா 09 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நிலவியமை திணைக்களத்தின் செயலாற்றலுக்கு பாதகமான முறையில் பாதிக்காத வகையில் செயற்பட இயலுமானதாக இருந்தது. குறித்த பிரிவுகளுக்கு மீண்டும் ஒரு தடைவ அறிவித்து விரைவாக இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு குறித்து வைத்துக்கொள்கின்றேன். | |

### 3.13 தலைப்பு 244 – வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைத் திணைக்களம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்** | **நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடைமுறைகள்** | **அது தொடர்பிலான தற்போதைய நிலைமை** |
|---|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகளை பொறுத்தவரை, சுங்க கட்டளைச் சட்டத்தின் பிரிவு 19(அ) ஏற்பாடுகளின் மற்றும் அரசாங்க கொள்கைளின் பிரகாரம் வரி பதிவழிப்பு மற்றும் விட்டுவிடல், வரி தள்ளுபடி நடவடிக்கைககளில் வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைத் திணைக்களமானது ஈடுபட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அந்த பணிகளுக்கு உரியதாக 2019 ஆம் ஆண்டின் வர்த்தமானி கணக்காய்வுத் திகதியான 2020 ஒக்தோபர் 05 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய ஏற்பாடுகள் மற்றும் அரசாங்க கொள்கைளின் பிரகாரம் வரி பதிவழிப்பு மற்றும் விட்டுவிடல்,வரி தள்ளுபடிகள் தொடர்பான தகவல்களை வர்த்தமானியில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்புகளுடன் இணக்கம் காணப்பட்டதாகவும், நாட்டில் நிலவும் கொரோனா தொற்று நிலைமை காரணமாக திட்டமிடப்பட்டவாறு குறித்த திகதியில் வெளியிட முடியாது எனவும், 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதிக்குள் சமர்ப்பிக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டுக்குரிய தகவல்கள் இலங்கை சுங்கத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் வர்த்தமானி வெளியிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை அரசினால் கைச்சாத்திட்டு தற்போது செயற்பாட்டு நிலைமையில் காணப்படும் BIMSTEC | வியாபார உடன்படிக்கைகள் மூலம் நிதி மற்றும் பௌதீக | BIMSTEC மற்றும் SAFTA ஆகிய இரு உடன்படிக்கைகளுக் குரிய 2020 ஆம் | BIMSTEC பல்தரப்பு சர்வதேச வர்த்தக உடன்படிக்கை கலந்துரையாடல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் SAFTA ஆகிய இருதரப்பு மற்றும் பல்தரப்பு வியாபார உடன்படிக்கைகள் 02 இற்குரிய நிதிசார் அல்லது பௌதீக செயன் முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு மீளாய்வாண்டிலும் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | செயன்முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | ஆண்டிற்காக திட்டமிடப்பட்டிருந்த பல நிகழ்ச்சித்திட்டங்கள் கொவிட் தொற்று நிலைமை காரணமாக பிற்போட வேண்டி ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | மட்டத்தில் உள்ள உடன்படிக்கையொன்றானமையால், அதற்காக 2022 மார்ச் 23 அந் திகதி வரையிலும் இலங்கையும் உள்ளடங்கலாக அங்கத்துவ நாடுகள் கைச்சாத்திட்டிருக்கவில்லை. |
| (இ) | திணைக்களத்தின் அங்கீகரிக்கப் பட்ட பதவியணியில் 62 பதவிகள் காணப்படுவதுடன் உள்ளவாறான 53 பதவிகளுக்காக மாத்திரம் இணைக்கப்பட்டுள்ளனர். 09 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்படுவதுடன் அது ஆளணியில் 15 சதவீதமாக இருந்தது. இவ்வெற்றிடங்களில் சிரேஷ்ட மட்டத்தில் 01 பதவி வெற்றிடமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை முறைப்படி பராமரித்து செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இப்பதவிகளின் வெற்றிடங்கள் நிரப்புவதற்காக நடவடிக்கைககள் எடுக்கப்பட்டு நிதி அமைச்சிடம் பல தடவைகள் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தன. ஆரம்ப, இரண்டாம் தர மற்றும் மூன்றாம் மட்டத்தில் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அவ்வப்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதும் சுங்கத் திணைக்களம் மற்றும் அமைச்சின் கீழ் உள்ள வேறு பிரிவுகளுக்கு மேற்கொள்ளப்பட்ட உள்ளக இடமாற்றங்களால் மீண்டும் வெற்றிடங்கள் ஏற்பட்டிருந்தன | 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் அங்கீகரித்த பதவியணி 64 ஆக காணப்பட்ட போதிலும், உள்ளபடியான பதவியணி 48 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் 16 வெற்றிடங்கள் நிலவின. |

**3.14 தலைப்பு 245 – அரச நிதித் திணைக்களம்**

நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்** | **நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடைமுறைகள்** | **அது தொடர்பிலான தற்போதைய நிலைமை** |
|---|---|---|---|---|
| (அ) | 2017 மார்ச் 31 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட நியதிச்சட்ட மற்றும் நியதிச்சட்டமற்ற நிதியங்கள் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களின் மீளாய்வு அறிக்கைகள் மற்றும் அதற்கு உரியதாக திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2018 ஆகஸ்ட் 18ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 13 நிதியங்களை மூடுவதற்கு பரிந்துரை செய்து அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. திணைக்களத்தின் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தற்போதைய செயன்முன்னேற்றத்தின் பிரகாரம், 2020 செப்தம்பர் 22ஆந் திகதி வரையிலும் 05 நிதியங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், 08 | அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் செயற்பட வேண்டியமை. | 9 நிதியங்கள் மூடப்பட்டு எஞ்சிய நிதியங்களையும் மூடுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றமை. | நியதிச்சட்ட மற்றும் நியதிச்சட்டமல்லாத 10 நிதியங்களை கலைத்துள்ளதாக திணைக்களம் கணக்காய்வுக்கு தெரிவித்திருந்த போதிலும், அந்த நிதியத்திற்காக கலைக்கும் நிதிக்கூற்றுக்கள் 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தமைக்கான தகவல்கள் திணைக்களத்தில் காணப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிதியங்களை மூடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளன என்பதும் அவதானிக்கப்பட்டது. | | | |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம், ஆரம்பிக்கப்பட்ட அரச நிதி முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தினை வரைபாக்கல் பல வருடங்களாக புதிய உத்வேகத்துடன் அரசின் நிதியை செலவிட்டு ஆரம்பிக்கப்பட்ட போதிலும், இது 2019ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டியமை. | திணைக்கள பதவிநிலை உத்தியோகத்தர்களின் கூட்டத்தின் போது திறைசேரி செயலாளரிடமிருந்து கிடைத்த அறிவுரைகளின் பிரகாரம் இந்த பணியை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. அரச நிதியுடன் தொடர்புடையதாக தயாரிக்கப்பட்ட அனைத்து சுற்றறிக்கைகளும் இரத்துச்செய்யப்பட்டு, அந்த விடயங்களை திருத்தியமைத்து, நிதிப் பிரமாணத்திற்கு தேவையான காலத்திற்குகந்த சீராக்கங்களையும் மேற்கொண்டு 9/2020 மற்றும் 02/2020ஆம் இலக்க சுற்றறிக்கை வெளியிடப்பட்டது என்பது தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும், அரச நிதி முகாமைத்துவ அதிகாரச்சட்டம் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியாகிய 78 பதவிகளில் 12 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதால் அது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 15 சதவீதமாக காணப்பட்டது. இந்த வெற்றிடங்களில் சிரேஷ்ட மட்ட மேலதிக பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் ஆகிய 11 பதவிகளும் காணப்பட்டன. | திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை முறைப்பிரகாரம் நடாத்துவற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிதி அமைச்சின் மூலம் திறைசேரித் திணைக்களம் தொடர்பாக 2021 ஆண்டின் போது செயற்படுத்தப்பட்ட புதிய அமைப்புக் கட்டமைப்பிற்கு உரிய பதவியணி தொடர்பான இடமாற்ற செய்முறைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் இந்த சிரேஷ்ட மட்டப் பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | 2022 பெப்ரவரி 07 ஆந் திகதி வரையிலும் இந்த திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பதவிகளின் எண்ணிக்கை 79 ஆக காணப்பட்டதுடன், உள்ளபடியான பதவியணி 65 ஆகும். சிரேஷ்ட மட்டத்திலான வெற்றிடங்களின் எண்ணிக்கை 07 காணப்பட்டது. |

## 3.15 தலைப்பு 249 – திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடைமுறைகள் | அது தொடர்பிலான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 2017 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்கு உரிய மொத்த நிலுவை வருமானம் ரூபா 5,361,931,137 ஆக இருந்ததுடன், அது ஒட்டுமொத்த நிலுவை | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றோம். அதில் 2021 மார்ச் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 3,215 மில்லியன் அறவிடப்பட்டுள்ளது. | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 3,227 மில்லியன் அறவிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2015 யூலை 20 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் 4 ஆவது பந்தியின் பிரகாரம் நிலுவை பணத்தை அறவிட வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை வருமானம் ஆன ரூபா 9,896,017,350 தொகையில் 89 சதவீதமும் முன்னைய ஆண்டிற்குரிய நிலுவை வருமானம் ஆகும். | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2021.03.31 இல் உள்ளவாறு முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 6,480 மில்லியன் தொகை தீர்க்கப்பட்டுள்ளது. | 2021 திசெம்பர் 31 அந் திகதியளவில் கடந்த வருடங்களுக்கு உரியதாக ரூபா 6,493 மில்லியன் தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2017 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவை வருமானம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது உடன்படிக்கையின் பிரகாரம் கடன் வட்டி மற்றும் கடன் தவணைப் பணம் செலுத்தப்படாமையின் அடிப்படையில் 05 நிறுவனங்களுக்குரிய ரூபா 5,361,288,685 தொகையான நிலுவை வருமானத்தை அறவிடுதல் தொடர்பாக நிச்சியமற்ற நிலைமையொன்று காணப்படுகின்றமை அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலுவைக் கடன் தொகை ஒட்டுமொத்த நிலுவை வருமானத்தில் 54 சதவீதமாக இருந்தது. | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இதில் ஒரு நிறுவனம் கடன் தொகை மற்றும் வட்டியை கைவிட்டமைக்காக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், இன்னுமொரு நிறுவனத்திற்கும் உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், நிறுவனமொன்றின் வட்டியை கைவிடுவதற்கான அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன், ஏனைய 02 நிறுவனங்களினதும் கடன் தொகையை மூலதனமாக்குவதற்கும், கடன் தொகையை மீள் கட்டமைப்பதற்காகவும் அங்கீகாரம் கிடைத்துள்ளது. | மில்கோ நிறுவனம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிலுவையாக காணப்படும் நிலுவை உப கடன் மீதியை மூலதனமாக்குவதற்கும், வட்டித் தொகையை கைவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் நிலுவை கடன் தொகையை பதிவழித்துள்ளதுடன், வட்டித் தொகையை கைவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>சர்வோதய நிறுவனம் 2021 ஆம் ஆண்டினுள் ரூபா 13 மில்லியனை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>சணச நிறுவனம் நிலுவை கடன் தொகையை மீள்கட்டமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளதுடன், அவ்வாறல்லாதுவிடின் சட்ட நடவடிக்கை மூலம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | ல. |
| (ஈ) | வருமானக் குறியீட்டு இலக்கம் 20.02.01.99 இன் கீழ் அரசாங்க சொத்துக்களில் இருந்து கிடைக்கின்ற வருமானம் - ஏனைய வாடகைகளுக்குரிய நிலுவை வருமானம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 147,356 ஆக காணப்பட்டதுடன், அது 2020 மார்ச் 31 ஆம் திகதி வரையில் ரூபா 1,134,484 இனால் அதாவது 670 சதவீதத்தினால் உயர்வடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவைப் பணத்தில் ஒரு பகுதி தற்போது அறவிடப்பட்டுள்ளது. | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிலுவை வருமானத்தின் ரூபா 450,000 மாத்திரம் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. |
| (உ) | வருமான குறியீட்டு இலக்கம் 30.01.01.00 கொண்ட வெளிநாட்டு மானியத்திற்குரிய 1994 ஏப்ரல் 20 ஆம் திகதிய 30/94 ஆம் இலக்க வெளிநாட்டு உதவிகள் கணக்கு வைப்பதற்குரிய அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிநாட்டு உதவி தொடர்பான சகல கொடுக்கல் வாங்கல்களும் பொதுத் திறைசேரியின் வெளிநாட்டு வள திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்ட போதிலும், | வெளிநாட்டு உதவிகளை பெற்றுக் கொள்ளல் மற்றும் கணக்கு வைத்தல் செயற்பாடுகளை முறையாக செய்ய வேண்டியதுடன், ஒழுங்குபடுத்தலை வலுப்படுத்தி சுற்றறிக்கையின் ஆலோசனைகளுக்கு முரணாக நடவடிக்கை எடுத்தமை தொடர்பாக கடுமையான நடவடிக்கை எடுத்தல் | 1994 ஏப்ரல் 20 ஆம் திகதிய 30/94 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் சகல வெளிநாட்டு உதவி மானியங்களும் வெளிநாட்டு வள திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளல் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அவ்வாறு கிடைத்திருந்த வெளிநாட்டு மானியங்களை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தெரிவுப் பரிசோதனையின் அடிப்படையில் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் இறுதியில் உள்ளபடியாக பொதுத் திறைசேரிக்கு அறிவிக்கப்படாமல் ரூபா 3,292 மில்லியன் தொகையான வெளிநாட்டு மானியங்கள் நேரடியாக உரிய நிறுவனங்களினால் பெறப்பட்டிருந்தது, இந்த மானியங்கள் தொடர்பான தகவல்கள் பொதுத் திறைசேரியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன், நிதிஏற்பாடு வழங்கப்பட்டு இந்த மானியங்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இவ்வாறான மானியங்கள் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களுக்கு கிடைத்திருந்ததா என்ற உறுதிப்படுத்தலை செய்வதற்கான வினைத்திறனுடைய முறைமையொன்று பொதுத் திறைசேரியிடம் காணப்படாதிருந்தமை அவதானிப்பட்டது. | வேண்டும். | | |
| (ஊ) | 2020 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு வெளிநாட்டு மானியமாக கிடைக்கப் பெற்றிருந்த போதும் 2020 திசெம்பர் 31 | கையளிப்பாளர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் கிடைக்கப் பெற்ற | குறித்த பணிகளுக்காக வெளிநாட்டு உதவி மானியங்களை பயன்படுத்தாமையின் பொறுப்புக்கு உரிய | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் இந்த செயலற்றதாக காணப்பட்ட வெளிநாட்டு |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம் திகதி வரையிலும் உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்தப்படாமல் செயற்பாடற்று காணப்பட்ட வெளிநாட்டு மானியங்களின் பெறுமதி ரூபா 79,716,465 ஆகும். | வெளிநாட்டு மானியங்கள் உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்தல் தொடர்பாக இணைப்பினை ஏற்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தலை வலுப்படுத்துதல் வேண்டும். | அமைச்சு/ திணைக்களத்தின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு உரியதாகும். | மானியங்களை பயன்படுத்தியமையை சான்றுபடுத்துவதற்கு உரிய தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட வைப்புக் கணக்குகள் தொடர்பான பரிசோதனையின் போது மீளாய்வாண்டில் கொடுக்கல் வாங்கல்கள் எதுவும் மேற்கொள்ளப்படாத கூட்டுமொத்தமாக ரூபா 79,716,727 கூட்டுத்தொகை 19 வைப்புக் கணக்குகளில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இந்த வைப்புக் கணக்குகள் வெளிநாட்டு மானிய பெறுவனவுகளுக்குரியதாக இருந்ததுடன், இவ்வாறு வைப்புக்கள் செயற்பாடற்று காணப்பட்டமையின் காரணமாக அந்த மானியங்கள் உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்தும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக மீளாய்வாண்டில் | நாளதுவரையான புத்தகங்கள், அறிக்கைகள் பேணிச் செல்லப்பட வேண்டும். | இதில் குறிப்பிடப்பட்ட 19 வைப்புக் கணக்குகளில் 02 கணக்குகள் தொடர்ந்தும் செயற்படு நிலையில் காணப்பட்டது. மேலும், ஒரு கணக்கில் காணப்படுகின்ற மீதியை பயன்படுத்துமாறு தொடர்ச்சியான உரிய அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. ஏனைய கணக்கு மீதிகள் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்ட போதும் 2020 ஆம் ஆண்டின் போது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அது தொடர்பாக மீண்டும் ஒரு தடவை அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அவ்வாறு இல்லையாயின் அரசாங்க வருமானத்தில் செலவு வைப்பதற்கு அல்லது மிகுதி நடவடிக்கைகள் எடுப்பதற்கு நடவடிக்கை | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் பயன்படுத்தப்படாத வைப்பு மீதிகள் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டதாக சான்றுபடுத்தும் சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்ட ரூபா 5,306,026 அரசாங்க வருமானத்திற்கு செலவு வைத்தல் மற்றும் ரூபா 9,655,159 தொகை உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்தப்படாமல் பங்களிப்பாளருக்கு திருப்பி அனுப்பியதன் மூலம் மேலும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. | | எடுக்கப்படும். | |
| (ஏ) | 2021 மார்ச் இறுதி வரையிலும் 7002 மற்றும் 7003 கணக்குகளில் பல வருட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற ஆரம்ப மீதி காணப்பட்ட 03 கணக்குகள் ஆக இருந்ததுடன், அந்த கணக்குகளின் கூட்டுமொத்தம் ரூபா 118,227,633 ஆகும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | இந்த 03 கணக்குகளில் ஒரு மீதி மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தில் காணப்பட்ட அதிக நிதி கஷ்டத்தின் அடிப்படையில் தீர்க்க முடியாதிருந்ததாக அமைச்சின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மீதியொன்றை தீர்த்து வைப்பதற்காக வெளிநாட்டு தூதுரகங்களின் தகவல்களை சேகரித்து மிகுதி நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய மீதிகள் தீர்க்க வேண்டிய முறை தொடர்பான ஆலோசனை வழங்கி உரிய அமைச்சிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் அந்த செயலற்ற மீதிகளை தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளமைக்கான தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | மேற்கூறப்பட்ட கணக்குகளில் காணப்பட்ட 7002-0-0-035/13 என்ற கட்டுநிதி கணக்கின் மீதி ரூபா 91,530,099 ஆக | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக | 2013 ஆம் ஆண்டில் தீர்க்கப்படாத முற்பணங்களை தீர்த்து வைப்பதற்கு ஒவ்வொரு தூதுவராலயங்களின் | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்படாத கட்டுநிதி |

| | | | | |
|---|---|---|---|---|
| | இருந்ததுடன், 2013 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய காலப் பகுதிக்குரிய தீர்க்கப்படாத முற்பணங்களில் இருந்து தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முற்பணங்களில் ரூபா 51,979,371 தொகை வெளிநாட்டு தூதரக சேவைக்காக வெளிநாடு சென்ற பதவியணியினருக்கு வழங்கப்படுகின்ற வீடுகளுக்காக வைக்கப்பட்ட 173 பாதுகாப்பு வைப்புக்களை உள்ளடக்கியிருந்து. அந்த பெறுமதியில் ரூபா 4,285,061 தொகை 20 வருடங்களை விஞ்சி காணப்பட்டதுடன், ரூபா 44,284,956 தொகை 10 வருடங்களுக்கும் 20 வருடங்களுக்கும் இடையிலும், ரூபா 3,409,354 தொகையான மீதி 07 வருடங்களையும் விஞ்சியிருந்தது.. | தேவையான வழிகாட்டல்களை வழங்குதல். | விபரங்கள் தற்போது பெறப்பட்டு மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | மீதிகள் காணப்பட்டன. |
| (ஓ) | வெளிநாட்டு தூதரகங்களில் சேவையாற்றுவதற்காக வெளிநாடு சென்றுள்ள பதவியணியினருக்கு வழங்கும் 173 வீடுகளின் பிணைகள் / பாதுகாப்பு வைப்புக்களில் 165 வைப்புக்களுக்கு உரிய ரூபா 47,954,750 தொகை தற்போது வெளிநாட்டு தூதரகங்களின் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | வீடுகளுக்காக வைக்கப்பட்டுள்ள வைப்பை அறவிடுவதற்காக அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதுடன், அது தொடர்பான செயல்முன்னேற்றம் 2021.09.30 ஆம் திகதியில் உள்ளவாறு அறிக்கையிடப்பட்டுள்ளது. | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்படாத கட்டுநிதி மீதிகள் காணப்பட்டன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பதவியணியினரால் பயன்படுத்தப்படாத வீடுகளுக்காக வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வைப்பாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | | | |
| (ஓ) | வெளிநாட்டு தூதுரகங்களில் தீர்க்கப்படாத முற்பணம் ரூபா 23,293,715 தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதியாக இருந்ததுடன், அந்த முற்பணத்தில் 2018 ஆம் ஆண்டிற்கு முன்னரான காலப் பகுதிக்குரிய ரூபா 9,168,655 தொகையும், 2018 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 813,741 தொகையும் மற்றும் 2019 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 3,912,255 தொகையும் ஆகும். அதன்படி நிதிப் பிரமாணம் 371 இன் பிரகாரம் செயல்நிமித்த உப கட்டுநிதி அந்த பணிகள் நிறைவுபெற்றவுடன் உடனடியாக தீர்க்க வேண்டியிருந்த போதிலும், அந்த பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | எதிர்காலத்தில் செயல்நிமித்த உப கட்டுநிதி உரிய காலத்தில் தேவையானவிடத்து உடனடியாக அறவிடுவதற்கு உரிய வெளிநாட்டு தூதரகங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்படாத கட்டுநிதி மீதிகள் காணப்பட்டன. |
| (ஔ) | 2020 ஆம் ஆண்டில் தேறாதிருந்த 19 வெளிநாட்டு கடன் | அரச கடன் பெறல் மற்றும் கடன் | உரிய அமைச்சிற்கு உரித்தாக போதியளவான பாதீட்டு நிதிஏற்பாடு | 2021.12.31 ஆந் திகதியளவில் கணக்கு வைக்கப்படாத |

| | | | | |
|---|---|---|---|---|
| | உடன்படிக்கைகளுக்குரிய மற்றும் 2019 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்னர் தேறாதிருந்த 2019 ஆம் ஆண்டில் அதற்கு முன்னர் தேறாத 05 வெளிநாட்டு கடன் உடன்படிக்கைகளுக்குரிய கூட்டுமொத்தமாக ரூபா 6,124 மில்லியன் தொகை 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் வெளிநாட்டு கடனாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சேவைகளை கணக்கீடு செய்தல் என்பவற்றிற்கு முறையாக மேற்கொள்ளப்பட ல் வேண்டும். | இல்லாமை மற்றும் 2020.12.31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தினால் செலவினங்கள் உறுதிப்படுத்தப்படாமையி ன் காரணமாக இந்த கடன் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வெளிநாட்டுக் கடன்கள் நிலவின. |
| (க) | 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் வெளிநிறுவனங்களுக்கு 230 சந்தர்ப்பங்களின் கீழ் ரூபா 1,340,612.19 மில்லியன் தொகையான வங்கி பிணை முறி / சலுகை கடிதங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தது டன், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காலாவதியாகியிருந்தது. ரூபா 880 மில்லியன் பெறுமதியுடைய திறைசேரி பிணைமுறிகளுக்குரிய காலம் நீடிக்கப்பட்டிருக்கவில்லை. | வங்கி பிணை முறி மற்றும் சலுகை கடிதம் விநியோகிக்கும் செயற்பாடுகள் முறையாகவும் நாளதுவரையாகவு ம் பேணிச் செல்லப்படல் வேண்டும். | இந்த நிவாரணக் கடிதத்தினை விநியோகிப்பதற்கான பரிந்துரை செய்தல் அபிவிருத்தி நிதி திணைக்களமாக இருந்ததுடன், அந்த கடிதங்களின் கால நீடித்தல் அந்த திணைக்களத்தின் பரிந்துரை கிடைத்ததும் உடனடியாக மேற்கொள்ளப்படும். | 2022 மார்ச் 23 ஆந் திகதியளவில் காலாவதியான வங்கிப் பிணைமுறிகள் / நிவாரணக் கடிதங்களின் காலம் நீடிக்கப்பட்டதாக உறுதிப்படுத்தப்படும் தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்க வில்லை. |
| (கா) | 2016 ஒக்டோபர் மாதம் முதல் மிஹின் லங்கா கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்ட போதிலும், மேற்கூறப்பட்ட கம்பனி கலைக்கும் நடவடிக்கைகள் 2018 | வங்கி பிணை முறி மற்றும் சலுகை கடிதங்களை விநியோகிக்கும் செயற்பாடுகளை முறைமைப்படுத்து தல் வேண்டும். | இந்த சலுகை கடிதம் அமைச்சரவை அங்கிகாரத்தின் அடிப்படையில் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பரிந்துரையின் படியே விநியோகிக்கப்பட்டிருந்தது. | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் கலைத்தல் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மார்ச் 09 ஆம் திகதியே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கலைக்கும் செயற்பாடுகள் 06 மாதங்களில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தமையும், அதனை நீடிப்பதற்கான அங்கீகாரம் வழங்க முடியாதிருந்தமையும் அமைச்சரவை குறிப்பு இலக்கம் 18/1001/810/005 இன் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், இது வரையிலும் கலைத்தல் நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை. | | | |
| (கி) | மிஹின் லங்கா கம்பனி இலங்கை வங்கியிலிருந்து பெறப்பட்ட ரூபா 1,650 மில்லியன் கடன் தொகைக்குரிய 2020 திசெம்பர் 31 ஆம் திகதி 2020 ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 831,400,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், கடன் தொகையான ரூபா 1,650 மில்லியன் மேலும் செலுத்த வேண்டியிருந்தது. | வங்கி பிணை முறி மற்றும் சலுகை கடிதங்களை விநியோகிக்கும் செயற்பாடுகளை முறைமைப்படுத்து தல் வேண்டும். | இந்த சலுகை கடிதம் அமைச்சரவை அங்கிகாரத்தின் அடிப்படையில் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பரிந்துரையின் படியே விநியோகிக்கப்பட்டிருந்தது. | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் கடன் தொகை செலுத்தப்பட்டிருக்கவில் லை. |
| (கீ) | வெளிநாட்டு உதவிகளை கணக்கு வைக்கும் நடைமுறைக்காக வசதியேற்படுத்திக் கொடுத்தல் திணைக்களத்தின் பிரதான பணியொன்றான போதிலும், | வெளிநாட்டு உதவிகளை பெற்றுக் கொள்ளல் மற்றும் கணக்கு வைத்தல் செயற்பாடுகளை முறையாக செய்ய | அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 30/94 இல் திருத்தப்பட்ட 2.0 பந்தியின் பிரகாரம் மற்றும் நிதிப் பிரமாணக் கோவையின் XI ஆம் அத்தியாயத்தின் | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் ஏனைய அமைச்சுகள் மற்றும் அமைச்சுகளுக்கு வெளிநாட்டு மானியம் பெறுவனவுகளை |

| | | | | |
|---|---|---|---|---|
| | தெரிவுப் பரிசோதனையின் அடிப்படையில் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பொதுத் திறைசேரிக்கு அறிவிக்கப்படாமல் 24 நிறுவனங்களினால் 77 செயற்திட்டங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 2,026 மில்லியன் தொகையான வெளிநாட்டு மானியங்கள் நேரடியாக உரிய நிறுவனங்களினால் பெறப்பட்டிருந்தது, இந்த மானியங்கள் தொடர்பான தகவல்கள் பொதுத் திறைசேரியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன், நிதிஏற்பாடு வழங்கப்பட்டு இந்த மானியங்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இவ்வாறான மானியங்கள் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களுக்கு கிடைத்திருந்ததா என்ற உறுதிப்படுத்தலை செய்வதற்கான வினைத்திறனுடைய முறைமையொன்று பொதுத் திறைசேரியிடம் காணப்படாதிருந்தமை அவதானிப்பட்டது. | வேண்டியதுடன், ஒழுங்குபடுத்தலை வலுப்படுத்தி சுற்றறிக்கையின் ஆலோசனைகளுக்கு முரணாக நடவடிக்கை எடுத்தமை தொடர்பாக கடுமையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஏற்பாடுகளை கருத்திற்கொள்ளாது, வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி நேரடியாக வெளிநாட்டு மானியங்களை பெற்றுக்கொள்ளும் அரச நிறுவனங்கள் தொடர்பில் பின்வருமாறு செயற்படுமாறு வரிசை அமைச்சிற்கு பொறுப்பான செயலாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>(i) சுற்றறிக்கை ஏற்பாடுகளை கருத்திற்கொள்ளாது பெற்றுக்கொள்ளப் பட்ட நேரடி வெளிநாட்டு மானியங்கள் உடனடியாக உரிய முறையில் கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்குமாறு.<br><br>(ii) எதிர்காலத்தில் எந்தவொரு காரணத்தின் அடிப்படையிலும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்திற்கு அறிவிக்காது / | இனங்காணும் நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாது வெளிநாட்டு மானியங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது. | |

## 3.16 தலைப்பு 250 – அரச கணக்குகள் திணைக்களம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்** | **நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடைமுறைகள்** | **அது தொடர்பிலான தற்போதைய நிலைமை** |
|---|---|---|---|---|
| (அ) | 2013 திசெம்பர் 04 ஆந் திகதி சேவையிலிருந்து விலகிச் செல்வதற்கான அறிவிப்பை வெளியிட்டிருந்த ஆராய்ச்சி உதவியாளர் பதவியை வகித்த உத்தியோகத்தரிடமிருந்து அன்றைய தினத்தில் அறவிடப்பட வேண்டியிருந்த கடன் மிகுதி ரூபா 132,846 என்பதுடன் அத்தினத்திலிருந்து சேவையை விட்டுச் சென்று 07 வருடங்கள் கடந்து விட்ட போதிலும் 2020 திசெம்பர் 31ஆந் திகதி வரையில் இம் மிகுதியை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது. | நிலுவைக் கடன் மிகுதியை அறவிடுவதற்காக அல்லது தீர்ப்பதற்காகப் போதியளவு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இம் மிகுதியான ரூபா 132,846 ஐ அறவிடுதல் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு இலக்கம் 309/2018/DMR இன் கீழ் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் அந்த கடன் மீதியை அறவிடத் தவறியிருந்தது. |
| (ஆ) | 2008 திசெம்பர் 17 ஆந் திகதி மரணித்த அரச முகாமைத்துவ | நிலுவைக் கடன் மிகுதியை அறவிடுவதற்காக | கடன் தொகை பெறப்படும் சந்தர்ப்பத்தில் ஆதனக் | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் அந்த கடன் மீதியை |

| | | | | |
|---|---|---|---|---|
| | பதவியிலான உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவைக் கடன் தொகை ரூபா 164,953 என்பதுடன், அந்த உத்தியோகத்தர் மரணித்து 2020 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 12 வருடங்கள் கடந்து விட்டபோதிலும் அந்த கடன் மீதியை அறவீடு செய்யத் தவறியிருந்தது. | அல்லது தீர்ப்பதற்காகப் போதியளவு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கடன் பத்திரக் காப்பீட்டாளராக இருந்த இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனமொன்று பின்னர் அக் கடன் பத்திரக் காப்பீட்டாளராக இருந்த தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்ற நிறுவனம் இரண்டும் பொறுப்புக்களை நிராகரித்தமையால் மரணித்த உத்தியோகத்தரின் நிலுவைக் கடன் மிகுதியை அறவிடுதல் சிக்கலாக இருந்தது. | அறவிடத் தவறியிருந்தது. |
| (இ) | 2020 சனவரி 01 ஆந் திகதியில் ரூபா 160,584,098 ஆன நானாவித முற்பணக் கணக்கில் நிலுவை மிகுதி மீளாய்வாண்டு இறுதி வரையில் ரூபா 160,106,800 ஆகக் காணப்பட்டது. 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான இந்த நிலுவை மீதியில் ரூபா 477,299 அதாவது நூற்றுக்கு 0.30 வீதம் மட்டுமே வருடத்திற்குள் அறவிடப்பட்டிருந்தது. | பின் தொடரல் நடவடிக்கை முறையாகச் செய்யப்பட்டு நிலுவைக் கடன் மிகுதியை அறவிடுவதற்கு போதுமானளவு எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | 2020 வருடத்திற்குள் குறிப்பிட்ட நிலுவை மிகுதிகள் அறவிடப்பட்டமை ரூபா 477,298.72 என்பதாகவும் அந் நிலுவைத் தொகையில் நூற்றுக்கு 0.30 வீதமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளமை சரியாகும். | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நானாவித முற்பணக் கணக்கின் மீதி ரூபா 142,510,261 ஆக காணப்பட்டது. 2021 ஆம் ஆண்டினுள் ரூபா 17,596,538.42 அறவிடப்பட்டிருந்ததுடன், அது நிலுவைக் கடன் மீதியின் 12.35 சதவீதமாக காணப்பட்டது. |
| (ஈ) | சமர்ப்பிக்கப்பட்டிருந்த நானாவித முற்பணக் கணக்கில் 2020 திசெம்பர் 31 இல் மாவட்டச் செயலகங்கள், | பின் தொடரல் நடவடிக்கை முறையாகச் செய்யப்பட்டு நிலுவைக் கடன் மிகுதியை அறவிடுவதற்கு | பொதுத் திறைசேரியினால் நேரடியாக மாவட்டச் செயலாளருக்கு நெல் கொள்வனவு செய்வதற்காக | 2022 மார்ச் 23 அந் திகதி வரையிலும் அந்த நிலுவை முற்பண மீதிகளை அறவிடுவதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | அமைச்சுக்கள், மற்றும் திணைக்களங்கள் 10 இற்கான மொத்த நிலுவை முற்பண மிகுதி ரூபா 160,106,800 என்பதுடன் அவற்றுள் மாவட்டச் செயலகங்கள் மற்றும் திணைக்களங்கள் 09 இற்கான நிலுவை மிகுதி ரூபா 153,785,015 ஆனது 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | போதுமானளவு எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் அது மாவட்டச் செயலகத்தினால் ஏனைய நிறுவனங்களுக்கு உப முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது.<br><br>அரச கணக்குகள் திணைக்களம் ஒரு இடைத்தரகராக மட்டுமே செயற்பட்டிருந்ததுடன், இம் முற்பணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோது, சட்டரீதியான செயற்பாடுகள் முடிவடையாமை, முற்பணம் அறவிடப்படுவதற்காகத் தேவையான கோவைகள் இடமாற்றம் செய்யப்பட்டமை அல்லது அழிக்கப்பட்டமை, சில நிறுவனங்கள் தற்போது செயலிழந்து காணப்பட்டமை, பொருளாதார சிக்கல்களில் இயங்கி வருதல் போன்ற காரணங்களினால் நிலுவை வருமானம் அறவிடப்படுவதற்கு முடியாமை போன்ற நடைமுறைப் பிரச்சினைகளுக்கு முகங் கொடுப்பதற்கு | தவறியிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஏற்பட்டிருந்தமையைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். | |
| (உ) | 2004/2005 வருடங்களில் நெல் கொள்வனவிற்காக மாத்தளை மாவட்டச் செயலகத்தினால் லக்கல பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு விடுவிக்கப்பட்ட தொகையில் மிகுதி ரூபா 2,183,000 ஆன நிலுவை 2020 ஒக்டோபர் மாதத்திலிருந்து ரூபா 10,000 ஆன மாதாந்தத் தவணைகளில் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும், அறவீடுகள் மீளப் பெற்றால் மேற்படி நிலுவையை அறவிடுவதற்கு சுமார் 18 வருடங்கள் எடுக்கப்பட வேண்டியிருக்கும் என்பது அவதானிக்கப்பட்டது. எனினும், 2020 வருடத்தில் அதில் ரூபா 75,000 அதாவது நூற்றுக்கு 9 வீதம் மட்டுமே அறவிடப்பட்டிருந்தது. | பின் தொடரல் நடவடிக்கை முறையாகச் செய்யப்பட்டு நிலுவைக் கடன் மிகுதியை அறவிடுவதற்கு போதுமானளவு எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | லக்கல பல்நோக்கு கூட்டுறவுச் சங்கம் இற்றை வரையில் பொருளாதார சிக்கல்கள் அடிப்படையில் இயங்கி வருவதாக அச் சங்கத்தின் பொது முகாமையாளர் தெரிவித்தாக மாத்தளை மாவட்டச் செயலாளரினால் எனக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது.<br><br>அத்துடன், லக்கல பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட முற்பணத் தொகையில் சங்கத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களினால் ஏற்பட்ட ரூபா 1,464,642 ஐ நட்டங்களாக பதிவழிப்பதற்காக நி.பி 109 விண்ணப்பம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பரிந்துரைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டின் போது நிலுவைக் கடன் மீதியின் ரூபா 100,000 தொகையிலிருந்து அறவிடப்பட்டிருந்ததுடன் , ரூபா 1,464,642 பதிவழிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 543,358 ஆன கடன் மீதியொன்று நிலவியதுடன், 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் அந்த நிலுவைக் கடன் மீதியை அறவிடத் தவறியிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு 2006 ஆம் வருடத்தில் வழங்கப்பட்ட நெல் கொள்வனவிற்கான முற்பணங்களில் 2014 ஆம் வருடத்தில் காணப்பட்ட நிலுவை மிகுதியின் ரூபா 12,560,031 இல் 2020 திசெம்பர் 31 வரையில் ரூபா 1,793,880 மட்டுமே அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இன்னும் நிலுவை ரூபா 10,766,155 மிகுதியாக இருப்பதுடன் மீளாய்வாண்டில் எவ்வித தொகையும் அறவிடப்பட்டிருக்கவில் லை | பின் தொடரல் நடவடிக்கை முறையாகச் செய்யப்பட்டு நிலுவைக் கடன் மிகுதியை அறவிடுவதற்கு போதுமானளவு எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் மாவட்ட கமநல அபிவிருத்தி மாவட்டச் செயலகங்களுக்கு முற்பணம் வழங்கப்பட்டதாகவும் அந் நிறுவனத்திடமிருந்து பணம் அறவிடப்படாத காரணத்தினால் பல நிறுவனங்களுக்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டுள்ளதாகவு ம் அவ்வழக்குகள் முடியும் வரையில் பணம் அறவிடப்பட முடியாதென்றும் எமக்கு தெரிவித்துள்ளனர். | 2021 ஆம் ஆண்டின் போது திருத்துவதற்காக நிலுவைக் கடன் மீதி ரூபா 1,786,614 இனால் அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம், 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிலுவைக் கடன் மீதி ரூபா 12,552,764 ஆக காணப்பட்டது. அந்த மீதி 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு தவறியிருந்தது. |
| (எ) | குருணாகல் மாவட்டச் செயலகத்திற்கு உரிய 2008 ஆம் வருடத்திற்கு முன்பிருந்து காணப்பட்டு வரும் ரூபா 349,475 ஆன கடன் நிலுவையை அறவிடுவதற்கு திணைக்களம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் நடவடிக்கை எடுக்கவில்லை. | பின் தொடரல் நடவடிக்கை முறையாகச் செய்யப்பட்டு நிலுவைக் கடன் மிகுதியை அறவிடுவதற்கு போதுமானளவு எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | ரூபா 349,477.50 ஆன பணம் தீர்க்கப்படுவதாக உரிய நிறுவனம் அறிவித்துள்ளது. | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் அந்த கடன் மீதியை அறவிடத் தவறியிருந்தது. |
| (ஏ) | சுகாதார, போசணை மற்றும் உள்நாட்டு வைத்திய அமைச்சின் கீழ் வருகின்ற அனுராதபுரம் போதன வைத்தியசாலையின் | பின் தொடரல் நடவடிக்கை முறையாகச் செய்யப்பட்டு நிலுவைக் கடன் மிகுதியை அறவிடுவதற்கு | அதற்கான முறையான சோதனையொன்று விரைவில் மேற்கொள்ளப்பட்டு பொறுபபானவரிடமிருந் து குறிப்பிட்ட பணம் | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் அந்த நிலுவை முற்பண மீதியை அறவிடத் |

| | | | | |
|---|---|---|---|---|
| | காப்பறையிலிருந்து 2019 மார்ச் 02 ஆந் திகதி ரூபா 6,321,785 ஆன தொகையொன்று திருட்டு போயிருந்ததுடன், அதற்காக நானாவித முற்பணக் கணக்கிலிருந்து ரூபா 6,321,785 ஆன முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த நிலுவை முற்பண மீதியை அறவிடுவதற்கு தவறியிருந்தது. | போதுமானளவு எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் விசாரணை செயற்பாடுகளின் பின்னர் இது தொடர்பாக முழு அறிக்கையொன்று இத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் குறித்த நிறுவனத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | தவறியிருந்தது. |
| (ஐ) | அனுராதபுரம் மாவட்டச் செயலகத்தில் 2015 ஆம் வருடத்திற்கான அறவிடப்பட வேண்டிய நிலுவைப் பணம் ரூபா 38,097,815 இல் 2020 திசெம்பர் 31 வரையில் நிலுவை மிகுதி ரூபா 34,033,861 என்பதுடன் 2020 வருட இறுதி வரையில் அறவிடப்பட்டமை ரூபா 4,063,954 அதாவது நூற்றுக்கு 11 வீதமாகும். இதன் பிரகாரம் நிலுவைத்தொகையை அறவிடும் செயற்பாடுகள் மந்தகதியில் இருப்பதாக கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது. | பின் தொடரல் நடவடிக்கை முறையாகச் செய்யப்பட்டு நிலுவைக் கடன் மிகுதியை அறவிடுவதற்கு போதுமானளவு எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | அனுராதபுரம் மாவட்டச் செயலகத்திற்கு அனுராதபுர கமநல அபிவிருத்தி மாவட்டச் செயலகம் மற்றும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களினால் தீர்க்கப்பட வேண்டிய தொகைகள் முறையே ரூபா 12,971,207 மற்றும் ரூபா 21,062,654 ஆகும். சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததுடன் கமநல அபிவிருத்தி மத்திய நிலையங்களின் மற்றும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் நிலுவைத் தொகைகள் குறிப்பட்ட வழக்குகளின் தீர்ப்புக்கள் வழங்கப்பட்ட பின்னரே | 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 1,786,614 ஆன தவறுகளை திருத்தியமையால் நிலுவைக் கடன் மீதிகள் குறைவடைந்திருந்தது. அதன் பிரகாரம், 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 32,247,248 ஆன நிலுவைக் கடன் மீதியை அறவிடத் தவறியிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அறவிடப்பட முடியும். | |
| (ஒ) | பொலனறுவை மாவட்டச் செயலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் காணப்பட்ட நிலுவை மிகுதி ரூபா 55,927,666 என்பதுடன் அது மீளாய்வாண்டின் முழு நிலுவைத் தொகையில் நூற்றுக்கு 35 வீதமாக உயர்ந்த சதவீதத்தில் காணப்பட்டது. அதில் 2018 ஆம் வருடத்தில் நெல் விற்பனைச் சபையின் குருப்பு சந்தியில் அரிசி ஆலைகளை நடாத்திச் செல்வதற்காக ரூபா 769,428 மற்றும் உணவு ஆணையாளரிற்கு அரிசி விநியோகிப்பதற்காக ரூபா 13,018,114 ஆன நட்டங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 109 மற்றும் 113 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2020 திசெம்பர் 31 வரையில் அது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | பின் தொடரல் நடவடிக்கை முறையாகச் செய்யப்பட்டு நிலுவைக் கடன் மிகுதியை அறவிடுவதற்கு போதுமானளவு எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | பொலன்னறுவை மாவட்டச் செயலகங்களினால் நெல் விற்பனைச் சபையின் நெல் ஆலையில் காணப்பட்ட நட்டமான ரூபா 769,428.10 ஆன தொகை புத்தகங்களில் நீக்கப்படுவதற்காக விண்ணப்பம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் உணவு ஆணையாளருக்கு அரிசி விநியோகிக்கும் போது ஏற்பட்ட ரூபா 13,018,114.00 ஆன நட்டத்தை பதிவளிப்பதற்கு அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான தகவல்கள் உள்ளடக்கிய அறிக்கையொன்று பொலநறுவை மாவட்டச் செயலகத்திடம் எழுத்து மூலம் கோரப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 13,787,542 கூட்டுத்தொகை பதிவழிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், ரூபா 42,127,825 தொகை 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலம் நிலுவையாக காணப்பட்டது. |
| (ஓ) | கொழும்பு பொது | பின் தொடரல் | கொழும்பு பற் | 2021 ஆம் ஆண்டின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | வைத்தியசாலையின் பல் சிகிச்சைப் பிரிவில் 2002 சனவரி 22 ஆந் திகதி ஏற்பட்டிருந்த சம்பள மோசடியுடன் தொடர்பான பணிப்பாளர் பொது வைத்தியசாலை- கொழும்பிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 2,408,460 ஆன முற்பண மிகுதி 2020 திசெம்பர் 31 வரையில் அறவிடப்படுவதற்கு அல்லது நட்டமாக புத்தகங்களிலிருந்து நீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நடவடிக்கை முறையாகச் செய்யப்பட்டு நிலுவைக் கடன் மிகுதியை அறவிடுவதற்கு போதுமானளவு எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | சிகிச்சைப் பிரிவின் ஏற்பட்ட சம்பள மோசடிகள் மாளிகாகந்த நீதி மன்றத்தில் வழக்கு இலக்கம் பீ/67/02 இன் கீழ் வழக்கொன்றுக்கான விசாரனைகள் இடம் பெற்று வருவதுடன் ஒழுக்காற்று உத்தரவின் பேரில் குற்றம் சாட்டப்பட்ட உத்தியோகத்தரின் சம்பளத்திலிருந்து அறவிடப்பட்டதில் 5மூ ஆன தொகை அரச வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட்டுள்ளதால் அத்தொகை மீண்டும் பெற்று இம் முற்பணக் கணக்கிற்கு செலவு வைக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | போது ரூபா 120,423 தொகை காசாக பெறப்பட்டுள்ளது. 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 2,288,037 ஆன மீதியொன்று நிலுவையாக காணப்பட்டது. |
| (ஔ) | திருகோணமலை மாவட்டச் செயலகத்தின் 2016 ஆம் வருடத்திலிருந்து நடாத்தப்படுகின்ற ரூபா 1,652,917 ஆன நிலுவை மிகுதி தீர்க்கப்படுவதற்கு சதொச நிறுவனத்திற்கு நிதி இயலுமை இல்லாமை குறிப்பிடப்பட்டிருந்தது. அத்துடன் குறிப்பிட்ட மிகுதி | பின் தொடரல் நடவடிக்கை முறையாகச் செய்யப்பட்டு நிலுவைக் கடன் மிகுதியை அறவிடுவதற்கு போதுமானளவு எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | சதொச நிறுவனத்திடமிருந்து அறவிட வேண்டிய தொகைக்கான தேவையான ஆவணங்கள் சேகரிக்கப்பட்டு வருவதாக திருகோணமலை மாவட்டச் செயலாளர் தெரிவித்துள்ளார். | 2022 மார்ச் 23 ஆந் திகதியளவில் நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பதிவளிக்கப்படுவதற்காக நிதிப்பிரமாணம் 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை அவதானிக்கப்பட்டது. | | | |
| (க) | அம்பாறை மாவட்டச் செயலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் நிலுவை மிகுதி ரூபா 45,499,095 என்பதுடன் அது மொத்த நிலுவைத் தொகையில் நூற்றுக்கு 28 வீதம் ஆகும். இந் நிலுவை மிகுதியை அறவிடுவதற்கு திணைக்களம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தவறியிருந்தது. | பின் தொடரல் நடவடிக்கை முறையாகச் செய்யப்பட்டு நிலுவைக் கடன் மிகுதியை அறவிடுவதற்கு போதுமானளவு எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | செலுத்த தவறிய கமநல அபிவிருத்தி மத்திய நிலையங்களுக்கு சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகவும் வழக்குச் செயற்பாடுகள் மூலம் குறிப்பிட்ட தொகையை அறவிடுவதற்காக எதிர்பார்க்கப்படுவதாகவும் தயவுடன் தெரிவிக்கின்றேன்.<br><br>உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்கான பின் தொடரல்களை மேற்கொள்வதற்கும் குறித்துக் கொள்ளப்பட்டது.<br><br>சதொச நிறுவனத்திடம் அறவிட வேண்டிய பணம் பதிவளிக்கப்படுவதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் தேவையான ஒதுக்கங்கள் தேசிய | 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 1,823,931 ஆன கடன் மீதி பதிவழிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக உள்ள கடன் மீதி ரூபா 43,675,164 ஆக காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வரவு செலவுத் திணைக்களத்திடம் கோரப்பட்டுள்ளது. | |
| (கா) | கண்டி மாவட்டச் செயலகத்தின் 2020 சனவரி 01 இல் காணப்பட்ட நிலுவை மிகுதி ரூபா 1,441,687 இல் 2020 திசெம்பர் 31 வரையில் ரூபா 390,000 அதாவது நூற்றுக்கு 27 வீதம் மட்டுமே அறவிடப்பட்டிருந்தது. | பின் தொடரல் நடவடிக்கை முறையாகச் செய்யப்பட்டு நிலுவைக் கடன் மிகுதியை அறவிடுவதற்கு போதுமானளவு எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | கண்டி மாவட்டச் செயலகத்திடமிருந்து அறவிட வேண்டிய தொகை மாதாந்தம் ரூபா 30,000.00 வீதம் தீர்க்கப்படுவதற்கு உடன்பட்டிருந்தமை ஏனெனில் குறிப்பிட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பொருளாதார நெருக்கடியில் இயங்கி கொண்டிருந்த காரணமாகும். ஆனால் இம் மாதாந்த தவணையை கணிசமான தொகையால் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டினுள் மூாத 300,000 அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 751,687 ஆன நிலுவைக் கடன் மீதியொன்று நிலவியது. |
| (கி) | பொது வைப்புக் கணக்குகளில் மாவட்டச் செயலக (6003) வைப்புக் கணக்குகள் 04 இற்கு மற்றும் அமைச்சுக்கள் / திணைக்களங்கள் (6000) வைப்புக் கணக்கிற்கான கூட்டுத்தொகை ரூபா 10,943,683 ஆன வரவு மிகுதியாகக் காணப்பட்டது. | திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகளின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் பெற்றுக் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இம் மிகுதிகளைப் பதிவளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | 02 கணக்குகளுக்குரிய வரவு மீதிகள் பதிவழிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய கணக்கு மீதிகளை தீர்ப்பனவு செய்யுமாறு திறைசேரிகள் செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அறிவித்து அனுப்பப்பட்டிருந்தது. |
| (கீ) | 02 வருடங்களுக்கு மேற்பட்ட வைப்புக்கள் | திணைக்களத்தின் பிரதான | அமைச்சுக்கள், திணைக்களங்கள் | திணைக்களத்தினால் 187 நிறுவனங்களின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் செயற்படுத்துவதற்காக ஆலோசனைகளை வழங்குதல், இதன் கீழான இன்னுமொரு வெளியீடாக இனங்காணப்பட்டிருந்தது. எனினும் மாதிரி அடிப்படையில செய்யப்பட்ட 46 நிறுவனங்களில் காணப்பட்ட 125 வைப்புக் கணக்குகளின் மிகுதி 02 வருடத்திலிருந்து 05 வருடங்களுக்கும் மேற்பட்ட காலப்பகுதியில் முன்கொண்டுவரப்படும் கூட்டுத்தொகை ரூபா 2,854,732,825 ஆன வைப்பு மீதிகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்பாடுகளின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் பெற்றுக் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மற்றும் மாவட்டச் செயலகங்களினால் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அனுப்பட்டிருந்த வருடாந்த இணக்கக் கூற்று மற்றும் காலப்பகுப்பாய்வு அறிக்கைகளின் பிரகாரம் 02 வருடங்களுக்கு மேற்பட்ட மிகுதிகள் தொடர்பாக நி.பி 570 இன் பிரகாரம் பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கு இணங்காத வைப்புக்கள் தொடர்பாக நி.பி 571 இற்கு இணங்க நடவடிக்கை எடுக்குமாறு உரிய நிறுவனத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் 2020.12.31 இல் வைப்புக்கள் கணக்கு தொடர்பான வருடாந்த இணக்க அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு 02 வருடங்களுக்கு மேற்பட்ட மிகுதிகள் தொடர்பான பின்தொடரல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கும் தற்போது திட்டமிடப்பட்டுள்ளது. | காலாவதியான வைப்புகள் தொடர்பில் நி.பி. 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (கு) | மேற்படி பொது வைப்புக் கணக்குகளின் தேறிய மிகுதியில் காணப்பட்ட 108 வைப்புக் கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 1,937,815,718 ஆன ஆரம்ப மிகுதி 2020 ஆம் வருட இறுதி வரையில் அவ்வாறே காணப்பட்டது. | திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகளின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் பெற்றுக் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இத் திணைக்களத்தினால் பல வருடங்களாக செயற்படாமல் காணப்பட்ட மிகுதிகளைத் தொடர்ந்து கண்காணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் ஏனைய மிகுதிகள் தொடர்பான பின் தொடரல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | 58 நிறுவனங்களின் காலாவதியான வைப்புகளின் தேவைப்பாட்டினை தொடர்ந்தும் கோரியுள்ளதுடன், பதில் அனுப்பியுள்ள நிறுவனங்கள் தொடர்பில் பின்தொடர்ந்தவாறு உள்ளது. |
| (கூ) | 2018 ஆம் வருடத்தில் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின் பிரகாரம், எதிர்வரும் 10 வருடங்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் தயாரிப்பதற்காக முன்மொழிவுகள் நிறைவேற்றப்பட்டு இருந்ததுடன் அதற்காக 2018 ஒக்டோபர் 02 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த அமைச்சரவை அங்கீகாரத்திற்கு உரிய சமர்ப்பிக்கப்பட்ட பாதை வரைபடத்தில் (Road Map) உள்ளடக்கப்பட்டுள்ள பணிகளுக்கான | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காலக்கெடு முறையான அங்கீகாரமின்றி திணைக்களத்தினால் திருத்தப்பட்டிருந்தது. மேலும் இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | | | |
| | (i) | ஆரம்ப பாதை வரைபடத்தின் பிரகாரம் 2020 ஆம் வருடத்திலும், திருத்தப்பட்ட பாதை வரைபடத்தின் பிரகாரம் 2022 ஆம் வருடத்தில் முடிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த அரச சொத்துக்களை இனங்காணுதல், அளவிடுவதற்காக மற்றும் வெளிப்படுத்தலுக்கான பணிகள் 2022 ஆம் வருடம் இறுதிக்குள் முடிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இதன் கீழ் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பில் மட்டுமே கவனம் | திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகளின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் பெற்றுக் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அரச சொத்துக்களை இனங்காணுதல், அறவிடுதல் மற்றும் வெளிப்படுத்தலுக்குரிய போதுமானளவு கொள்கையொன்று காட்டப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் 2019 ஆம் வருட இறுதியில் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த நிதியல்லாச் சொத்துக்களின் மதிப்பு ரூபா 1,355 பில்லியன் என்பதுடன் 2020 ஆம் வருடத்தில் அதன் மதிப்பு ரூபா 1,776 பில்லியன் ஆகும். அதன் பிரகாரம் 2020 ஆம் வருடத்தில் காணப்பட்ட தொற்று நோய் நிலைமையை எதிர் கொண்ட போதிலும் ரூபா 421 பில்லியன் சொத்துக்களை கணக்கிட முடிந்தது. அதன் பிரகாரம் திருத்தப்பட்ட பாதை வரைபடத்தின் பிரகாரம் இப்பணி 2022 ஆம் வருட இறுதியில் முடிக்கப்படுவதற்கு | 2021 நவம்பர் மாதத்தின் இறுதியளவில் உள்ளபடியான நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,849 பில்லியன் ஆகும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | செலுத்தப்பட்டிருந்ததுடன் காணி மற்றும் கட்டிடங்கள் காணப்பட்ட 214 மத்திய அரச நிறுவனங்கள் இயங்கி வருவதாகவும் அவற்றில் 60 காணி மற்றும் கட்டிடங்கள் இல்லையெனவும் அவற்றில் முழுமையாக மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கில் எடுக்கப்பட்டமை இறுதி 10 நிறுவனங்கள் மட்டுமே எனவும் கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் காணப்பட்ட நிறுவனங்களின் சொத்துக்களின் சதவீதம் நூற்றுக்கு 07 வீதம் மட்டுமே ஆகும். | | எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| | (ii) | ஆரம்ப பாதை வரைபடத்தின் பிரகாரம் 2020 ஆம் வருடத்தில் முடிக்கப்படுவதற்கு | திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகளின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் பெற்றுக் கொள்ளப்படுவதற்கு | பாதை வரைபடத்தில்உள்ளடங்கியுள்ள பொறுப்புக்கள் இனங்காணப்படல் பணிகள் | செலுத்த வேண்டிய உருப்படிகளை இனங்காணல் எதிர்காலத்தில் ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்டிருந்த பொறுப்புக்கள் இனங்காணப்படல், அளவிடுதல் மற்றும் வெளிப்படுத்தல்களுக்கான பணிகள் திருத்தப்பட்ட திட்டத்தின் மூலம் 2022 ஆம் வருடம் வரையீல் தாமதமாக்கப்பட்டிருந்ததுடன் அதன்கீழ் ஆரம்பப்பணிகள் மட்டுமே இற்றை வரையில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் வருடத்தில் ஏற்பட்ட கொவிட் தொற்று நிலைமை காரணமாக அப்பணி முடிக்கப்படுவதற்கு 2022 வரை நீடிப்பதற்கு ஏற்பட்டது. அத்துடன்,அப்பாதை வரைபடத்தில்உள்ளடங்கியுள்ள செலுத்த வேண்டிய விடயங்கள் இனங்காணப்படும் பணிகள் இற்றை வரையீல் ஆரம்பிக்கப்படாமையுடன் அப்பணிகள் 2021 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | . |
| | (iii) | ஆரம்ப பாதை வரைபடத்தின் பிரகாரம் 2021 ஆம் வருடத்தில் முடிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த வருமானம் மற்றும் செலவுகளை இனங்காணல், அளவீடு செய்தல் மற்றும் வெளிப்படுத்தல் பணிகள் திருத்தப்பட்ட பாதை | திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகளின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் பெற்றுக் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | திருத்தப்பட்ட பாதை வரைபடத்தின் பிரகாரம் அட்டுறு அடிப்படையில் வருமானம் மற்றும் செலவுகளை இனங்காணல், அளவீடு செய்தல் மற்றும் வெளிப்படுத்தல் 2026 ஆம் வருடத்திற்குப் பின்னர் முழுமையாக அட்டுறு அடிப்படையின் கீழ் கணக்குகளை வைத்திருத்தபகதற்கும் செயற்படுத்துவதற்கு | முழுமையான அட்டுற அடிப்படையில் கணக்கு வைக்கும் கட்டத்தில் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | வரைபடத்தின் மூலம் 2026 ஆம் வருடத்திற்குப் பின்னர் தாமதமாக்கப்பட்டிருந்தது. | | எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| | (iv) | மேற்படி அமைச்சரவைப் பத்திரத்தின் படி ஒவ்வொரு வருடமும் முடிவடைந்து ஒரு மாதத்தின் பின்னர் உரிய செயற்பாடுகளுக்கான முன்னேற்றம் அமைச்சரவைக்கு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும், இற்றை வரையில் ஒரு முன்னேற்றம் கூட அறிக்கையிடப்படவில்லை. | திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகளின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் பெற்றுக் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இற்றை வரை உரிய செயற்பாடுகளின் முன்னேற்றம் அறிக்கையிடப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்வதுடன் இந்த வருட இறுதியில் உள்ளபடி முன்னேற்றம் அறிக்கையிடப்படுவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. | ஒரு பூர்வாங்க முடிவை எட்டிய பிறகு, மேற்கூறிய உருப்படிகள் உட்பட திருத்தப்பட்ட சாலைத் திட்டத்துடன் முன்னேற்றம் தெரிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. |
| (கெ) | 2019 ஆம் வருடத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் தொழில்நுட்ப உதவி வழங்கப்படுகின்ற தூதரலாயத்தினால் வழங்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் 2020 இன் பிரகாரம் திணைக்களத்தால் வழங்கப்படுகின்ற அரச நிதித் தகவல்கள் | | திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகளின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் பெற்றுக் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சர்வதேச நாணய நிதியம் வழங்கிய செயல் நடவடிக்கைத் திட்டம் 2020 ஆம் வருடத்திற்காக மட்டுமே மட்டுப்படுத்தப்படவில்லை என்பதுடன் 2020 ஆம் வருடத்தில் நாட்டில் நிலவிய தொற்று நோய் நிலைமை காரணமாக உள்ளூராட்சி | உள்ளூராடசி நிறுவனங்களிடையே, கொழும்பு மாநகர சபை தொடர்பான நிதி தகவல்களை உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அரசநிதிப் புள்ளிவிபரவியல் (Government Finance Statistics) மத்திய அரசு, மாகாண சபைகள் மற்றும் உள்ளுரட்சி நிறுவனங்களில் 2015 ஆம் வருடத்திலிருந்து 2018 ஆம் வருடம் வரை 4 வருடங்களுக்கு அரச துறைகளுக்குச் சொந்தமான அனைத்து வணிக நிறுவனங்களிலும் நிதித் தகவல்களை சேகரித்தல் மற்றும் ஒன்றினைப்பதற்கான திட்டம் செயற்படுத்தப்படுதல் 2020 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மத்திய அரசு, மாகாண சபை மற்றும் உள்ளுாட்சி நிறுவனங்களில் அந் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளுராட்சி மாற்றங்கள் தொடர்பாக இந் நடவடிக்கைகள் இற்றை வரையில் ஆரம்பிக்கப்பட்டதாக அவதானிக்கப்படவில்லை. | | நிறுவனங்களுக்கு உரிய நடவடிக்கை ஆரம்பிப்பது நடைமுறையில் சாத்தியமற்றது. | |

**அரசின் நிதிக்கூற்றுக்கள்**

நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்** | **நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடைமுறைகள்** | **அது தொடர்பிலான தற்போதைய நிலைமை** |
|---|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டின் போது, அரச நிதிக் கூற்றுக்களில் ரூபா 731,732 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியல்லாத சொத்துக்கள் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த சொத்துக்களின் பெறுமானத்தேய்விடம் கூடிய பெறுமதி அதன் பயன்படு ஆயுட்காலம் முழுவதற்கும் கிரமமான முறையில் ஒதுக்கீடு செய்து குறைந்து செல்லும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. அதன் பிரகாரம் இந்த சொத்துக்களின் திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் திரண்ட அழிவு நட்டம் ஏதேனும் காணப்படின் அதனை கழித்த பின்னர் கிடைக்கும் கொண்டு | அடிப்படை கணக்கீட்டு எண்ணக்கருக்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. | அரசாங்கத்திற்கு சொந்தமான அனைத்து நிதியல்லாத சொத்துக்களையும் இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படு வதுடன் உத்தேசிக்கப்பட்ட கணக்கீட்டுச் சட்டகம் மற்றும் நியமம் அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் பொருத்தமான பெறுமானத்தேய்விடல் கொள்ளையொன்றை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் அது திருத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செல்லும் பெறுமதி நியாயமான முறையில் காண்பிக்கப்படவில்லை. | | | |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 811,773 மில்லியன் முதலீடுகளாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் நிதியல்லாத சொத்துக்களாக காண்பிக்கப்பட்டிருந்தது ரூபா 42,864 மில்லியன் மாத்திரம் ஆகும். நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த முதலீட்டு செலவினத்தில் ரூபா 768,909 நிதியல்லாத சொத்துக்களாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 10 இன் பிரகாரம் முதலீட்டு சொத்துக்களினை சுவீகரிப்பதற்காக ரூபா 141,843 மில்லியன் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் குறிப்பு இலக்கம் 16 இல் ஆண்டினுள் இடம்பெற்ற கொள்வனவுகள் ரூபா 42,864 மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களை கொள்வனவு செய்வதன் அடிப்படையிலான செலவினங்கள் மாத்திரம் மூலதன செலவினங்களாக அறிக்கையிடப்பட வேண்டியமை. | அரச முதலீட்டு செலவினத்தினுள் மூலதன சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல்கள், இயலுமை அபிவிருத்தி மற்றும் ஏனைய மூலதன செலவினங்கள் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் மூலதன சொத்துக்களை கைப்பற்றுவதன் கீழான செலவினங்கள் மாத்திரம் நிதியல்லாத சொத்துக்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் அது திருத்தப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | கடந்த வருடத்தினுள் நிதி நிலைமைக் கூற்றில் அரச கடனாக வகைப்படுத்தப்படாத இலங்கை மத்திய வங்கி | சரியான மற்றும் தொடர்ச்சியான தகவல்களின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்களை | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 ஆம் ஆண்டுக்கு முன்னர் நிலவியதாக அரச கடன் வகைப்படுத்தப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | முற்பணங்கள் 2020 ஆம் ஆண்டின் போதும் அரச கடனாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. அது திரண்ட நிதியத்தின் ஊடாக ஏனைய கடன் பெறுவனவுகளை கணக்கு வைக்கும் நடைமுறைக்கு முரணாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திரண்ட நிதியத்தில் ரூபா 153,079 மில்லியன் பெறுமதி குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | வெளிப்படுத்த வேண்டும். | | |
| | (i) துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட MPS/SEC/2017/32 ஆம் இலக்க மற்றும் 2017 யூலை 20 ஆந் திகதிய ''அம்பாந்தோட்டை துறைமுக சலுகை ஒப்பந்தம்'' என்ற பெயரிலான அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2017 ஆகஸ்ட் மாதம் 04 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன், அதன் அடிப்படையில் அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணத்திற்காக அரசினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களிலிருந்து தொடர்ந்தும் செலுத்த வேண்டிய மீதிகளை மீள | அரசின் நிதிக்கூற்றுக்களில் அரச படுகடன் மீதிகள் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். | ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் நிர்மாணத்திற்காக பெற்றுக்கொள்ளப் பட்ட கடன் தொகை 2017ஆம் ஆண்டு வரையிலும் இலங்கை துறைமுக அதிகாரசபையினா ல் செலுத்தப்படுவதுட ன், 2017 ஆகஸ்ட் மாதம் 04 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், கடன் சேவைப்படுத்தல் திறைசேரியினால் மேற்கொள்ளப்படு ம். ஹம்பாந்தோட்டை துறைமுகம் இலங்கை | ஹம்பாந்தோட்டை துறைமுகம் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சொந்தமான சொத்தாக இருப்பதால், இந்தப் பொறுப்பை துறைமுக அதிகார சபையின் புத்தகங்களில் உள்ளடக்குமாறு தலைவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2020 ஆம் ஆண்டளவில் கூட, இந்த கடன் பொறுப்பு அதிகார சபையின் புத்தகங்களில் சேர்க்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலுத்தும் பொறுப்பு அக்கடன் உடன்படிக்கை அமுலாகும் திகதி முதல் அமுலாகும் வகையில் பொது திறைசேரியினால் பொறுப்பேற்கப் பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அவ்வாறு செலுத்தப்பட வேண்டிய ரூபா 164,602 அக்கடன் மீதி குடியரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே அக்கடன் மீதி துறைமுக அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களிலிருந்தும் நீக்கப்பட்டிருந்தது. | | துறைமுக அதிகாரசபையின் சொத்தொன்றான மையால் அதனை அதிகாரசபையின் புத்தகங்களில் உள்ளடக்குமாறு தலைவருக்கு அறிவிக்கப்பட்டுள் ளது. | |
| | (ii) அரசின் நிதிக்கூற்றுக்களின் நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டினுள் வெளிநாட்டுக் கடன் மீள் கொடுப்பனவு பெறுமதி ரூபா 504,209 மில்லியன் ஆக இருந்தது. நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 28 (வெளிநாட்டுக் கடன் மீதிகள் கூற்று) இன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் வெளிநாட்டுக் கடன் கொடுப்பனவு பெறுமதி ரூபா 489,057 மில்லியன் என காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வெளிநாட்டுக் கடன் மீள் | அரசின் நிதிக்கூற்றுக்களில் அரச படுகடன் மீதிகள் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். | அந்த வேறுபாடு இலங்கை துறைமுக அதிகாரசபையின் கீழ் கணக்கு வைக்கப்பட்டுள்ள ரூபா 15,152.44 மில்லியனான கடன் மீதிகளுக்குரிய உரிய கடன் வழங்கிய நிறுவனங்களுக்கு 2020 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கடன் மீளளிப்பு ஆகும். | மேற்படி கடன் தொகை தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய எதிர்கால நடவடிக்கைகளின் அடிப்படையில், மேற்படி கடன் தொகை தொடர்பான கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குப் பதிவு செய்யப்பட வேண்டிய செலவின விடயம் தீர்மானிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கொடுப்பனவுகளின் வேறுபாடு ஹம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணிப்பதற்காக அரசாங்கத்தினால் செலுத்தப்படும் ரூபா 15,152 மில்லியன் 28 கடன் தவணைகளில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | | | |
| (ஈ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அரச நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படும் வெளிநாட்டு கடன் மீதி அத்திகதியில் நிலவிய அந்நிய செலாவணி வீதங்களுக்கு (Closing Rate) மாற்றும் போது ரூபா 282,565 மில்லியன் அந்நிய செலாவணி மாற்று நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. அந்த நட்டம் நிதிச் செயலாற்றல் கூற்றுக்கு சீராக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அல்லாது தேறிய சொத்துக்கள் சீராக்கல் கணக்கிற்கு (Net Asset Adjustment Account) சீராக்கப்பட்டிருந்தது. | சரியான கணக்கீட்டு கொள்கைகளின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்களை தயாரிக்க வேண்டியமை. | அட்டுறு அடிப்படையில் கணக்குகளை தயாரித்தல் இடம்பெறுகின்றமையால் குறித்த நட்டத்தை நிதிச் செயலாற்றலுக்கு சீராக்கம் செய்யப்படுவதில்லை. | 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களிலும் திருத்தப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 1994 ஏப்ரல் 20 ஆந் திகதிய 30/94 ஆம் இலக்க வெளிநாட்டு உதவிகளை கணக்கு | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வெளிநாட்டு | 1994 ஏப்ரல் 20 ஆந் திகதிய 30/94 ஆம் இலக்க அரச | இந்தத் திணைக்களத்தினால் மற்றும் திறைசேரியின் ஏனைய திணைக்களங்களின் ஒருங்கிணைப்புடன், அனைத்து |

| | | | | |
|---|---|---|---|---|
| | வைப்பதற்குரிய அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கமைய வெளிநாட்டு உதவிகள் தொடர்பான அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் பொது திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும். 2020 ஆம் ஆண்டின் போது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கமைய பொது திறைசேரிக்கு அறிவிக்காது ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் ரூபா 1,266 மில்லியனான வெளிநாட்டு மானியங்கள் நேரடியாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது பொது திறைசேரிக்கு அறிவிக்காது 24 நிறுவனங்களால் 77 செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டினுள் ரூபா 2,026 மில்லியன் வெளிநாட்டு மானியங்கள் நேரடியாக உரிய நிறுவனங்களுக்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அவை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கணக்கு | நன்கொடைகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் உரிய முறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். | கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து வெளிநாட்டு நன்கொடைகளும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளப் பட வேண்டும். | அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு வெளிநாட்டு மானியங்களைப் பெறுவதற்கான சரியான முறை மற்றும் அதற்கேற்ப செயல்படுவதற்கான சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வைக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஊ) | 2020 ஆம் ஆண்டின் போது விவசாய அமைச்சின் 118-2-3-50-2301/11 ஆம் செலவினத்தின் கீழ் ரூபா 773 மில்லியன் தொகை நெல் சந்தைப்படுத்தல் சபைக்காக மற்றும் திறன்கள் அபிவிருத்தி தொழில்சார் கற்கைகள், ஆராய்ச்சி மற்றும் புத்தாக்குனர் இராஜாங்க அமைச்சின் 421-2-4-12-2301/11 செலவின விடயத்தின் கீழ் பூர்த்தி செய்யப்பட்ட தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 10 மில்லியன் படியாக ரூபா 783 மில்லியன் கூட்டுத் தொகையான மூலதன பங்களிப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும் அது நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. | சரியான கணக்கீட்டு கொள்கைகளின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்களை தயாரிக்க வேண்டியமை. | 2020 மார்ச் 05 ஆந் திகதிய அமப/20/0513/204/042 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இந்த உரித்தினை வழங்கியுள்ளமையால் அரச நிதிக் கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 21 இல் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. 2021 ஆம் ஆண்டினுள் தேவையான சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | நெல் சந்தைப்படுத்தல் சபைக்கான திருத்தங்கள் 2021 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. |
| (எ) | அரச மூலதன பங்களிப்பாக ரூபா 1,358 மில்லியன் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்தமை அது அரசின் 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் ரூபா 100 மில்லியன் குறைவாக | சரியான வழிகாட்டல்கள் மற்றும் அறிவுரைகளின் அடிப்படையில் மூலதனப் பங்களிப்பு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | ரூபா 1,257 மில்லியன் பொது திறைசேரியினால் நிறுவனத்திற்கு மூலதனப் பங்களிப்பாக வழங்கியிருந்த போதிலும அதிகார சபையினால் அது | நகர அபிவிருத்தி அதிகார சபையின் கணக்குப்படி திறைசேரியில் இருந்து பெறப்பட்ட ரூபா 100 மில்லியன் ஆரம்ப மானியமாக கணக்கு காட்டப்பட்டுள்ள போதிலும் ஆரம்ப மானியமாக வழங்கப்பட்ட ரூபா 100 மில்லியன் அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ரூபா 1,258 மில்லியனாக காண்பிக்கப்பட்டிருந்தது. | | பொது திறைசேரியிடமிருந்து பெற்ற மானியமொன்றாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் நிறுவனத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | கணக்கிடப்படவில்லை. |
| (ஏ) | 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் பட்டோலை IV இல் ரூபா 152,826 மில்லியனான பொறுப்புக்கள் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புகள் கூற்றின் பிரகாரம், மொத்த பொறுப்புகளின் அளவானது ரூபா 181,906 மில்லியனாக காணப்பட்டது. அதன் பிரகாரம், நிதிக்கூற்றுக்களின் IV ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டோலையில் குறிப்பிடப்பட்டுள்ள அளவானது ரூபா 29,080 மில்லியன் குறைவாக குறிப்பிடப்பட்டிருந்தது. | சரியான கணக்கீட்டு கொள்கைகளின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டினுள் இடம்பெற்ற அமைச்சுகள் மூடப்படல், ஒருங்கிணைத்தல், மாற்றுதல் மற்றும் விடயப்பரப்பு மாற்றமடைந்த காரணத்தால் அந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது. | 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அமைச்சுக்களின் மூடல், ஒருங்கிணைப்பு, மாற்றங்கள் மற்றும் நோக்கம் மாற்றங்கள் காரணமாக தொடர்புடைய மாற்றங்கள் ஏற்பட்டன. எதிர்வரும் வருடங்களில் சரியான தகவல்கள் முன்வைக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (ஐ) | 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச | வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமை | வருடாந்த ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தி | வருடாந்த ஒதுக்கீட்டு சட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் அல்லது மேலதிக நிதியேற்பாடுகளின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த மற்றும் அதனை பயன்படுத்திய பின்னர் சேமிப்பினை விஞ்சாத வகையில் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட இயலுமான போதிலும் அதற்கு முரணாக 2020 ஆம் ஆண்டின் போது பாராளுமன்றத்தினால் 49 செலவினத் தலைப்புக்களின் கீழ் 619 செலவின விடயங்களுக்காக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்த செலவின விடயங்களின் கீழ் 29,369 மில்லியனான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | ய நிறுவனத்தை செயற்படுவதற்கு ஆர்வமூட்ட வேண்டியமை. | ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் அல்லது மேலதிக நிதியேற்பாட்டு எல்லையினுள் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் மூலம் அறிவுரை வழங்கப்பட்டுள்ள து. | எல்லையினுள் பொறுப்புகள் உருவாக்கப்பட வேண்டும் என, 255/2017 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் மூலம் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஒ) | 4 நிறுவனங்களுடன் ரூபா 44,253 மில்லியனுக்கு அரசு பொறுப்புக்களை ஏற்படுத்தியிருந்ததுடன் அந்த பொறுப்புக்கள் அரச நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | சரியான தகவல்களை உள்ளடக்கி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. | பதில் வழங்கப்படவில்லை ல. | இது சம்பந்தமாக, நிறுவனத்திற்கு பொறுப்புகளை முறையாக தெரிவிக்க வேண்டியது சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக கருதி அரச கணக்குகள் திணைக்களத்தினால் அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. |
| (ஓ) | அரச கொள்கை ரீதியான தீர்மானமொன்றின் அடிப்படையில் கடன் உடன்படிக்கை இலக்கம் 2019011 கொண்ட இலகு | சரியான வழிகாட்டல்கள் மற்றும் அறிவுரைகளின் அடிப்படையில் | இதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழு இதுவரையிலும் இரு தடவைகள் | இதனுடன் தொடர்புடையதாக 07 சுற்று கூட்டங்கள் இடம்பெற்றுள்ளதுடன், இது தொடர்பில் எதிர்காலப் பணிகள் கலந்துரையாடப்பட்டுள்ளது. 2021 |

| | | | | |
|---|---|---|---|---|
| | புகையிரத புலம்பெயர்வு கட்டமைப்பு செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையை நிறைவு செய்யப்பட்ட காரணத்தினால் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மதியுரை ஒப்பந்த உடன்படிக்கையினை நிறைவு செய்யப்பட்டதன் அடிப்படையில் உரிய மதியுரை நிறுவனங்களினால் நட்டங்கள் மற்றும் இழப்புக்களாக ரூபா 5,896 மில்லியன் உரித்துக் கோரப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் அரச நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. | மாத்திரம் கூடியுள்ளதுடன் உரிய மேலதிக பணிகள் முன்னெடுக்கப்பட்ட வாறு உள்ளன. | ஆம் ஆண்டின் அரசின் நிதிக்கூற்றுக்களிலும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஔ) | 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் எந்தவொரு பொறுப்பும் எதிர்வரும் வருடத்திற்கு முன்கொண்டு செல்ல முடியாதென அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் 42 செலவின தலைப்புக்களின் கீழ் 86 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதிஏற்பாடு | வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நிறுவனம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கின் கீழ் ஒதுக்கப்படும் அல்லது மேலதிக நிதியேற்பாட்டு எல்லையினுள் பொறுப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் மூலம் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | அரச கணக்குகள் திணைக்களத்தினால் அதற்கு தேவையான அறிவுரைகள் அரச கணக்குகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை இலக்கம் 255/2017 இன் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்டிருந்த மையால் சேமிப்புக்கள் ஏதும் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. எவ்வாறான போதிலும் அந்த செலவின விடயங்களின் கீழான நிதியேற்பாடு நீங்கலாக ரூபா 41,601 மில்லியனான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | | | |
| (க) | 105 செலவின தலைப்புக்களின் கீழான 676 செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டில் பயன்பாட்டின் பின்னர் ரூபா 10,262 மில்லியனான நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. அந்த எஞ்சிய நிதியேற்பாடு ரூபா 69,745 இனால் விஞ்சி ரூபா 80,013 மில்லியனான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நிறுவனம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கின் கீழ் ஒதுக்கப்படும் அல்லது மேலதிக நிதியேற்பாட்டு எல்லையினுள் பொறுப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் மூலம் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | அரச கணக்குகள் திணைக்களத்தினால் அதற்கு தேவையான அறிவுரைகள் அரச கணக்குகள சுற்றறிக்கை இலக்கம் 255/2017 இன் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. |
| (கா) | இலங்கை மத்திய வங்கியில் காணப்படும் தகவல்களின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் நடாத்திச் செல்லப்படும் சுழற்சி கடன் முன்மொழிவுகளுக்குரிய ரூபா 13,209 மில்லியன் | தேவையான அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களை நாளதுவரையாகவும் சரியானதாகவும் சமர்ப்பிக்க வேண்டும். | இந்த கடன் முன்மொழிவுத் திட்டங்களுக்குரிய கணக்கு மீதிகள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகத்தர்க ளுடன் கலந்துரையாடி உண்மையாக | இலங்கை மத்திய வங்கியின் ஆரம்ப முதலீட்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு அபிவிருத்திக் கடன் திட்டங்களின் நிலுவைகள் மற்றும் மீதிகள் மேலதிக தொகையாக அறவிடப்பட வேண்டிய மீள் நிதியீட்ட பெறுவனவுகளாவதுடன், இது தொடர்பாக இலங்கை வங்கியுடன் கலந்துரையாடி |

| | | | | |
|---|---|---|---|---|
| | கூட்டுப்பெறுமதியான 10 கணக்கு மீதிகள், இலங்கை மத்திய வங்கிக்கு உரித்தானதல்ல எனவும் அம்மீதிகள் இலங்கை அரசிற்கு சொந்தமான முதலீடுகள் மற்றும் மீள்நிதியிடல் கடன் எடுத்தல் எடுத்தல் என கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதும் அக்கணக்கு மீதிகள் அரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | அரசின் கணக்குகளுக்கு எடுக்க வேண்டிய கணக்கு மீதிகள் காணப்பட்டால் இணக்கப்பாடு எட்டப்பட்டதன் பின்னர் பொருத்தமானவாறு கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. | முடிவெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (கி) | 2020 ஆம் ஆண்டிற்கான அரசின் நிதிக்கூற்றுக்களினுள் நீண்டகாலமாக விளைவற்று காணப்படும் 10 கணக்குகளுக்குரிய ரூபா 7,407 மில்லியன் மீதிகள் தீர்க்கப்படாது காணப்பட்டன. | நிதிக்கூற்றுக்களில் தீர்ப்பனவு செய்யப்பட்ட மற்றும் நாளதுவரையாக்கப் பட்ட பெறுமதிகள் உள்ளடக்கப்பட வேண்டும். | பிரதான பேரேட்டுக் கணக்குகள் நீண்ட காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்ட போதிலும், அவற்றை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு முன்னர் அந்த கணக்குகள் தொடமர்ந்தும் கட்டமைப்பில் பேணப்பட வேண்டுமா என்பது தொடர்பில் தீர்மானிப்பதற்காக திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் | செயலற்ற கணக்குகளுக்குரியதாக அந்த நிறுவனங்களுடன் கலந்துரையாடி அந்த கணக்குகளை தீர்ப்பனவு செய்யும் பணிகள் இடம்பெற்றவாறு உள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அந்த குழுவின் பரிந்துரை கிடைத்த பின்னர் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (கீ) | மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 51 நிறுவனங்களின் 2020 ஆம் ஆண்டிற்கான அரச நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள காணிகளின் பெறுமதிகள், விலைமதிப்பீட்டு திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியை விட ரூபா 130,886 மில்லியன் குறைவாக ரூபா 3,016 மில்லியன் கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான வழிகாட்டல்கள் மற்றும் நிதியல்லாத சொத்துக்கள் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விலைமதிப்பீட்டு திணைக்களத்தினால் காணியொன்று அல்லது கட்டிடமொன்று மதிப்பீடு செய்யப்பட்டு அறிக்கையிடப்பட்ட பின்னர் அந்த பெறுமதி CIGAS கட்டமைப்பின் ஊடாக கணக்கு வைப்பது குறித்த நிறுவனத்திற்குரிய பொறுப்பாகும். | மதிப்பீட்டு அறிக்கையின் பிரதியொன்று விலைமதிப்பீட்டு திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தினால் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், அந்த மதிப்பீட்டு அறிக்கையின் பிரதி கிடைத்தவுடன், உடனடியாக அந்த மதிப்பீட்டு பெறுமதிகள் CIGAS கட்டமைப்பின் ஊடாக கணக்கு வைக்குமாறு குறிப்பிட்டு அரச கணக்குகள் திணைக்களத்தினால் உரிய நிறுவனங்களுக்கு கடிதங்கள் அனுப்பப்படும். |
| (கு) | மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 73 நிறுவனங்களின் அரச நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள கட்டிடங்களின் பெறுமதிகள், மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியை விட ரூபா 22,936 மில்லியன் குறைவாக ரூபா 37,362 மில்லியன் கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான வழிகாட்டல்கள் மற்றும் நிதியல்லாத சொத்துக்கள் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விலைமதிப்பீட்டு திணைக்களத்தினால் காணியொன்று அல்லது கட்டிடமொன்று மதிப்பீடு செய்யப்பட்டு அறிக்கையிடப்பட்ட பின்னர் அந்த பெறுமதி CIGAS கட்டமைப்பின் ஊடாக கணக்கு வைப்பது குறித்த நிறுவனத்திற்குரிய | மதிப்பீட்டு அறிக்கையின் பிரதியொன்று விலைமதிப்பீட்டு திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தினால் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், அந்த மதிப்பீட்டு அறிக்கையின் பிரதி கிடைத்தவுடன், உடனடியாக அந்த மதிப்பீட்டு பெறுமதிகள் CIGAS கட்டமைப்பின் ஊடாக கணக்கு வைக்குமாறு குறிப்பிட்டு அரச கணக்குகள் திணைக்களத்தினால் உரிய நிறுவனங்களுக்கு கடிதங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பொறுப்பாகும். | அனுப்பப்படும். |
| (கூ) | அரச நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதியல்லாத சொத்துக்கள் (Non – Financila Assets) பெறுமதி ரூபா 1,776,368 மில்லியன் ஆகும். அதற்குரிய நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 16 இல் உள்ளடக்கப்பட்டுள்ள நிறுவனங்களிடையே மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 102 நிறுவனங்களின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த நிதிக்கூற்றுக்களில் ஏ.சீ.ஏ – 6 மாதிரியில் அதாவது "நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில்" உள்ளடக்கப்பட்டுள்ள 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதியல்லாத சொத்துக்களின் மீதியுடன் இணக்கம் செய்யும் போது 05 சொத்து வகைகளுக்குரிய ரூபா 15,220 மில்லியனுக்கு மேலதிகமான சொத்துக்களிள் 06 வகைகளுக்குரிய ரூபா 26,641 மில்லியனை விட குறைவாக கணக்கு | நிதிக்கூற்றுக்கள் சரியான தகவல்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட வேண்டியமை. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது அந்த நிதிக்கூற்றுக்களை திறைசேரியின் புத்தகங்களுடன் இணக்கம் செய்யப்படும் கண்கரு மீதிகள் மாத்திரம் உள்ளடக்கப்படும். | நிறுவனங்களின் நிதி அல்லாத சொத்துக்களின் தனிப்பட்ட மீதிகளின் பட்டியல்கள் திறைசேரி புத்தகங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், அரச நிதிக்கூற்றுக்களினுள் நிதியல்லாத சொத்துக்களின் மீதி ரூபா 11,421 இனால் குறைவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | | | |
| (கெ) | 2020 ஆம் ஆண்டின் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் ஆகியவற்றுடன் இணங்காத கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு. | | | |

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணக்கமின்மைகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | அது தொடர்பிலான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|---|
| | (i) | 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு) அதிகாரச்சட்டம் | (i) 2013 இன் 15 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புகள்) (திருத்திய) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், ஏதேனுமொரு வருடத்தின் இறுதியில் நிலவக்கூடிய | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது வளர்ந்து வரும் கோவிட்-19 தொற்று நிலைமை காரணமாக எதிர்பாராத விதமாக, அரசாங்கத்தின் நிதியும் செயல்முறை மற்றும் பொருளாதாரத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது , எனவே அரசாங்கம் சுகாதாரம் மற்றும் பிற துறைகளுக்கு | மேற்படி அதிகாரச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் பிரகாரம் அந்த முடிவுகளிலிருந்து விலகுதல் தொடர்பில் 2021.06.22 ஆந் திகதி பாராளுமன்றத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது . |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | ஆகக்கூடிய பொறுப்புக்களின் பெறுமதி அந்த வருடத்திற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 80 சதவீதத்தினை மிஞ்சக்கூடாது. அந்த எல்லைகளுக்கமைய நிதி அமைச்சு செயற்பட்டுள்ளதாக அமைச்சின் நிதிக் கூற்றுக்களுக்கமைய புலப்பட்ட போதிலும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டுக் கடன் மற்றும் நிதி நிலைமைக் கூற்றிற்கு புறம்பாக கணக்கு வைக்கப்பட்டுள்ள வெவ்வேறு பொது முயற்சிகளுக்குரிய பொறுப்புகளையும் கவனத்திற்கொள்ளும் போது அந்த உரிய எல்லைகள் 97.7 சதவீதம் மீறப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு.<br><br>* பொது திறைசேரியின் பிணை முறியின் அடிப்படையில் | | அதிக செலவினங்களைச் சுமக்க வேண்டியிருந்தது. | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | அரச முயற்சிகளால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கடனுக்காக வங்கிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பிணைமுறிகள் மற்றும் நிவாரணக் கடிதங்களின் பெறுமதியான ரூபா 1,059 பில்லியன் மற்றும் அமைச்சு, திணைக்களங்கள் மற்றும் விசேட செலவின அலகுகளில் வருடாந்த நிதிக்கூற்றுக்களில் பொறுப்புகள் கூற்றினுள் உள்ளடக்கப்பட்டுளுள்ள ரூபா 153 பில்லியன் பெறுமதி மேற்படி பொறுப்புகளினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| | | | (ii) மீளாய்வாண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட பாதீட்டு விலகல் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் ஐந்து சதவீதத்தினை விஞ்சாத வகையில் மதிப்பீடு | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட பாதீட்டு விலகல் ரூபா 1,266 பில்லியனாவதுடன், அதன் பிரகாரம், அது அப்போதைய மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியான ரூபா 16,003 பில்லியனில் 7.9 | 2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் மற்றும் 2020 மார்ச் முதல் இலங்கை அனுபவித்து வரும் முன்னோடியில்லாத கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக, உள்ளூர் பொருளாதாரத்தில் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | செய்வதற்கும், மீளாய்வாண்டின் இறுதியிலான பாதீட்டு விலகல் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் ஐந்து சதவீதத்தினை விஞ்சாத வகையில் பேணுவதற்கும் நிதி அமைச்சு தவறியுள்ளமை அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு. | | சதவீதம் ஆகும். 2015 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சியடைந்தமை மற்றும் 2019 ஆம் ஆண்டின் போது இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக பொருளாதார பணிகள் வலுவிழந்தமை மற்றும் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக அரச நிதிச் செயன்முறைக்கு மற்றும் பொருளாதாரத்திற்கு தாக்கமொன்று ஏற்பட்டுள்ளமையால் சுகாதார மற்றும் ஏனைய துறைகள் தொடர்பில் உயர் அரச செலவினம் மேற்கொள்ள நேர்ந்தது. | எதிர்மறையான தாக்கம் காரணமாக அரசாங்க வருமானம் மற்றும் செலவுகள் உட்பட முழு பொது நிதி செயல்முறையும் கடுமையாக சவாலாகியுள்ளது. |
| | (ii) | 2020 இன் 06 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டம | அமைச்சரால் அரசின் அங்கீகார அமைச்சரின் ஒப்புதலுடன், சட்டத்தின் மூன்றாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகபட்ச | சட்டத்தின் ஏற்பாடுகளுக் கமைய செயல்பட வேண்டும். | 06 தலைப்புகளின் எல்லைகளை திருத்துவதற்கான கோரிக்கைகள் 2020 திசெம்பர் 31 இற்குள் சமர்ப்பிக்கப்பட வில்லை என்பதுடன், 04 | வரம்புகளுக்கு இணங்காதது தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | வரம்புகள் மற்றும் குறைந்தபட்ச வரம்புகள் ஏதேனும் 2021 மே 31 ஆந் திகதியினுள் அல்லது அதற்கு முன் மாற்றப்படல் அல்லது திருத்தங்கள் செய்ய இயலுமான போதிலும், கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, அவை 07 நிறுவனங்களின் எல்லைகள் அவ்வாறு மாற்றுவதற்கு/திருத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | | தலைப்புகளின் திருத்தங்களுக்கு சமர்ப்பிக்கப்படாத எல்லைகள் காணப்படுகின்றன | ளது. |
| | (iii) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | | |
| | * | நிதிப்பிரமாணம் 373 | ஒவ்வொரு வருடத்தினதும் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக பல வருடங்களாக முன்கொண்டுவரப்ப | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயல்பட தேவையான வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும். | மீன்பிடிக் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தில் நிலவும் கடும் நிதி நெருக்கடி காரணமாக இந்த 03 கணக்குகளில் ஒன்றின் மீதித்தொகையை செலுத்த முடியவில்லை என அமைச்சின் செயலாளர் | கட்டுநிதி கணக்குகள் தீர்க்காத நிறுவனங்களுக்காக வருடாந்த கட்டுநிதி விடுவித்தல் மட்டுப்படுத்த இதுவரையிலும் திறைசேரியின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | டும் 03 கட்டுநிதிகளுக்குரிய ரூபா 118 மில்லியன் கூட்டுத்தொகையான கணக்கு மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | | தெரிவித்துள்ளார். மற்றுமொரு நிலுவைத் தொகையை செலுத்துவதற்கு வெளிநாட்டு தூதரகங்களில் இருந்து தகவல்களை சேகரித்து மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மீதமுள்ள மீதியை எவ்வாறு செலுத்துவது என்பது குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. | பட்டுள்ளது. அதன் பிரகாரம், அந்த நிறுவனங்களின் கட்டுநிதி விடுவிப்பதை மட்டுப்படுத்த எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது . |
| | * | நி.பி. 518 | பல ஆண்டுகளாக முன்கொண்டுவரப்படும் 19 திறைசேரியால் அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்குகளின் ரூபா 1,353 மில்லியன் தேறிய நிலுவைகள், அந்த சம்பந்தப்பட்ட அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களை வினவி மூடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | திணைக்களத்தினால் தேவையான வழிகாட்டுதல்களையும் ஆலோசனைகளையும் வழங்க வேண்டும். | நிதிப் பிரமாணத்தின் மூலம் தேவையான வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளதுடன், அதற்கமைய உரிய செலவினத் தலைப்பால் செயல்பட வேண்டும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். | அரச கணக்குகள் திணைக்களத்தின் மூலம் உரிய அறிவுரைகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளது. |
| | * | நி.பி. 571 | 02 வருடங்களுக்கும் | தேவையான வழிகாட்டுதல்க | பொதுக் கணக்குத் திணைக் | அரச கணக்குகள் திணைக்களத்தின் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | மேலான வைப்புத்தொகைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றாலும், மாதிரி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 46 நிறுவனங்களில் உள்ள 125 வைப்பு கணக்குகளின் மொத்த மதிப்பு ரூபா 2,804.73 மில்லியன் வைப்புகள் கணக்குகளில் 02 வருடங்கள் முதல் 05 வருடங்களுக்கு மேற்பட்டகாலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்தது. | ளையும் ஆலோசனைகளையும் திணைக்களம் வழங்க வேண்டும். | களத்திற்கு அனுப்பப்பட்ட வருடாந்த ஒப்பீட்டு அறிக்கைகள் மற்றும் நேர பகுப்பாய்வு அறிக்கைகளின் படி, மீதியானது 02 வருடங்களுக்கும் மேற்பட்ட மீதிகள் தொடர்பில் நி.பி. 571 இன் படி செயல்பட சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | மூலம் உரிய அறிவுரைகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளது . |

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்** | **நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடைமுறைகள்** | **அது தொடர்பிலான தற்போதைய நிலைமை** |
|---|---|---|---|---|
| (கே) | 2020 திசெம்பர் 31 ஆம் திகதிய நிலவரப்படி, எரிபொருள் விலை உறுதிப்படுத்தல் நிதியத்தினால் ரூபா 26,673.20 மில்லியன் செலுத்த வேண்டியிருந்தது. அந்த பெறுமதிக்குரிய திறைசேரி உண்டியல்களின் முகமதிப்பு ரூபா 29,200.75 மில்லியன் ஆகும். அதன்படி, தொடர்புடைய | திரண்ட நிதியத்திற்கு செலவுச் சுமையை கொடுக்காத வகையில் செயல்பட வேண்டும். | எதிர்காலத்தில், அமைச்சரவை தீர்மானங்கள் எடுக்கப்பட்ட பின்னர், அதற்கான பொறுப்புகள் திறைசேரியின் பொறுப்பாக இருக்கும் என்பதுடன், அதன்பின் 100% சம்பந்தப்பட்ட பொறுப்புகள் தீர்க்கப்படும். | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும், உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | திறைசேரி உண்டியல்களின் கழிவு மதிப்பு ரூபா 2,527.55 மில்லியன் வித்தியாசமானது, இந்த செயல்முறை தொடர்பாக திரண்ட நிதியத்திற்கு செலவுச் சுமையாக இருந்தது. | | | |
| (கை) | 2014 ஜுலை 23 ஆந் திகதிய 2/2014 ஆம் இலக்க மற்றும் தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கைகளின்படி, கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் பதிவு உரிமைகள் 5 ஆண்டுகளுக்குப் பிறகு தனிப்பட்ட பெயருக்கு மாற்றப்படும், அந்த நேரத்தில் மோட்டார் சைக்கிள்களை விற்பனை செய்வதற்கு அல்லது அந்நியப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதிலும், 2020 ஆம் ஆண்டளவில், 05 வருட காலம் நிறைவடையும் ரூபா 17,410 மில்லியன் பெறுமதியான மோட்டார் சைக்கிள்களின் சட்டப்பூர்வ உரிமை அந்த உத்தியோகத்தர்களுக்கு மாற்றப்படவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின்படி செயல்பட வேண்டும். | தேசிய வரவு செலவுத திட்ட திணைக்களத்துடன் கலந்தாலோசித்து மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | இது தொடர்பில் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் BD/GPS/130/9/14/MC-8 ஆம் இலக்க மற்றும் 2019.11.22 ஆந் திகதிய பொது மதியுரைக் கோவையின் பிரகாரம் அறிவுரை வழங்கப்பட்டிருந்ததுடன், பணிகளை துரிதமாக மேற்கொள்ள நிறுவனத்தின் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (கொ) | 2010 திசெம்பர் 07 ஆம் திகதி தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 150 இன் படி, ஏனைய அரச நிறுவனங்களின் சார்பாக நிதி குத்தகையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட மொத்தத் தொகை ரூபா 3,099 மில்லியன் வாகனங்கள் குத்தகைக் காலம் நிறைவடைந்திருந்த போதிலும், அவற்றை உரிய நிறுவனங்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின்படி செயல்பட வேண்டும். | தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்துடன் கலந்தாலோசித்து மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனங்களை சுவீகரிக்கும் பணிகள் இறுதிக் கட்டத்தில் காணப்படுகின்றது. |
| (கோ) | 2005 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட கணக்கு படிவத்திற்கு ஏற்ப நிதிக்கூற்றுகளை தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டு, 2018 ஆம் ஆண்டிற்கான 254 வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பிரகாரம் 10 ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படும் தற்போதைய மேம்படுத்தப்பட்ட பண அடிப்படை முறையிலிருந்து அட்டுறு அடிப்படைக் கணக்கியல் முறையின் கீழ் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. இருந்தது. அமைச்சரவையின் ஒப்புதலுக்காக (Road | வரவு செலவுத் திட்ட பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டும். | எதிர்காலத்தில் ஒப்புதல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தச் செயல்பாட்டில் இதுவரை எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன், மேலும் இந்த ஆண்டின் இறுதியில் அதற்கேற்ப முன்னேற்றத்தைப் அறிக்கையிட குறித்து வைத்துக்கொள்கின்றேன். | அரச கணக்குகளை அட்டுறு அடிப்படையில் மாற்றும் நடைமுறை தொடர்பில் கொள்கை ரீதியான தீர்மானமொன்றினை மேற்கொண்டதன் பின்னர், திருத்தப்பட்ட வீதித் திட்டத்துடன் செயன்முன்னேற்றத்தை அறிக்கையிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | Map) சமர்ப்பிக்கப்பட்ட சாலை வரைபடத்தில் உள்ளடங்கிய பணிகளுக்கான காலச் சட்டகத்தை அரச கணக்குத் திணைக்களம் திருத்தியமைத்திருந்த போதிலும், அதற்கு முறையான அங்கீகாரம் வழங்கப்படவில்லை. மேலும், அமைச்சரவைப் பத்திரத்தின்படி, ஒவ்வொரு ஆண்டும் முடிவடைந்து ஒரு மாதத்திற்குப் பிறகு, சம்பந்தப்பட்ட செயல்முறைகளின் முன்னேற்றம் அமைச்சரவைக்கு அறிவிக்கப்பட வேண்டும், ஆனால் 2021 நவம்பர் 05 ஆந் திகதி வரையிலும் அத்தகைய முன்னேற்றம் எதுவும் அறிக்கையிடப் பட்டிருக்கவில்லை. | | | |
| (கௌ) | அரசாங்க நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கம் நிதி செயலாற்றல் அறிக்கை மற்றும் நிதி நிலைமைக்கூற்று ஆகியவற்றுக்கு இடையே நேரடி தொடர்பு காணப்படவில்லை. அதாவது, நிதி செயலாற்றல் அறிக்கையானது மீளாய்வாண்டுக்கான | முறையான கணக்கியல் சட்டகங்கள் மற்றும் கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல். | எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படும் கணக்கியல் சட்டகங்கள் மற்றும் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்குகளை தயாரிப்பதில் இந்த நிலைமை சரிசெய்யப்படும் என்று நம்பப்படுகிறது. | எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படும் கணக்கியல் கட்டமைப்பு மற்றும் கணக்கியல் கோட்பாடுகளின் படி கணக்குகளை தயாரிக்கும் போது இந்த நிலைமை சரி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வரவு செலவுத் திட்டத்துடன் தொடர்புடைய உண்மையான நிலைமையினை மட்டுமே பிரதிநிதித்துவம் செய்கின்றது. | | | |
| (ச) | நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம், மொத்த வெளிவாரிப் பொறுப்புகளின் பெறுமதியானது ரூபா 15,321,652 ஆன போதிலும், அதற்கு ஒப்பாக மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 2,671,465 மாத்திரமான காரணத்தால் மொத்த சொத்துக்களை விட மொத்த பொறுப்புகள் ரூபா 12,650,187 இனால் விஞ்சியிருந்தது. | துல்லியமான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. | பொது முயற்சிகள் உட்பட முழு அரச துறைக்குமான திரண்ட கணக்குகளைத் தயாரிக்கும் போது இந்த நிலைமை தீர்க்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. | 2021 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (சா) | நிதி நிலைமைக்கூற்றில் சட்டரீதியான மற்றும் ஏனைய நிதியங்களில் உள்ளடங்கும் தேறிய சொத்துக்கள் சீராக்கல் கணக்கின் வரவு மீதியான ரூபா 12,072,662 ஆன பெறுமதியானது மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | துல்லியமான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. | மூலதனத்திலுள்ள ஒவ்வொரு ஒதுக்கத்தினதும் / நிதியத்தின் தன்மை மற்றும் நோக்கங்கள் இதுவரை வழங்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படிவத்தில் வெளியிடப்படவில்லை. எதிர்காலத்தில் தேவையான வெளிப்படுத்தல்களை செய்ய நான் குறித்துக் கொள்கின்றேன். | 2021 ஆம் ஆண்டுக்குரிய நிதிக்கூற்றுக்களிலும் தேறிய சொத்துக்களின் சீராக்கல் கணக்கு மூலதன மமாற்றங்கள் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (சி) | நிதி நிலைமைக்கூற்றில் | முறையான | எதிர்காலத்தில் | 2021 ஆம் ஆண்டுக்குரிய |

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்ளடக்கப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாதது என வகைப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | கணக்கீட்டுச் சட்டகத்தின் மற்றும் கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ள கணக்கீட்டு சட்டகத்தின் மற்றும் கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில கணக்கீட்டினை மேம்படுத்தும் போது பொருத்தமான வகைப்பாடுகளைச் செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. | நிதிக்கூற்றுக்களில் அந்த வகைப்படுத்தல் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை . |
| (சீ) | திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்திற்கு எரிபொருள் விலை உறுதிப்பாட்டு நிதியத்திலிருந்து 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 26,673.20 மில்லியன் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட தொகை 2020 ஆம் ஆண்டின் அரச நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமைக் கூற்றில் பொறுப்புகளினுள் (மறைப் பெறுமதியாக காண்பித்து) பல்வேறு கணக்குகளின் கீழ் எரிபொருள் விலை உறுதிப்பாட்டு கணக்காக பெயரிடப்பட்டு தவறாக காண்பிக்கப்பட்டிருந்தது. | முறையான கணக்கீட்டு சட்டகத்தின் மற்றும் கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் அரச நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமை அறிக்கையில் உள்ள பல்வேறு கணக்குகளின் கீழ், எரிபொருள் விலை நிலைப்படுத்தல் கணக்கு என ரூபா 26,673,196,758 என்ற மறை பெறுமதியை காண்பிப்பது சரியானது. இந்த பரிவர்த்தனைகளை கணக்கு வைப்பதற்கான பிரதான பேரேட்டில் பேரேட்டுக் ஒரு கணக்காக எரிபொருள் விலை உறுதிப்பாட்டு நிதியம் என கணக்கொன்று 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டமையா ல், அந்த கணக்கின் மீதி 2020 ஆம் ஆண்டிற்கான அரச நிதிக்கூற்றுக்களில் இவ்வாறு காட்டப்பட்டுள்ளது. | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் எரிபொருள் விலை உறுதிப்பாட்டு நிதியத்தின் செயற்பாட்டுக் குழு கூட்டப்பட்டு பொருத்தமான நடவடிக்கையொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (சு) | 2020 மார்ச் 31 ஆந் திகதி பிரதமரால் சமர்ப்பிக்கப் பட்டுள்ள 20/0684/204/060 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம், நிதி அமைச்சின் ஆண்டறிக்கையுடன் எரிபொருள் விலை உறுதிப்பாட்டு நிதியத்தின் பொழிப்பாக்கப்பட்ட நிதி நிலைமைக்கூற்று வெளியிடப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. | அமைச்சரவையின் முடிவுகளின்படி செயல்பட வேண்டும். | நான் ஒப்புக்கொள்கிறேன். அமைச்சின் 2019 ஆண்டு அறிக்கையில் ஒரு பொழிப்பு பந்தி சேர்க்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டிற்கான இது தொடர்பான அறிக்கையைச் சேர்க்க நான் குறித்து வைத்துக்கொள்கின்றேன். | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் எரிபொருள் விலை உறுதிப்பாட்டு நிதியத்தின் செயற்பாட்டுக் குழு கூட்டப்பட்டு பொருத்தமான நடவடிக்கையொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.17 தலைப்பு 251 - மதிப்பீட்டுத் திணைக்களம்**

நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்** | **நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடைமுறைகள்** | **அது தொடர்பிலான தற்போதைய நிலைமை** |
|---|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான மதிப்பீட்டு வருமானத்தில் ரூபா 457,328,864 தொகை அல்லது 98 சதவீதம் 01 ஆண்டிலிருந்து 12 ஆண்டுகள் வரையான காலவீச்சில் நிலுவையாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | பல ஆண்டுகளாக நிலுவையாகக் காணப்படும் வருமானத்தை அறவீடு செய்வதற்காக தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் அவசியமானதாகும். | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 692,250,571 ஆன நிலுவை மதிப்பீட்டு கட்டண வருமதானத்தின் ரூபா 459,388,974 அல்லது 66 சதவீதம் 01 முதல் 13 வருட காலமான வீச்சில் நிலுவையாக முன்கொண்டுவரப்பட்டவாறு காணப்பட்டது. |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டின் போது கடந்த ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 512,531,243 தொகையான நிலுவை வருமானத்தில் ரூபா 5,110,251 தொகை அல்லது 02 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பல ஆண்டுகளாக நிலுவையாகக் காணப்படும் வருமானத்தை அறவீடு செய்வதற்காக தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் அவசியமானதாகும். | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டினுள் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளபடியான ரூபா 467,046,699 ஆன நிலுவை மதிப்பீட்டு வருமானத்தின் ரூபா 7,657,724 அல்லது 1.63 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (இ) | 2020 ஆம் ஆண்டின் போது நிலுவையான மீதிகள் தொடர்பாக கைவிடுதல்களின் முழு மொத்தம் ரூபா 50,092,129 | நிலுவையாகவுள்ள வருமானத்தை கைவிடுவதற்கு முன்னர் அறவீடு செய்வதற்காக உச்ச | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையில் கைவிடப்பட்டிருந்த நிவை வருமானம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | என்பது அவதானிக்கப்பட்டது. | அளவு முயற்சி எடுத்தல் வேண்டும். | | சேகரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் நீண்டகாலமாக அதிக அளவான வருமானம் நிலுவையாகக் காணப்பட்ட நிறுவனமாக நகர அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகிய நிறுவனங்களிடமிருந்து ரூபா 185,877,099 மொத்த தொகை அறவிட வேண்டிக் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. அந்த நிலுவைக் கால வீச்சு 2008 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையில் முன்கொணடுவரப்பட்டவாறு காணப்பட்டது. | இந்த நிறுவனங்களுடன் கலந்துரையாடி நிலுவை வருமானங்களை தாமதமின்றி அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்தல் அவசியமானதாகும். | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் நகர அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி போன்ற நிறுவனங்களிலிருந்து ரூபா 252,075,609 கூட்டுத்தொகையான வருமானம் 2008 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலுமான கால வீச்சில் நிலுவையாக முன்கொண்டுவரப்பட்டவாறு காணப்பட்டது. |
| (உ) | மத்திய கொழும்பு மாகாண மதிப்பீட்டு அலுவலகத்தின் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் நிலுவையாகக் காணப்பட்ட வருமானம் ரூபா 268,108,023 ஆக இருந்ததுடன் அது 2020 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட மொத்த நிலுவை வருமானத்தில் 58 சதவீதம் என்பது | நிலுவை வருமானங்களைத் தாமதமின்றி அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்தல் அவசியமானதாகும். | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளபடியாக நிலுவையாக உள்ள வருமானம் ரூபா 478,092,636 ஆக காணப்பட்டதுடன், அது 2021 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளபடியாக மொத்த நிலுவை வருமானத்தின் 69 சதவீதமாக காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. | | | |
| (ஊ) | 2020 ஆம் ஆண்டின் போது போது 08 மீண்டுவரும் செலவு விடயங்களுக்காகவும் 04 மூலதன செலவு விடயங்களுக்காகவும் ரூபா 33.4 மில்லியன் மற்றும் ரூபா 20.44 மில்லியன் மிகை நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் முறையே ரூபா 10.96 மில்லியன் மற்றும் ரூபா 4.7 மில்லியன் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அச்சேமிப்பானது வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 11 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சுடையதாக இருந்தது. | வருடாந்த மதிப்பீட்டினை முடியுமான அளவில் சரியாகவும் நடைமுறைச் சாத்திய மானதாகவும் தயாரித்தல் வேண்டும். | கொவிட் 19 நோய் பரவலின் காரணமாக 2020 மார்ச் மாதத்திலிருந்து ஊரடங்குச் சட்டம் விதிக்கப்பட்டு நாடு மூடப்பட்டிருந்ததன் காரணமாக திட்டமிட்டவாறு செலவு செய்ய முடியாதிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போது 15 மீண்டெழும் செலவின விடயங்களுக்காகவும் 05 மூலதன செலவின விடயங்களுக்காகவும் மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (எ) | திணைக்கள ஏடுகளின் பிரகாரம் மற்றும் திறைசேரி கணனி அச்சுப் பிரதிகளின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் அறவிட வேண்டிய மீதி ரூபா 91,234,063.83 ஆக இருந்த போதிலும் தனித்தனி மீதிகளை வகைப்படுத்தல் பொழிப்பின் பிரகாரம் அறவிட வேண்டிய மீதி ரூபா 91,165,205.83 ஆகும். அதற்கிணங்க ரூபா 71,024 வித்தியாசம் | அரசாங்க நிதித் திணைக்களத் தினால் வழங்கப்பட்ட 01 ஆம் இலக்க வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளிலும் திறைசேரியின் கணினி அச்சீட்டுக் குறிப்புகள் மற்றும் திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம், ரூபா 71,024 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன், அவற்றை இனங்கண்டு தீர்ப்பனவு செய்வதற்கு 2021 ஆம் ஆண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டதுடன் அவற்றினை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அந்த வேறுபாட்டினை இனங்கண்டு, திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.. |
| (ஏ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிட வேண்டிய 05 ஆண்டுகளிலிருந்து 08 ஆண்டுகள் வரையான கால வீச்சுடைய ரூபா 308,614 கூட்டுமொத்தமான 03 கடன் மீதிகள் அறவிடப்படாது காணப்பட்டன. | அரசாங்க நிதித் திணைக்களத் தினால் வழங்கப்பட்ட 01 ஆம் இலக்க வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்பாடுகள் நிறைவேற்றப்படாத 9,528 பொதுக் கோவைகளும் வீதவரி தொடர்பான 3,182 கோவைகளும் எஞ்சியிருந்தன. | திட்டமிட்டவாறு செயற்பாடுகளை நிறைவேற்றல் அவசியமானதாகும். | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | மாகாண அலுவலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் தகவல் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஒ) | 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் அங்கீகரித்த பதவியணியில் 49 சதவீதம் அதாவது 540 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | 2021 திசெம்பர் 01 ஆந் திகதியளவில் அங்கீகரித்த பதவியணியின் 46 சதவீதம் அல்லது 512 வெற்றிடங்கள் நிலவின. |

## 3.18 தலைப்பு 252 -தொகை மதிப்பு மற்றும் புள்ளிவபரவியல் திணைக்களம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்** | **நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடைமுறைகள்** | **அது தொடர்பிலான தற்போதைய நிலைமை** |
|---|---|---|---|---|
| (அ) | 2017 மே 04 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் மொத்தம் ரூபா 9,324,361 ஆன புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் பதிவேடுகளுக்காக 2020 திசெம்பர் 31 வரையில் பொருட் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் மதிப்பாய்வொன்று மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1991 இலிருந்து 2017 வருடம் வரையிலான காலப்பகுதியல் சேவையிலிருந்து விலகிச் சென்ற 12 உத்தியோகத்தர்களின் மொத்தம் ரூபா 553,207 ஆன கடன் மிகுதிகளை மீளாய்வாண்டின் இறுதி வரையில் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை | அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இல 01 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வசிப்பிட நிலையங்களைக்கண்டு பிடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் மற்றும் சட்டமா அதிபரினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 11 உத்தியோகத்தர்களின் ரூபா 524,261 ஆன கடன் மீதி நிலுவையாக காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எடுக்கப்படவில்லை. | | | |
| (இ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மரணித்த 04 அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மிகுதிகளின் கூட்டுத்தொகை மொத்தம் ரூபா 165,450 ஆகும். | அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 01 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா 92,750 ஆன கடன் மிகுதி தொடர்பாக மரணப் பணிக்கொடை தயாரித்தல் தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், ரூபா 65,000 ஆன கடன் மிகுதியை அறவிடுவதற்காக மரணப் பணிக்கொடையின் குறைபாடுகள் திருத்தப்பட்டு 2020 யூன் 17 ஆந் திகதி ஓய்வூதியத் திணைக்களத்திற்கு குறித்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மரணமடைந்த 02 உத்தியோகர்தர்களிடமிருந்து ரூபா 158,650 கூட்டுத்தொகையான நிலுவைக் கடன் மீதி காணப்பட்டது. |
| (ஈ) | சரியான நேரத்தில் பிழையற்ற தரவுகளை வழங்குவதன் மூலம் மிகவும் பயனுள்ளதாக சமூகப் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல் திணைக்களத்தின் நோக்கமாகும். எனினும் திணைக்களத்தின் தரவுகள் வெளியிடப்பட்ட திகதி இலக்குகளின் பிரகாரம் தரவுகள் வெளியிடப்படுவதற்கு குறிப்பிடப்பட்டுள்ள | குறிப்பிட்ட திகதிக்குள் தரவுகள் வெளியிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | 2022 ஏப்ரல் 06 ஆந் திகதி வரையிலும் தெவுகளை வெளியிடும் கால அட்டவணையின் பிரகாரம், 137 சந்தர்ப்பங்களில் குறித்த திகதியிலிருந்து ஒரு மாதம் முதல் ஒரு வருடம் வரையான கால தாமதத்தின் பின்னர் தரவுகள் வெளியிடப்பட்டிருந்தன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தினங்களை விட 01 மாதத்திலிருந்து 11 மாதங்கள் வரையிலான கால வீச்சானது தாமதமாகி தரவுகள் வெளியிடப்பட்டிருந்த 45 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | | | |
| (உ) | வெளிநாட்டு உதவிச் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 130.16 மில்லியனுக்கான 06 செயற்திட்டங்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன் அச் செயற்திட்டங்கள் 2018 சனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2020 ஆம் வருடத்தில் முடிவடைவதற்கு திட்டமிடப்பட்டிருந்தன. எனினும், அச் செயற்திட்டங்களில் எதுவும் 2020 ஆம் வருடத்தில் முடிவடைவதற்கு இயலாமை காணப்பட்டது. | திணைக்களத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படல் வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | 2022 மார்ச் மாதம் வரையிலும் 03 செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன், 03 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2020 ஆம் ஆண்டின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 33 சதவீதமான அதாவது 619 வெற்றிடங்கள் காணப்பட்டன. இரண்டாம் நிலை அடிப்படையில் இத் திணைக்களத்தினால் விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 03 ஆகும். | திணைக்களத்திற்குத் தேவையான பதவிணயி சரியாக மதிப்பிடப்பட்டு மதிப்பீடுகளில் உள்ளடக்கப்படல் வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | 2022 மார்ச் 15 ஆந் திகதியளவில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 21.5 சதவீதம் அல்லது 402 வெற்றிடங்கள் நிலவின. அத்திகதியளவில் இரட்டை அடிப்படையில் விடுவிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை மூன்று ஆகும். |
| (எ) | திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் | கருத்துரை வழங்கப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டின் இறுதியில், 2018 முதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | மனிதவள அபிவிருத்தி திட்டம் 2018 சனவரி 24 ஆந் திகதிய மற்றும் 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் நோக்கம் 02 இன் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தகவல்கள் உள்ளடக்கப்பட்டு தயாரிக்கப்படல் வேண்டும். | | 2022 வரையிலான மனிதவள மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்படவில்லை. |
| (ஏ) | 2020 ஆம் ஆண்டில் 07 மீண்டெழும் செலவு விடயங்கள் மற்றும் 09 மூலதனச் செலவு விடயங்களுக்காக மொத்தம் ரூபா 394.87 மில்லியன் மேலதிக ஒதுக்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தமையால் அந்த ஒதுக்கங்கள் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் ரூபா 218.51 மில்லியன் ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தன. அச் சேமிப்பு ஏற்படுத்தப்பட்டிருந்த தேறிய ஒதுக்கங்களில் நூற்றுக்கு 20 இலிருந்து நூற்றுக்கு 70.42 வீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் நடைமுறைக்கு சாத்தியமாதாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியமை. | சுற்றறிக்கை எல்லைகளுக்கு இணங்கியமை, கட்டிட திணைக்களத்தின் மதிப்பீட்டைப் பெறுவது தாமதமாகியமை, கட்டு நிதி கிடைக்காமை, ஒதுக்கங்கள் வருட இறுதியில் பெறப்பட்டமை போன்ற விடயங்கள் இதற்குக் காரணமாகும். | 2021 ஆம் ஆண்டின் போது 19 விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டின் 30 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. |
| (ஐ) | திணைக்களத்தின் நான்கு உத்தியோகத்தர்கள் கல்வி நடவடிக்கைகளுக்காக அத்துடன் வேலை வாய்ப்புக்களுக்காக வெளிநாடு சென்றிருந்த போதிலும் அவர்களுக்கான கால எல்லை முடிவுற்ற | அரசிற்கு அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | 2022 மார்ச் மாதம் வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | போதிலும் மீண்டும் சேவைக்குச் சமூகமளிக்கவில்லை. அவர்களிடமிருந்து அரசிற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 1,126,133 ஆனது 03 வருடங்களிலிருந்து 13 வருடங்கள் வரையான காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒரு உத்தியோகத்தர் கல்வி விடுமுறைக்காக வெளிநாடு சென்றிருந்த போதிலும், ஒப்பந்தம் செய்து கொள்ளவில்லை. | | | |

## 3.19 தலைப்பு 280 – கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியற்ற அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்** | **நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடைமுறைகள்** | **அது தொடர்பிலான தற்போதைய நிலைமை** |
|---|---|---|---|---|
